# எங்கே எனது கவிதை?



ராஜசியாமளா பிரகாஷ்

# எங்கே எனது கவிதை?



## அத்தியாயம் -1

எலக்ட்ரிக் டிரெய்ன் வந்த அசதி தீர பெருமூச்சு விட்டு நிலையத்தில் நின்றது. கும்பலிலிருந்து உதிர்ந்தான் சேகர். கும்பல், காரணமாய் உடல் வியர்வையில் நசநசத்தது. கைக்குட்டையால் முகத்தை ஒற்றிக் கொண்டு கசங்கிய சட்டையை இழுத்து விட்டுக் கொண்டான். ஒரு டீ சூடாய் குடித்தால் நன்றாக இருக்கும் என்று தோன்றியது. மணி பார்த்தான் ஐயோ, இன்னும் ஐந்தே நிமிடத்தில் அலுவலகத்தில் இருக்க வேண்டும். டீயாவது மற்றொன்றாவது. அலுவலகத்தில் பதினொரு மணிக்கு டீ என்ற பெயரில் சூடாய் வரும் கலர் தண்ணீரே போதும் என்று வேகமாய் அலுவலகம் நோக்கி நடந்தான்.

அலுவலகம் ரயில் நிலையத்திலிருந்து நாலு தெரு தள்ளி இருந்தது. வழக்கமான ரயில் பயணம், வழக்கமான நடை தான் என்றாலும் இன்று ஏனோ சேகருக்கு மனம் சலித்தது. போதாத குறைக்கு, இவன் அலுவலகத்தை நெருங்கும் போது இவன் கீழ் வேலை செய்யும் ஆறுமுகம் ஜம்மென்று மொபெட்டில் வந்து இறங்கினான். இவனைப் பார்த்தவுடன் சிரித்தபடி, "குட்மார்னிங், சார்" என்றான். வண்டியைப் பூட்டி விட்டு புத்துணர்வோடு உள்ளே நுழைந்த ஆறுமுகத்தை லேசான பொறாமையோடு பார்த்தான் சேகர். அவன் சிரிப்பில் சற்றே கேலி இருந்ததோ என்று கூட தோன்றியது. 'இவன் கெட்ட கேடு வண்டி வைத்திருக்கிறான். தன்னால் வாங்க முடியவில்லையே. இந்த முறையாவது எப்படியாவது அம்மாவை சம்மதிக்க வைத்து தவணை முறையில் ஒரு வண்டி வாங்கிவிட வேண்டும். முடியுமா? அம்மா சம்மதிப்பாளா?

ஆறாயிரம் சம்பளம் வாங்கும் தனக்கு இதைக் கூட கேட்கும் உரிமை கிடையாதா? ஆனால் அம்மா என்ன வேண்டுமென்றேவா பிடிவாதம் பிடித்து மறுக்கப் போகிறாள்? பெருமூச்சு தான் விட முடிந்தது அவனால்.

அப்பா இல்லாத குடும்பம். வீட்டு நிர்வாகம் எப்போதுமே அம்மா கயிலோ தான். அப்பா இருந்த வரை வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி அம்மா எப்படியோ ஒரு வீட்டைக் கட்டி விட்டாள். அவர் போன பிறகு மூன்று குழந்தைகளை வளர்க்க அந்த வீட்டு வாடகைப் பணம் தான் அவளுக்குப் பெரிதும் உதவியது.

சேகர் பிளஸ் டூ படிக்கும் போது அம்மா ஆயிரம் கனவு கண்டாள்.

"சேகரா நீதான்ப்பா மூத்த பிள்ளை. உன் தங்கைகள் ரெண்டு பேர் வாழ்க்கை கனமும் உன் தோள்ல தான் விழுந்திருக்கு. நல்லாப் படி. நல்ல மார்க் வாங்கு. டாக்டர் இன்ஜினியர்னு எது வேணும்னாலும் படி..."

அவன் கடகடவென்று சிரித்தான்.

**ராஜசியாமளா**

"அம்மா அந்த படிப்புக்கெல்லாம் என்ன செலவாகும் தெரியுமா?"

"நல்ல மார்க் வாங்கினா மெரிட்ல சீட் கிடைக்கும் கண்ணா. மேல் செலவுக்கு என் நகை, ஊர்ல இருக்கற கொஞ்ச நிலம் எல்லாத்தையும் வித்து பணம் புரட்டிக்கலாம். நீ நல்லா சம்பாதிக்க ஆரம்பிச்சா, உன் தங்கைகள் கல்யாணம் ஜாம் ஜாம்னு நடக்காதா?"

தாயின் கண்களில் ஏராளமான கனவுகளைக் கண்டான். தன் தோளில் அழுந்தும் பொறுப்பு என்ற பாரம் பயத்தைக் கொடுத்தது. வயதுக்கே உரிய நட்பு வட்டமும் உல்லாசமும் வேறு கவனத்தை திருப்பியது. பொறுப்பு நினைவுக்கு வர வர மனதில் பயம் அதிகரித்தது. பயம் அதிகரிக்க அதிகரிக்க சிந்தனை மாற்றம் தேடியது. நண்பர்களுடன் கேளிக்கை உல்லாசம் என்று பொழுது போக்குவது பயத்தைக் குறைப்பதாய் மாயம் செய்தது. பலன்? பயம் குறைந்ததோ இல்லையோ மார்க் குறைந்தது.

அம்மா குலைந்து போனாள்.

"காமர்ஸ் எடுத்திருந்தா பி.காம். சேர்ந்து ஒரு பேங்க் வேலைக்காவது முயற்சி செஞ்சிருக்கலாம். இப்பா..."

டொனேஷன் கொடுத்து வெய்ட்டிங் லிஸ்ட்டில் காத்திருந்து கடைசியில் பி.எஸ்சி. பாட்டனியில் சேர்ந்தான். படித்து முடித்து இரண்டு வருடங்கள் வேலை இல்லாமல் சுற்றினான். கடைசியில் இந்த தனியார் நிறுவனத்தில் ஆயிரம் ரூபாய் சம்பளத்தில் சேர்ந்தான். ஹூக்கஸ் ஆஸ்பரா, சொலேனேஸி, ஹெர்பேரியம் என்றெல்லாம் படித்ததற்குத் துளியும் சம்பந்தமில்லாமல் பெரிய பெரிய லெட்ஜர்களில் தொலைந்து போனான்.

தத்திக் கொத்தி ஏழு வருடங்களில் ஆறாயிரம் சம்பள உயர்வு. பிடித்தம் போக நாலாயிரத்து ஐநூறு... வீட்டில் நாலு ஜீவன்கள் தாராளமாய் உண்ண, உடுக்க இவன் பணம் வாடகைப் பணத்தோடு பெருதவியாய் இருந்தது. ஆனால் இரண்டு தங்கைகளின் படிப்பு, கல்யாணம் என்றெல்லாம் இருக்கிறதே!

சும்மா சொல்லக் கூடாது. சேகரின் தங்கைகள் படிப்பில் படு சுட்டியாய் இருந்தார்கள். பெரிய தங்கை உஷா பிளஸ் டூவில் தொண்ணூற்றெட்டு சதவிகித மதிப்பெண் பெற்றாள். கல்லூரிகள் அவளை வெற்றிலை பாக்கு வைத்து அழைத்தன. எம்.ஸி.ஏ. முடித்து விட்டு இன்று ஒரு நிறுவனத்தில் அதிகாரியாய் முப்பதாயிரம் சம்பாதித்துக் கொண்டிருக்கிறாள். இவனை விட நாலு வயது சிறியவள்!

சின்ன தங்கை ஆஷா டாக்டருக்குப் படித்துக் கொண்டிருக்கிறாள். மெரிட்டில் சீட் கிடைத்தாலும் ஊரிலிருந்த நிலத்தை விற்று அம்மா மேல் செலவை சமாளித்து விட்டாள். அமெரிக்கா போய் மேல் படிப்பு படிக்க இப்போதே கடினமாய் உழைக்கிறாள், ஆஷா.

தங்கைகள் தலை எடுக்க எடுக்க, சேகரால் தலை நிமிர முடியாமல் போனது. ஆரம்பத்தில் அவன் மட்டும் ஆண்மகனாய் சம்பாதித்ததை வீட்டில் பெருமையாய் நீட்டினான். அப்போது உஷாவும் மாணவி தான். ஒரு பாடப் புத்தகம் வேண்டும் என்றாலும் அம்மா, "அவன் கிட்ட ஒரு வார்த்தை சொல்லேண்டி" என்பாள்.

சேகரும், "அவங்க எது கேட்டாலும் வாங்கிக் கொடேன்மா. என்னை என்ன கேட்கறது?" என்பான்.

ஆசைகள் ஆயிரம் இருந்தாலும் ஆடம்பரத்தை அறியாத மனம் ஆர்ப்பரிக்காமல் அடங்கி இருந்த காலம். எளிமையான வீடு, சின்ன சம்பாத்தியம். அன்பால் பிணைக்கப்பட்ட உள்ளங்கள். நிறைவாக இருந்தது.

உஷாவிற்கு வேலை கிடைத்த போது தான் சேகருக்கு மனதில் முதல் அடி விழுந்தது. அப்போது அவன் மூவாயிரம் வாங்கிக் கொண்டிருந்தான். அந்த சனிக்கிழமை அவன் மனதில் இன்னும் ஆழமாய்ப் பதிந்திருக்கிறதே... நேர்முக தேர்வுக்கு அவள் போயிருந்தாள். அன்று அவன் நல்ல தலைவலி என்று அலுவலகம் போகாமல் படுத்திருந்தான். அம்மா நல்ல மிளகு ரசமும், பருப்புத் துவையலுமாய் சமைத்து அவனை சாப்பிட அழைத்துக் கொண்டிருந்தாள். கை கழுவி சாப்பிட சாதத்தை பிசைந்த பொழுது தான் புயலாய் உஷா உள்ளே நுழைந்தாள்.

மகிழ்ச்சியும் துள்ளலும் ஆரவாரமுமாய் அப்படியே வந்து அம்மாவைக் கட்டிப் பிடித்து சுற்றியவள் அண்ணனின் அருகே தொப்பென்று அமர்ந்து கொண்டு மூச்சு வாங்கினாள்.

"அம்மா, அண்ணா, எனக்கு வேலை கிடைச்சாச்சு."

சந்தோஷத்தில் சேகருக்கு புரை ஏறியது. அவன் தலையைத் தட்டி தண்ணீரை நீட்டியவள் ஆவலாய் கேட்டாள், "சம்பளம் எடுத்த எடுப்பிலே எவ்வளவு சொல்லு பார்ப்போம்."



எம்.ஸி.ஏ. படிப்பு... மனதில் கணக்குப் போட்டவன், "என்ன அஞ்சாயிரம் இருக்குமா?"

"ம்ஹூம்.. எடுத்த எடுப்புல பதினைஞ்சாயிரம் ப்ளஸ் கார் வந்து என்னைக் கூட்டிப் போய் கொண்டு விடும். தேவைப்பட்டா கம்பெனியே எனக்கு வீடும் கொடுக்கும்."

இந்த முறை எடுத்த கவளம் உள்ளே இறங்க வில்லை அவனுக்கு. அதிலிருந்தே வீட்டில் மடமடவென்ற மாற்றங்கள். ஒரு டேபிள் பேன் வாங்க வேண்டுமென்றாலே இரண்டு மாதங்கள் யோசித்து, மளிகை காய்கறியைக் குறைத்து அந்தப் பணத்தை சேர்த்து ஒரு கடைக்கு நாலு கடை ஏறி வாங்கிய நிலை ஏதோ மாயாஜாலம் போல் மாறியது.

இரண்டே மாதங்களில் போர்டபிள் பிளாக் அண்ட் ஒயிட் டி.வி., கலர் டி.வி.யாய் இருபத்தைந்து இன்ச்சில் சிரித்தது. பிரிட்ஜ், வாஷிங் மிஷின், கிரைண்டர், ஏஸி என்று அதுவரை கனவாய் இருந்தவை வீட்டில் நிறைவாய் வந்து இறங்கின.

"நைட்டி பழசாப் போச்சண்ணா. இந்த மாதம் ஒண்ணே ஒண்ணு வாங்கிக்கிட்டா?" என்று இவனைச் சுற்றி அடிபோட்ட தங்கை ஆஷா குட்டி கூட, "உனக்கு சிரமம் வேண்டாம்னு உஷா கிட்ட கேட்டு இந்த தடவை இந்த நைட்டியெல்லாம் வாங்கினேன். ரெண்டு சுரிதாரும் நான் கேட்காமலேயே எடுத்துக் கொடுத்தா. ஒரு சுரிதார் விலை என்ன தெரியுமா? ரெண்டாயிரத்தைம்பது" என்று குதூகலித்தாள்.

"உனக்கும் ரெண்டு ஷர்ட் எடுத்தேன் அண்ணா, வேன் ஹூசேன், பீட்டர் இங்க்லேண்ட்னு நீயும் என்னிக்கு உசத்தியா போட்டிருக்கே?"

அன்பான அனுசரணையான வார்த்தைகள் தான். ஆனால், அவனை அவை குத்தி ரணப்படுத்தின.

'குழந்தைகள் பாவம்! அனுபவிக்கட்டும்' என்று அம்மா முதல் நான்கு மாதம் விட்டுப் பிடித்தாள். பின், லகானை இழுத்து விட்டாள்.

"அம்மா, இதுவரை நான் எண்ணி எண்ணி நீ செலவு செஞ்சு சிரமப்பட வேண்டியிருந்தது. இனி என்னம்மா? நல்லா தாராளமாய் நாலு லிட்டர் பால் வாங்கு. கிலோ கிலோவா அரிசி பருப்பு வாங்கு. கிலோ கிலோவா காய் பழம்னு வாங்கு.."

அம்மா கையை நிறுத்து என்பது போல் காட்டினாள். "இங்க பாரு உஷா, இதே சம்பாத்யத்தை உன் அண்ணன் கொண்டு வந்து என் கையில கொடுத்து இப்படி சொன்னா, நான் சந்தோஷமா செலவு செய்யலாம். ஆனா, உன் சம்பாத்யத்துல அது சரி வராதும்மா."

"ஏம்மா?"

"நீ பொண்ணும்மா. இன்னொருத்தர் வீட்டுக்குப் போக போறவ. உன் தங்கையும் அப்படித்தான்."

"அதனால என்னம்மா?"

"உங்க சம்பாத்யம் எங்களுக்கு நிலையானது இல்லைம்மா. இப்ப பாலும் பாதாமுமா சாப்பிட்டு, உங்க கல்யாணத்துக்குப் பிறகு திரும்ப பழையபடிக்கு மனசு மாறணும்னா, அது கஷ்டமில்லையா? மேலும் உங்க கல்யாண செலவுக்குப் பணம் வேண்டாமா? உங்க அண்ணன் சம்பாத்யத்துல வாங்கும் வயத்துக்குமே சரியாயிடும். கல்யாணத்துக்கு நாலு நகை நட்டுனு சேர்க்க வேண்டாமா?"

அம்மா மிக யதார்த்தமாய் பேசியது மிக அதிகமாய் அவனைப் பாதித்தது. உண்மை சுட்டாலும் தாங்கித் தானே ஆக வேண்டும். அம்மா அப்படியே உஷாவின் பணத்தில் கல்லு கல்லாய் நகை செய்தாள். அவன் மனம் கல்லாய் கனத்துப் போனது. ஆனால் அவன் பணத்தில் தான் வீட்டை நிர்வகித்தாள்.

தனக்கு கேட்ராக்ட் ஆபரேஷன் செய்ய வேண்டிய நிலை வந்த போதும், மகனிடம் தான் வந்து கேட்டாள், அம்மா.

சேகரால் உடனே சரி என்று சொல்ல முடியவில்லை.

"கொஞ்சம் பொறும்மா. லோன் அப்ளை பண்ணறேன்" என்றான்.

உஷா காதில் எப்படியோ விஷயம் எட்டிவிட்டது.

"அம்மா, உன் ஆபரேஷனுக்குக் கூட நான் பணம் கொடுக்கக் கூடாதுனு அப்படி என்னம்மா உனக்கு வைராக்யம்? அண்ணனை பத்து மாசம் சுமந்து பெத்த மாதிரி தானே என்னையும் கஷ்டப்பட்டு பத்து மாசம் சுமந்து பெத்தே? காலம் மாறுதும்மா. பெண்களுக்கு சொத்துல உரிமை உண்டுன்னா சில கடமைகளும் உண்டு இல்லையா?"

மறுநாளே லேசர் ஆபரேஷனை குறித்து, நல்ல படி முடித்து ஒரே மாதத்தில் அம்மாவைத் தேற்றி விட்டாள் உஷா. இயலாமையில் குன்றிப் போனான் சேகர். அம்மா பேச்சையும்

மீறி விட்டையும் புதுப்பித்து விட்டான். இதோ, இரண்டு மாதங்களாய் அவன் சம்பளம் வேறு இரு மடங்காய் உயர்ந்து விட்டது.

அவனோ எண்ணிச் சுட்ட பணியாரமாய் சம்பளம் பெற்று, ஒரு இரு சக்கர வாகனத்தை கொண்டு ஹாண்டாய் வாங்கக் கூட யோசித்துக் கொண்டு... சே, என்னடா வாழ்க்கை என்ற சலிப்பு இன்று அவனை ரொம்பவே பாதித்தது. அதே ஆயாசத்துடன் அட்டெண்டன்ஸில் கையெழுத்திட்ட போது தான் அகஸ்மாத்தாய் தேதியை கவனித்தான்.

'அட, எப்படி மறந்தேன். சுதாவின் பிறந்த நாளாயிற்றே. மாலை கோயிலில் காத்திருப்பாளே.'

எதோ பிளாட்டிங் பேப்பரில் யாரோ ஒற்றி எடுத்தது போல் அவன் ஆயாசமெல்லாம் நிமிடத்தில் மறைந்து ஒரு புத்துணர்வு உடல் முழுதும் சல்லென்று எறியது.

மணி எப்போது ஆறாகும் என்று மணி பார்க்கத் துவங்கி விட்டான், சேகர்.

2



மதியம் லஞ்ச் ஹவரில் அம்மா கட்டிக் கொடுத்த தேங்காய் சாதத்தை சாப்பிடும் போது தான் சுதாவின் பிறந்த நாளுக்குப் பரிசொன்றும் வாங்கவில்லை என்ற நினைவு வந்தது. அவசரமாய் சாப்பிட்டு டப்பாவை மூடியவன் பர்ஸை திறந்து பார்த்தான். பர்ஸ் 'மாதக் கடைசியடா' என்று வெறும் வாயைக் காட்டிச் சிரித்தது.

மீண்டும் மனதில் ஆயாசம் எழுந்தது. காதலிக்கு நூறு ரூபாயில் கூட பரிசு வாங்க முடியாமல், இதென்னடா வாழ்க்கை. அடுத்த டேபிள் ரவியிடம் போய் கடனாய் நூறு ரூபாய் வாங்கி பாக்கெட்டில் பத்திரப்படுத்தி கொண்டான்.

லெட்ஜரை பிரித்து வைத்துக் கொண்டான். கவனம் அதில் பதியாமல் அடம் பிடித்தது. சுதாவின் அழகு முகம் குண்டு குண்டு எண்களை மறைத்துக் கொண்டு ஓவியமாய் புத்தகத்தில் விரிந்தது.

இதே அலுவலகத்தில் தான் முதன்முதலாக அவளை சந்தித்தான். சுதாவின் பக்கத்து வீட்டு சரகவின் கணவன் இங்கே தான் வேலை பார்த்தான். அவனின் திடீர் மரணத்துக்குப் பின் செட்டில்மெண்ட் விஷயமாய் வந்த சரகவோடு துணைக்கு வந்தாள் சுதா. இரண்டு பெண்களும் விழித்துக் கொண்டு பயத்தோடு சோகத்தோடு நின்று கொண்டிருக்க, சேகர் தான் வலியப் போய் உதவினான். அவனின் இந்தச் செயலே அவளுக்கு அவன் மேல் ஒரு ஈர்ப்பை ஏற்படுத்தியது. பண விஷயமாய் சரக வந்த ஒவ்வொரு முறையும் பேச்சுவார்த்தை அதிகரித்தது. நட்பாய் மலர்ந்தது. காதலாய் விரிந்தது. சரக வீட்டிற்கு அலுவலக சார்பாய் பணம் செட்டில் செய்ய போன போது சுதா இருந்தாள். தன் வீட்டை அடையாளம் காட்டினாள். அவள் வீட்டின் அருகே இருக்கும் கோவிலே இவர்களின் சந்திக்கும் இடமாக மாறியது.

சுதா ஒன்றும் வசதியான வீட்டைச் சேர்ந்தவள் இல்லை. இவனுடைய ஆறாயிரம் சம்பளமே அவளை மிரள வைத்தது.

''உங்கம்மா என்னை மருமகளா ஏத்துப்பாங்களா?'' மிரண்ட பார்வையோடு



# 7 நாடுகளின் நேரத்தை காட்டும் அதிசய கடிகாரம்

படத்தில் காணும் கடிகாரம் ஜப்பான், அமெரிக்கா உள்ளிட்ட 7 நாடுகளின் நேரத்தை ஒரே நேரத்தில் காட்டும் விதமாக தயாரிக்கப்பட்டு உள்ளது. இந்தக் கடிகாரம் தற்போது டெல்லியில் பரபரப்பாக விற்பனையாகி வருகிறது.

இந்தக் கடிகாரம் பல்வேறு வடிவங்களில், பல்வேறு நிறங்களில் இருக்கிறது. விலை ரூ.550-ல் தொடங்குகிறது.

-எஸ். தேவி.

கேட்ட அவளையே உற்றுப் பார்த்தான்.

''நிறைய சினிமா பார்ப்பியோ?''

''ஏன்?''

''செம டயலாக் அடிக்கற''

''ஆ... நான் என் வாழ்க்கை பத்தின பயத்தோட கேட்கறேன், நீங்க என்னடான்னா...''

''என்னை நம்பறியா இல்லையா?''

''இல்லாமலா இப்படி ஒருத்தருக்கும் தெரியாம கோயில்ல வந்து உட்கார்ந்திருக்கேன்.''

''இன்னொரு டயலாக்டா.''

''ப்ளீஸ், என் கேள்விக்கு சரியான ஒரு பதிலைச் சொல்லுங்களேன்.''

''இங்க பாரு, சுதா. நானும் மிடில் கிளாஸ் தான். நீ அனாவஸ்யமா பயப்பட வேண்டாம். சரியா? என்ன, என் ரெண்டு தங்கைகள் கல்யாணத்துக்குப் பிறகு தான் என் கல்யாணத்தைப் பத்திப் பேச முடியும். அதுவரை எனக்காக நீ காத்திருக்கணும்.''

''என் அக்கா கல்யாணத்துக்குப் பிறகு தான் என் கல்யாணமும். என் அப்பா ஒரு வீட்டு புரோக்கர். உங்களுக்குத் தான் தெரியுமே... அவர் சம்பாத்யத்துல வாய்க்கும் வயித்துக்குமே சரியா இருக்கு. என் அக்கா கல்யாணம் முடிஞ்சு என் கல்யாணம் நடந்து... ஹூம்... அதெல்லாம் இப்போதைக்கு சாத்யமில்லை. அதனால காலம் பூராவும் உங்களுக்காக நான் காத்திருக்கத் தயார்.''

''இந்த ஒரு வார்த்தை போதும் சுதா.''

''ஆனா, எங்கப்பாவால ரொம்ப ரொம்ப சுமாராத்தான் கல்யாணம் பண்ணித் தர முடியும். சீர் செனத்தினு எதுவும் முடியாது.''

''நான் ஏதாவது கேட்டேனா, சுதா?''

''நீங்க கேட்க மாட்டீங்க. ஆனா, உங்க அம்மா...''

''எங்கம்மாவும் ரெண்டு பெண்ணைப் பெத்தவங்க. எதுவும் எதிர்பார்க்க மாட்டாங்க. எங்கம்மாவுக்கு எங்க மூணு பேர் சந்தோஷம் தான் முக்கியம். என் ஆசைக்கு குறுக்கே நிற்கவே மாட்டாங்க. போதுமா?''

அவள் நிம்மதியாய் சிரித்தாள்.

ஒரு சின்ன புன்னகைக் கீற்றை அவள் முகத்தில் பார்க்க, எத்தனை எத்தனை வாக்குறுதிகள்.

இன்று ஒரு சின்ன பரிசுப் பொருளை அவளிடம் நீட்டினால், அவள் முகத்தில் எத்தகைய மகிழ்ச்சி பூக்கும். அந்தச் சின்னச் சிரிப்பிற்காக உலகையே கொடுக்கலாமே. ஆனால், கையிலோ வெறும் நூறு ரூபாய் அதுவும் கடன் வாங்கிய நூறு ரூபாய் ப்சூ... சீ, நூறு ரூபாய்க்கு என்ன வாங்குவது?

செண்ட்?

மேக் அப் கிட்?

ம்ஹூம், இதெல்லாம் அவளுக்கு உதவாது. அவளுக்கு இதெல்லாம் பயன்படாது. பேசாமல் இன்னொரு நூறு ரூபாய் கடன் வாங்கி ஒரு சாதா புடவை வாங்கி விட்டால் என்ன?

அவன் சிந்தனையை அக்கௌண்டன்ட் ரவியின் குரல் கலைத்தது.

''சேகர், ஃபோன்ப்பா.''

யாராய் இருக்கும்? சுதா ரூபாய் செலவழித்து போனெல்லாம் செய்ய மாட்டாள். ஒரு வேளை பிறந்தநாள் என்பதால் பேசுகிறாளோ?

''ஹலோ, சேகர் ஹியர்''

''அம்மா பேசறேன்டா சேகரா.''

''சொல்லும்மா''

''என்னத்தை சொல்றது. கையும் ஓடலை காலும் ஓடலைடா''

''என்னம்மா, ஏன்? யாருக்கு என்ன?''

''அடடா, பதறாதேப்பா. நல்ல விஷயம் தான்.''

''ப்சூ, சொல்ல வர்ற விஷயத்தை ஒழுங்கா சொல்லும்மா''

''நம்ம உஷாவை ஒரு நல்ல இடத்துலயிருந்து பெண் பார்க்க வரேன்னு சொல்லி இருக்காங்க''

''யாரு? திடீர்னு எப்படி வராங்க?''

''பையன் டெல்லியில ஐ.பி.எஸ். ஆபீசர். என் தோழி ஒருத்தி டெல்லியில் இருக்காளே

பிரமீளாறு...''

''ம், சொல்லு தெரியும்''

''அவ நூலமா நம்ம உஷாவைப் பத்திக் கேள்விப்பட்டிருக்காங்க. சென்னைக்கு ஒரு கல்யாண விஷயமா வந்திருக்காங்க. நாளைக்கு ஊருக்குப் போறாங்க. இன்னிக்கு சாயந்திரமா வரலாமானு கேட்டாங்க. நான் சரினு சொல்லிட்டேன். இப்பத்தான் உஷாவுக்கு போன் போட்டுப் பேசினேன். பர்மிஷன் போட்டுட்டு வரேன்னு சொன்னா. நீயும் வந்துடு.''

ஒரு நிமிடம் சுதாவின் முகம் இவன் மனக்கண்ணில் பளிச்சிட்டது. தான் வாங்கிக் கொடுத்த புடவையைப் பெற்றுக் கொண்டு மலரப் போகும் அவள் பூ முகம் பற்றிய கற்பனை நிஜத்தில் நடக்கப் போவதில்லை. ஏமாற்றம் சூழ்ந்தது.

''என்னடா பேச்சையே காணோம்?''

''ம். சரி வரேன்.''

''வரும் போது ஒரு கிலோ திருநெல்வேலி அல்வா, மைசூர்பாகு அரைகிலோ, நல்ல ரஸ்தாளிப்பழம் ரெண்டு டஜன், ஆறு ஆப்பிள், நெய், சீவண்ட் ஆயில் எல்லாம் வாங்கி வந்துடு. என்ன? பஜ்ஜியும் கேசரியும் வீட்ல பண்ணிடறேன். பூ மறந்துடாதே. ஒரு மீட்டர் அரக்குக் கலர் ரவிக்கைத் துணி வாங்கு... அப்புறம் முந்திரி, திராட்சை...''

அவனுக்கு எரிச்சலாய் இருந்தது. இதெல்லாம் உஷாவுக்குச் சில்லறை விஷயங்கள். அம்மா சொன்னதற்கு மேலாகவே வாங்க முடியும் அவனால். ஆனால், அம்மா அவனிடம் சொல்ல மாட்டாள். பையன் தான் செலவு செய்ய வேண்டும், கடன் பட்டாவது! எழுதப்படாத சட்டங்கள் சே!

ரவியிடம் மேலும் நானூறு ரூபாய் கடன் வாங்கிக் கொண்டு கிளம்பினான் சேகர்.

## 3



**ரா**குல் பெயருக்கு ஏற்றாற் போல் இந்தி நடிகர் ஜாடையில் நல்ல சிவப்பாய் உயரமாய் இருந்தான்.

உஷா எளிமையாய் அலங்கரித்துக் கொண்டிருந்தாள். பெண்மையின் நாணம் மின்னினாலும், அதையும் மீறி, படிப்பின் கம்பீரம் வெளிப்பட்டது.

ராகுலின் படிப்பும், பதவியும் சம்பாத்தியமும் அவனுக்குத் தனி களையும் தன்னம்பிக்கையும் கொடுப்பதை ஆதங்கத்தோடு பார்த்துக் குறித்துக் கொண்டான் சேகர்.

பையனின் பெற்றோரும் மாமாவும் உடன் வந்திருந்தார்கள். படிப்பும் பண்பும் மிளிரப் பேசினார்கள்.

''பெண்ணை எங்களுக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. உஷா எங்க ராகுலோட தனியா ஏதாவது பேசணுமா?'' ராகுலின் அம்மா கேட்க,

உஷா தயங்க, சேகர் சட்டென்று, ''போ உஷா. உன் ரூமுக்கு ராகுலை கூட்டிப் போய் உன் புக் கலெக்ஷனைக் காட்டு'' என்றான்.

அவர்கள் இருவரும் உள்ளே சென்றார்கள்.

ராகுலின் அம்மா பார்வதம் மெல்லச் சிரித்தபடி ''கடவுள் அருள்ல உஷாவே என் சின்ன மருமகளா வரணும்'' என்றாள், சேகரின் அம்மா கமலாவைப் பார்த்து.

கமலாவிற்கு உச்சி குளிர்ந்து விட்டது.

''பையனுக்கும் பொண்ணுக்கும் பிடிச்சுப் போச்சுனு நினைக்கிறேன். ராகுல் மருமகனா வர நாங்கள் கொடுத்து வச்சிருக்கணும். ஆனா, உங்க எதிர்பார்ப்புக்கு எங்களால செய்ய முடியுமானு...''

''என்ன பெரிய எதிர்பார்ப்பு? உங்க பொண்ணுக்கு நீங்க செய்யப்போறீங்க. எங்களுக்கு வரதட்சணை பேச்செல்லாம் பிடிக்காது. பையனே போலீஸ் ஆபீசர்தானே. என்ன, பெரிய மருமக அறுபது பவுன் நகை, வைரத்தோடு போட்டு வந்தா. அந்த அளவு இல்லாட்டியும், அதுக்கு ஓரளவு சமமாப் போட்டாத்தான் உங்க மகளுக்கு கௌரவமா இருக்கும். அதே போல, எங்க உறவு, நட்பு வட்டம் ரொம்ப பெரிய பெரிய இடம். எல்லாம் கார்ல வருவாங்க. சோ, பெரிய கல்யாண மண்டபமா பார்த்து ஏற்பாடு பண்ணிடுங்க. சமையல் குத்தம் குறை இல்லாம செஞ்சுடணும் அவ்வளவுதான்.''

சேகருக்கு பகீர் என்றது. மடமடவென்று மனதில் கணக்குப் போட்டான். ஐம்பது அறுபது பவுன் என்றால் குறைந்தது இரண்டரை லட்சமாகும். வைரத்தோடு ஒரு அரை லட்சம்.



பெரிய மண்டபமென்றால் இரண்டு நாட்களுக்கு நாற்பது, ஐம்பதாயிரம். சாப்பாடுச் செலவு ஒரு லட்சம். அதற்கும் மேல் துணிமணி பட்டுப்புடவைகள், போக வர வேன் செலவுகள், வீடியோ, நாயனம், மியூசிக் ட்ரூப், பத்திரிகை... ஐயோ, குறைந்தது ஐந்து லட்சமாகுமே. அவனுக்கு தலை சுற்றியது... தன் நிலை அம்மாவுக்குத் தெரியும். இந்த வரனை மறுத்து விடுவாள் என்று அவன் எதிர்பார்ப்போடு அம்மாவைப் பார்க்க, அவளோ வாயெல்லாம் பல்லாக தலையாட்டிக் கொண்டிருந்தாள்.

''நீங்க ஒண்ணும் பெரிசா டிமாண்ட் பண்ணலையே. நல்லபடி நகை நட்டு போட்டு கல்யாணம் செஞ்சு தரச் சொல்றீங்க. அவ்வளவுதானே. பொண்ணும் பிள்ளையும் வந்து சம்மதம்னு சொல்லிட்டும். ஜமாய்ச்சுடலாம்.''

அம்மாவின் ஒவ்வொரு வார்த்தையும் அதிர்ச்சியைத் தர, சேகர் அப்படியே பொத்தென்று சோபாவில் அமர்ந்து விட்டான். உஷாவும் ராகுலும் முகமெல்லாம் சிரிப்பாய் வெளியே வர அங்கே சூழலே பளிச்சென்று மகிழ்ச்சியாய் மாறியது. எல்லோரும் கலகலப்பாய் மகிழ்ச்சியாய் பேச, சேகர் மட்டும் பேயறைந்தது போல் உட்கார்ந்திருந்தான்.

**வீ**டே நிசப்தமாய் இருந்தது. கமலாம்மா சுவரில் சாய்ந்து உட்கார்ந்திருந்தாள். பெண் பார்க்க வருபவர்களுக்காக கட்டியிருந்த புடவையைக் கூட அவிழ்க்காமல் சோபாவில் கால் மடக்கி உட்கார்ந்திருந்தாள் உஷா. ஜன்னல் விளிம்பில் உட்கார்ந்து நகம் கடித்துக் கொண்டிருந்தாள் ஆஷா. சோபா நுனியில் அமர்ந்து கால் முட்டியில் கைமுட்டி ஊன்றி, தலையை கைகளால் பிடித்தபடி உட்கார்ந்திருந்தான சேகர்.

''சேகரா, முதல்ல கையை எடு. நல்ல விஷயம் பேசும்போது ஏன் இப்படி உட்கார்ந்திருக்கே?''

''நீ பாட்டுக்கு சரினு சொல்லிட்டே. என்னை ஒரு வார்த்தை கேட்டியா? அவங்க சொல்றபடி பார்த்தா குறைஞ்சது அஞ்சு லட்சமாகும் கல்யாணம் பண்ண. என்னால புரட்ட முடியுமா?'' அவன் கத்தினான்.

''அவங்க அநியாயமா எதுவும் கேட்கலையேடா. அவங்க அந்தஸ்துக்கு ஏத்த மாதிரி கல்யாணத்தை நல்லா பண்ணச் சொல்றாங்க தப்பில்லையே.''

''தப்பே இல்லைம்மா. ஆனா, அவ்வளவு அந்தஸ்துல போய் ஏன் நாம பெண் கொடுக்கணும்?''

அதுவரை பேசாமல் இருந்த உஷா மெல்ல அண்ணனை நிமிர்ந்து பார்த்தாள். பின் நிதானமாய் ''அண்ணா, ராகுலை எனக்குப் பிடிச்சிருக்கு. ஆனா, அதுக்காக கண்டதும் காதல் அப்படினு எல்லாம் சொல்ல மாட்டேன். உன்னை வருத்தி எனக்குக் கல்யாணம் செய்யணும்னா, எனக்குக் கல்யாணமே வேண்டாம் அண்ணா.''

சேகர் ஆடிப் போனான்.

''என்னடா இப்படிப் பேசறே'' அவள் குரல் நெகிழ்ந்து விட்டது.

அவன் அருகே நெருங்கி அமர்ந்த உஷா, ''அண்ணா, கொஞ்சம் அந்தஸ்து குறைஞ்ச இடமாப் பார்க்கலாம்னு நீ நினைக்கலாம். தப்பில்லை. ஆனா, கொஞ்சம் யோசி. நான் பெரிய ஆபீஸரா கை நிறைய சம்பளம் வாங்க, என் கணவர் ஒரு சாதாரண பியூனா குறைஞ்ச சம்பளம் வாங்கினா, ஒரு காம்ப்ளெக்ஸ் உருவாகாதா? அது என் வாழ்வை பாதிக்காதா? முடிஞ்சா என் தகுதிக்கு ஏத்த வரனைப்பாரு. இல்லாட்டி நோ ரெக்ரெட்ஸ். இப்படியே காலம் பூராவும் நான் வாழ்ந்துட ரெடி. என் பொருட்டு யாரும் அவஸ்தைப் படக்கூடாது.''

மென்மையாகச் சொல்லி விட்டு உள்ளே போய் விட்டாள் உஷா.

இரவு முழுவதும் சேகரால் உறங்க முடியவில்லை. உஷா சொல்வது நியாயமாகப் பட்டது. தனக்கே தங்கை மேல் சின்ன பொறாமை எழும்போது, கணவனாக வருபவன் எப்படி மனைவி தன்னை விட மிக அதிகமாய் சம்பாதிப்பதை சுலபமாய் ஏற்பான்? ஆனால், தன்னால் பணம் புரட்ட முடியுமா?

இரண்டு வருடங்களாய் உஷாவின் சம்பளத்தை அம்மா சேமித்து வருகிறாள். அம்மாவின் கண் ஆபரேஷன், வீட்டை புதுப்பிப்பது, ஆஷாவின் படிப்புக்கான சில்லறை செலவுகள் என்று எப்போதாவது அவள் பணத்தில் கை வைத்திருந்தாலும் கூட ஓரளவு கணிசமாகவே பணம் சேர்ந்திருக்கும். ஆனால், அம்மா அதில் கை வைக்க விடுவாளா?

''இன்னொரு வீட்டுக்குப் போக போகிறவள். அவள் பணத்தில் கை வைக்கக் கூடாது'' என்று ஏதாவது வறட்டு வேதாந்தம் பேசினாலும் பேசுவாள்.

அப்படியே அந்தப் பணத்தை எடுத்து

அவளுக்கே நகை நட்டு என்று செய்தாலும், சத்திரம், சாப்பாடு, வீடியோ, மண்டபம், புடவை என்று எத்தனையோ செலவு வகைகள் இருக்கிறதே. எப்படி சமாளிப்பான்?

லோன் போட்டால் ஒரு நாற்பதாயிரம் கிடைக்கலாம். பின்? அப்பாவின் நண்பர் யாரிடமாவது ஒரு லட்சம் கடன் வாங்கலாம். அதன் பின்? வீட்டை அடமானம் வைக்கலாம். அதன் பின்?

எல்லாவற்றையும் திருப்ப வேண்டுமே. ஓரிரு வருடங்களில் ஆஷாவிற்கு வேறு திருமணம் செய்ய வேண்டும். அப்போதும் இதே போல் கடன். எப்படித் திருப்பப் போகிறான்? எப்போது மீளப் போகிறான்?

அவனுக்கு தலை சுற்றியது. யாரோ சம்மட்டியால் அடிப்பது போல் முன் நெற்றி வலித்தது. புரண்டு புரண்டு படுத்தான். தூக்கம் மட்டும் வரவில்லை.

## உடல் நலம் காத்து வாழ வைக்கும் வாழை!



உடல் நலம் காக்கும் காய்கனிகளில் வாழைக்கு முக்கிய இடம் உண்டு. வாழைத் தண்டு, வாழைப்பூ, வாழைக்காய், வாழைப்பழம் அனைத்துமே சத்துமிக்கவை என்பதுடன் மருந்தாகவும் பயன்படுகின்றன.

வாழைத்தண்டில் கால்சியம், பாஸ்பரஸ், இரும்பு மற்றும் வைட்டமின் பி, சி சத்துகள் நிறைந்து உள்ளன. சிறுநீர்ப் பாதையில் ஏற்படும் கல் அடைப்பை கரைக்க வாழைத்தண்டு கைகண்ட மருந்து ஆகும்.

வாழைப்பூவில் கால்சியம், பாஸ்பரஸ், புரதச்சத்து, நார்ச்சத்து, இரும்புச்சத்து ஆகியவற்றுடன் வைட்டமின் பி, சி சத்துக்கள் அடங்கியுள்ளன. வாழைப்பூவில் உள்ள நார்ச்சத்து மலச்சிக்கலைப் போக்கும்.

வாழைக்காயில் இரும்புச்சத்து, போலிக் அமிலம் மற்றும் வைட்டமின் ஏ, பி, சி சத்துக்கள் உள்ளன. போலிக் அமிலம் பற்றாக்குறையால் கர்ப்பிணிகளுக்கும் குழந்தைகளுக்கும் ஏற்படும் ரத்த சோகையை வாழைக்காய் போக்கவல்லது.

வாழைப்பழத்தில் கார்போஹைட்ரேட், இரும்புச்சத்து, கால்சியம், பாஸ்பரஸ் ஆகிய தாது பொருட்கள் உள்ளன. வைட்டமின் ஏ, பி, சி சத்துக்களும் அடங்கி உள்ளன.

வாழைப்பழத்தில் பூவன்பழம் மலச்சிக்கலை போக்கவும், நேந்திரன் பழம் ரத்தசோகையை நீக்கவும் உதவும். மலைவாழைப்பழம் ரத்த விருத்தியினை அதிகரிக்கும்.

# 4



**கா**லை சேகர் கண் விழித்த போது மணி பத்து. அரக்கப் பரக்க எழுந்து வந்தான். அம்மா சமையல் அறையில் இருந்தாள். தங்கைகள் கிளம்பிப் போயிருந்தார்கள்.

''அம்மா, ஏம்மா எழுப்பலை. மணி பத்து. நான் எப்படி ஆபீஸ் கிளம்புவேன்?'' சொல்லியபடி கொல்லைப் பக்கம் ஓடி பல் தேய்த்து முகம் கழுவினான்.

சுசிலா சூடாய் காபியை அவன் முன் நீட்டினாள்.

''முதல்ல இதைக்குடி. ராத்திரி ரொம்ப நேரம் நீ தூங்கலைனு தெரியும். காலையில் தான் அசந்து தூங்கினே. ஒரு நாள் தான் லீவு போடேன்.''

''வேற வழி?'' என்று முனகியவன் காபியை ரசித்துக் குடித்தான். இரவு சரியாக உறங்காமல் தலைவலியோடு அவதிப்பட்டதற்கு, காபி நல்ல இதமாக இருந்தது.

போன் செய்து அலுவலகத்திற்கு விடுப்பு சொன்னான்.

''டிபன் கொஞ்ச நேரம் கழிச்சு சாப்பிடறேன்'' என்றபடி டி.வி. முன் அமர்ந்து சேனல்களை டபக் டபக் என்று மாற்றிக் கொண்டிருந்தான்.

சுசிலாவும் வந்து அவனருகில் அமர்ந்து கொண்டாள்.

''ராகுல் வீட்டுக்காரங்க இன்னைக்கு ஊருக்குப் புறப்படறாங்க. நாம சம்மதம் இல்லையானு ஒரு போனாவது பண்ணிச் சொல்லணும்.''

''சம்மதம்ங்கறா மாதிரி தானே நேத்து பேசினீங்க.''

''ஆனா, நீ யோசிக்கறியேப்பா.''

''அவ்வளவு பணத்துக்கு என்னம்மா வழி?''

''உஷா பணம் ஒரு மூணு லட்சம் கிட்டத்தட்ட சேர்ந்திருக்கு. அதுல அவளுக்கு நகை செஞ்சிருக்கேன்.''

''ரைட்''

''மேல் செலவை நாம புரட்டணும்''

''ரெண்டு, ரெண்டரை லட்சமாவது ஆகுமே. எப்படியும் ஒரு லட்சம் துண்டு விழும் போலிருக்கே''

''அதுக்கு ஒரு வழி சொல்லட்டுமா?''

''தாராளமா?''

''எனக்குத் தெரிஞ்சவங்க மூலமா ஒரு நல்ல வரன் வந்திருக்கு...''

''அதுவும் ராகுல் அளவு உசுந்த இடமாத்தானே இருக்கும். அதுக்கு உஷாவுக்குப் பிடிச்ச ராகுலையே முடிக்கலாமே.''

''அட முந்திரிக்கொட்டை, அவசரப்படாதே. இந்த வரன் அவளுக்கு இல்லை. உனக்கு...''

ஒரு நிமிடம் ஆணி அடித்தது போல் அப்படியே உறைந்து போனான் சேகர்.

''எ... என்னம்மா சொல்றே?''

''முழுசாக் கேளுடா. நம்ம பக்கத்து வீட்டு கோமதியம்மாவோட சொந்தக்காரங்க வீட்டுப் பொண்ணு. இங்கே வரப்போக இருக்கும் போது, உன்னைப் பார்த்திருக்காங்க. நல்ல பிள்ளையாத் தெரியறானேனு விசாரிச்சிருக்காங்க...''

''சரி, அதுக்கும் உஷா கல்யாணத்துக்கும்?...''

''கேளுடா, பொண்ணு ஒரே பெண்ணாம். அதுக்கு ஒரே ஒரு தம்பி தானாம். இருபது பவுன் நகை போட்டு சுமாரா கல்யாணம் செஞ்சு தருவாங்களாம். பையன் நல்ல பிள்ளையா இருந்தாப் போதும்னாங்க. நான் அப்ப பேசா எதுவும் சொல்லிக்கலை. இன்னைக்குக் காலையில் கடவுள் செயல்பாடு, அவங்க கோமதி வீட்டுக்கு வந்திருக்காங்க. பேச்சுக் கொடுத்துப் பார்த்தேன். 'சத்திரம் சாவடினு செலவு அனாவசியமா வேண்டாம். ரெண்டு குடும்பமும் கோவில்ல போய் கல்யாணத்தை முடிச்சுட்டு, ஒரு ஹோட்டல்ல சாப்பிட்டுடலாம். பணம் வேண்டாதது. அப்படியே மிச்சமாகுமே'னு சொன்னேன். மிச்சமாகும் ரெண்டு ரெண்டரை லட்சத்தை அப்படியே பையன் பேருல போட்டுடறோம்னு சொல்றாங்க. நீ என்ன சொல்றே? நம்ம பிரச்சினைக்கு எவ்வளவு சுலபமா தீர்வு கிடைக்கிருக்கு பார்.''

அம்மா குதூகலமா சொல்ல, சேகர் முகம் கன்றிப் போனான். சாயம் போன புடவை ரவிக்கையில் சுதா பரிதாபமாய் அவன் மனக் கண்ணில் தோன்றினாள். கெஞ்சலாய் 'என்னைக் கை விட்டுடமாட்டீங்களே' என்றாள்.

சேகருக்கு கோபம் சுர்ரென்று ஏறியது.

''பிள்ளையை ரெண்டு லட்சத்துக்கு வித்து, பெண் கல்யாணத்தை முடிக்கணும்னு நினைக்கறே இல்ல. சே, உனக்கு கேவலமா இல்லை?'' சீறினான் அம்மாவிடம். ஒரு நிமிடம் அவனை அடிபட்ட பார்வை பார்த்த சுசிலா அடுத்த நிமிடம் சண்டைக் கோழியாய் சிலும்பினாள்.

''எதுடா கேவலம்? படிக்க வேண்டிய காலத்துல படிபடினு நான் முட்டிண்டதை காதுலயே போட்டுக்காம கோட்டை விட்டுட்டு குறைஞ்ச சம்பளத்துல வேலைக்குப் போனியே அது கேவலமா? இல்ல உனக்கு நான் வரன் பார்த்தது கேவலமா? உன் தங்கைகள் நல்லாப் படிச்சுட்டு நாம கைநீட்டற இடத்துல கழுத்தை நீட்டத் தயாரா நிக்கறாங்களே, அவங்களுக்கு ஏத்த வரனாப் பார்க்க முடியாம தலைகுனிஞ்சு நிக்கறோமே அது கேவலமா? இல்ல உனக்கும் அப்படியே ஒரு வாழ்க்கை அமைஞ்சுடும்னு கணக்குப் போட்டேனே, இது கேவலமா? பேசறான் பெரி...சா''

அம்மாவின் அதட்டல் குரலில் ஒரு நொடி அடிபட்டுப் போனான் சேகர்.

''போடா போ. நீ செய்யாட்டிப் போ. என்

நகைகள் நிலப்புலன் வித்து பெண்களைப் படிக்க வைக்கலையா? அதே மாதிரி வீட்டை வித்து என் பெண்கள் கல்யாணத்தை முடிக்கிறேன். கல்யாணம் முடிஞ்ச கையோட போய் ஒரு முதியோர் இல்லத்துல சேர்ந்துடறேன். அவ்வளவு தான்.'' அம்மா சொல்லியபடி எழுந்து போக, அவனையே கோபமாய் முறைத்தான் சேகர்.

''செய், செய், அப்படியே ஒரு மேன்ஷன்ல நானும் இடம் தேடிக்கறேன்.''

சட்டையை மாட்டிக் கொண்டு வெளியேறினான்.

வீட்டில் சாப்பிடப் பிடிக்காமல், ஹோட்டலில் போய் சாப்பிட்டு விட்டு வீடு திரும்பினான். அம்மா யாரோ ஒருவருடன் பேசிக் கொண்டிருந்தாள்.

''இதுதான் என் பிள்ளை. பேரு சேகர்.'' என்ற சுசீலா ''சேகரா இவர் தான் வீட்டு புரோக்கர். வீட்டை விக்க ஏற்பாடு பண்ணச் சொல்லிட்டேன்'' அம்மா குரல் இறுக பேசினாள்.

சேகர் நிஜமாகவே அரண்டு போனான். அவன் ஹோட்டல் போய் வருவதற்குள் அம்மா செயல்பட்டிருக்கிறாள்.

''தெருக்கோடுல இருக்கற ரியல் எஸ்டேட்டுக்கு அடிக்கடி வருவேன் தம்பி. அம்மா வீடு விக்கற விஷயமா பேச வந்தாங்க. அதான், அப்படியே " வீட்டைப் பார்த்துடலாமேனு வந்தேன்... சரிம்மா நான் வரேன். ரியல் எஸ்டேட் முதலாளிகிட்டயும் சொல்றேன். நல்ல பார்ட்டி வந்தாலும் நானே கூட்டி வரேன். வரட்டுங்களா? தம்பி இப்படிக் கொஞ்சம் வாங்க.''

அவனை அழைத்துக் கொண்டு வெளியே வந்தார்.

''அம்மா, எந்த நெருக்கடியான சூழல்ல, நீங்க வீட்டை விக்கப் போறீங்கனு சொன்னாங்க. நானும் ரெண்டு பெண்ணைப் பெத்தவன். அதுங்க நல்வாழ்வுக்காக பெத்த மனசு எப்படி துடிக்கும்னு எனக்கு நல்லாத் தெரியும். இன்னொரு விஷயமும் தெரியும். என் மகளை நீங்க கோயில்ல அடிக்கடி சந்திக்கறீங்கனும் தெரியும்.''

அவன் அதிர்ந்து போய் அவரைப் பார்த்தான்.

''நான் தான் சுதாவோட அப்பா. நீங்க அவளை சந்திக்கறீங்களே, அது தப்புனு நான் சொல்ல வரலை. இந்த மாதிரி ஒரு குடும்பத்துல, வாழ்க்கைப்பட என் மக கொடுத்து வச்சிருக்கணும். ஆனா என் மக வாழ வந்த இடத்துல ஏற்கெனவே வாழற பெண்கள் சந்தோஷமா இருக்கணும்னு நான் ஆசைப்படறேன். என் மகளுக்கு கொடுத்த வாக்கை காப்பாத்தறதுக்காக உங்க அம்மா தங்கை வாழ்க்கையை வீணாக்கிடாதீங்க. அம்மா சொல்படி நடக்கறது தான் உங்க எல்லோருக்குமே நல்லது. என் மகளை நான் சமாதானப்படுத்திக்கறேன். வரட்டுமா?''

உடலால் கூனிக்குறுகிப் போயிருந்தாலும் உள்ளத்தால் உயர்ந்த அந்த மனிதர் லொங்கு லொங்கு என்று நடந்து போவதையே பார்த்துக் கொண்டு சற்றுநேரம் நின்றான். அவன் கண்ணீர் அவர் உருவத்தை மறைக்க கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டு, வீட்டுக்குள் நுழைந்தான்.

தொலைபேசி ஒலித்தது.

''ஹலோ''

''உஷா பேசறேண்ணா''

''சொல்லும்மா''

''நைட் தானே டிரெய்ன். மாட்னி சினிமா போலாமானு கேட்டு ராகுல் போன் பண்ணினார். கல்யாணமே சந்தேகமா இருக்குனு நான் அவர்கிட்ட சொல்லலை. நீயே பேசிடறியா?'' ஏக்கத்தோடு அவள் குரல் ஒலித்தது.

''அவசியம் இல்லம்மா. எப்படியும் உன்னை ராகுல் மணக்கப் போறவர் தானே. அவர் கூட ஒரு சினிமா போறது ஒண்ணும் தப்பில்லை. ஆனா, ஜாக்கிரதையா போயிட்டு வா.''

திகைப்பில் ஒரு நிமிடம் பேச்சே வரவில்லை உஷாவிற்கு. தங்கை திருமணத்திற்கே அவன் சம்மதிக்கிறான் என்பதை புரிந்து கொண்டவள் மகிழ்ச்சியில் கூவியே விட்டாள்.

நூறு தாங்க்ஸ் சொல்லி போனை வைத்தாள். எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு சுவரில் சாய்ந்து நின்ற சுசீலாவும் ஆச்சர்யத்தில் சிலையாகிப் போனாள்.

அவளைக் கடக்கும் போது, ''நீ சொன்ன பெண்ணை போய்ப் பார்க்க ஏற்பாடு பண்ணும்மா. அது கூட பார்மாலிடி தான். நேரா கல்யாணம்னாலும் எனக்கு ஓக்கே. வீட்டை விற்க வேண்டாம்.'' என்றான்.

அம்மாவின் முகம் மலர்ந்தது. இவன் தன் கண்ணீரை மறைக்க குளியலறைக்குள் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டான்.



## 5



சுசீலா பரபரப்பாய் இருந்தாள். இன்னும் அரை மணியில் சேகர் மீனாவின் கழுத்தில் தாலி கட்டப்போகிறான். எல்லோரிடமும் வேண்டுதல் என்று கூறி வடபழனி கோயிலில் திருமணம் வைத்து விட்டாள். இரண்டு நாட்கள் முன்பு நடந்த நிச்சயதார்த்தத்தின் போதே சம்பந்தி வீட்டாரிடம் இரண்டரை லட்சம் பெற்றுக் கொண்டும் விட்டாள், சுசீலா.

இப்போது எளிமையாய் கோயிலில் திருமணம். ஐம்பது பேர் இருந்தால் அதிகம். அதிலும், இவர்கள் பக்கம் அத்தை, மாமா என்று எண்ணி எழெட்டு பேர் அவ்வளவுதான். மீதி பேர் அத்தனையும் பெண் வீட்டு உறவுதான். ராகுல் குடும்பத்தினர் சார்பாக உள்ளூர் மாமா ஒருவர் வந்திருந்தார்.

சேகர் தலை நிமிராமல் இறுகிய முகத்துடன் மணவறையில் உட்கார்ந்திருந்தான். ஐயர் சொல்லும் மந்திரத்தை ஏனோ தானோ என்று முணுமுணுத்துக் கொண்டிருந்தன அவன் உதடுகள். பெண் பார்க்கப் போன போதும் சரி, நிச்சயதார்த்தத்தின் போதும் சரி இப்படியே தான் இறுகிக் கிடந்தான்.

தங்கைகள் கூட கவனித்து விட்டு, ''என்ணா ஒரு மாதிரி இருக்கே?'' என்று கேட்டு விட்டார்கள். ''கல்யாண டென்ஷன்மா? உன் கல்யாணம் நல்லபடி முடியற வரை இப்படித்தான் இருக்கும்'' ஏதோ சொல்லி சமாளித்தான்.

சில நெருங்கிய உறவினர் கூட சுசீலாவிடம், ''என் பிள்ளை கல்யாணத்தை பெண் கல்யாணத்துக்கு முன்னாடி செய்யறே?'' என்று கிண்டிப் பார்த்தார்கள்.

''ஏதோ நல்ல வரன் கூடி வந்தது. அதுவும் தவிர உஷா கல்யாணத்தை ஓடியாடி செய்ய என்னால் முடியலை. சேகர் மனைவி அவளுக்கு ஈடு கொடுத்து கல்யாண வேலை செய்வாளே.''

சாமர்த்தியமாய் பேசி சமாளித்தாள் சுசீலா. அவளுக்கு மகனின் காதல் விஷயமோ, அதன் தோல்வி தந்த வலியில் அவன் துடிப்பதோ தெரியாது. அதனால் அவன் இறுக்கத்தை வேறு விதமாய் எடுத்துக் கொண்டாள். பெண் வீட்டாரிடம் இரண்டரை லட்சம் பெற்றுக் கொண்டதை மகன் விரும்பவில்லை என்று புரிந்து கொண்டாள். போகப் போக எல்லாம் சரியாகி விடும் என்று விட்டுவிட்டாள். அதுவும் தங்க விக்ரகம் போல் நடந்து வரும் மருமகள் மீனாவைப் பார்த்தவுடன் மகன் விரைவில் மனம் மாறுவான் என்ற நம்பிக்கை வந்தது.

மீனா முகூர்த்தப் புடவை கட்டி வந்து சேகர் அருகே அமர்ந்து கொண்டாள். ஐயர் மந்திரம் சொல்ல, கெட்டி மேளம் முழங்க, சேகர் மணமகள் முகத்தை சரியாகக் கூடப் பார்க்காமல் தாலி கட்டினான்.

முதல் இரவு.

அறையில் சேகர் மீனாவின் வருகைக்காகக் காத்திருந்தான். உடல்தான் இங்கிருந்ததே தவிர மனம் அவன் வசம் இல்லை. பரிதாபமாய் சுதா முகம் மனதில் தோன்றித் தோன்றி அவனை வாட்டியது. அவன் திருமணத்திற்கு இரண்டு நாட்கள் முன்பு போன் செய்து அவளுடன் பேசினான்.

''காங்கிராஜுலேஷன்ஸ்.''

''சு... சுதா... ப்ளீஸ் என்னைக் கொல்லாதே.''

''இல்ல சத்தியமா வாழ்த்தத்தான் போன் செஞ்சேன்.''

''......''

''உங்க நிலைமை பத்தி அப்பா சொன்னார். நான் கொடுத்து வச்சது அவ்வளவுதான். கடந்த காலத்தை மறந்துட்டு நிகழ்காலத்துல சந்தோஷமா இருங்க.''

''முடியற காரியமா?''

''முடியணும். உங்களுக்கு மனைவியா வரப்போறவ என்ன பாவம் செஞ்சா?''

''இவ்வளவு நல்ல மனசுள்ள உன்னை மனைவியா அடைய நான்தான் கொடுத்து வைக்கலை.''

சுதாவின் நினைவில் மூழ்கியிருந்தவன் மீனா உள்ளே நுழைந்ததை கவனிக்கவில்லை. மெட்டி ஒலிக்க அவனருகே பால் செம்புடன் வந்தாள். அப்போதும் அவன் கனவிலிருந்து கலையாமல் இருக்க, மெல்ல செருமினாள். திடுக்கிட்டுத் திரும்பியவன், முதல் முறையாக அவள் பக்கம் திரும்பி அவளைப் பார்த்தான். அவள் அழகோ நாணமோ அவனைக் கவரவில்லை. அவள் உணர்வுள்ள பெண். தன்

சொல்லுக்காக, அன்பான வார்த்தைகளுக்காக, உணர்வுப் பரிமாறலுக்காக காத்திருக்கிறாள் என்பதெல்லாமே அவன் உணர்வில் பதியவில்லை.

'மனைவியா வரப்போறவளை வாழ வைங்க. நம்ம காதல் ஏமாற்றத்தை அவங்ககிட்ட காட்டாதீங்க. அவங்க என்ன பாவம் பண்ணினாங்க' என்ற சுதாவின் வரிகள் தான் மனதில் ஆழப் பதிந்திருந்தன.

மீனாவிடம் ஒரு வார்த்தை பேசாமல் விளக்கை அணைத்தவன், இயந்திரத்தனமாக அவளையும் இழுத்து கட்டிலில் தன் மேல் போட்டுக் கொண்டான்.

எதிர்பாராத இந்த செயலால் மீனா ஸ்தம்பித்துப் போனாள்.

## 6



மறுநாள் காலை காபியுடன் அவனை எழுப்பினாள் மீனா. கண் விழித்தவன் காபியுடன் நிற்கும் அவளைப் பார்த்தான். ஒரு நிமிடம் ஒன்றும் புரியவில்லை. எதிரே நிற்பது சுதாவோ என்ற பிரமை தோன்றியது. தூக்கம் முற்றிலும் விலக, உண்மை நிலை புரிந்தது.

''எனக்கு பெட் காபி பழக்கமில்லை. அப்படி வை. பல் தேய்ச்சுட்டுக் குடிக்கறேன்'' என்றான்.

அவளும் காபியை வைத்து விட்டு வெளியேற கால் எடுத்து வைத்தாள்.

''ஏய், ஒரு நிமிஷம் நில்லு'' என்றான்.

புதுமணப் பெண்ணுக்கே உரிய நாணமும் ஆசையுமாய் அவள் திரும்ப, அதைப் பற்றி சற்றும்



உணராதவனாய் கேட்டான், "உன் பேர் என்ன?"

அவள் அடிபட்ட பார்வையுடன் மெல்ல முணுமுணுத்தாள், "மீனலோச்சனி"

"ஓ சரி, போ."

அவள் வேகமாய் வெளியேறினாள்.

இரண்டு வாரங்கள் ஓடிவிட்டன. உஷாவின் திருமண வேலைகள் துரித கதியில் நடந்தன. மீனா வீட்டினர் கொடுத்திருந்த பணத்தில் சுசிலாம்மாள் தாராளமாகவே மகள் திருமணத்திற்காக செலவழித்தாள்.

மகனின் இறுகிய முகம் மட்டும் அவ்வப்போது அவளை வாட்டியது. மறுவீடு, விருந்து என்று எதற்கும் செல்ல சேகர் மறுத்துவிட்டான். தாங்க முடியாமல் ஒரு நாள் சேகரை தனிமையில் மடக்கினாள், சுசிலாம்மாள்.

"சேகரா, நீ சந்தோஷமா இருக்கியாடா?"

"யப்பா, இப்பவாவது கேட்டியே?"

"சேகரா, என்னை புரிஞ்சுக்கலையே நீ. உன்னைப் பத்தி என் எல்லாக் கனவுகளுமே பொய்யாத்தான் போயிட்ருக்கு. பெரிய டாக்டரா வருவேனு நினைச்சேன். இல்லை. பெரிய மண்டபத்துல, வாசல்ல நூறு கார் நிற்க, வைரத்தால இழைச்ச பெண் கழுத்துல தாலி கட்டுவேனு நினைச்சேன். அதுவும் கனவாப் போச்சு. உன் கல்யாணம் பத்தி உனக்கும் ஆயிரம் கனவு இருந்திருக்கும். என்ன செய்ய? நினைக்கறதெல்லாமே நடந்துருதா? நான் மனசை தேத்திக்கிட்ட மாதிரி, நீயும் தேத்திக்கப்பா. அது தான் நல்லது. மீனாவும் நல்ல பெண்தான்டா. அழகு, பணம், படிப்பு, வேலை எல்லாம் சேர்ந்திருக்கு..."

"எப்படியோ, உன் மக கல்யாணம் நல்லபடி நடக்கும். போதுமா?" சொல்லி விட்டு பட்டென்று எழுந்து போனான் சேகர்.

உஷாவின் திருமணம் நன்றாக நடந்து முடிந்தது. கிளம்பும் முன் சேகரையும் மீனாவையும் நிறுத்தி வைத்து நமஸ்கரித்தாள்.

"ரொம்ப தாங்க்ஸ் அண்ணா. என் மனசுக்குப் பிடிச்சவரையே எனக்கு கல்யாணம் பண்ணி வச்சுட்ட."

அவள் கண்களில் நன்றி மிளிர்ந்தது. அவன் தன் கண்களைத் தழைத்துக் கொண்டான். 'என் மனசுக்குப் பிடிச்சவளை விட்டுக் கொடுத்துத் தான் இதை சாதிச்சேன். அதுவும் மனைவி வீட்டுப் பணத்துல' எண்ணமே கண்களில் நீர் கோர்க்க வைத்ததால் கண்களை தழைத்துக் கொண்டான்.

தங்கையைப் பிரியும் சோகம் என்று சுற்றியிருந்தவர்கள் எண்ணி, "பிரிவுன்னா அப்படித்தான்ப்பா இருக்கும். உன் தங்கைக்கு நல்ல வாழ்க்கை அமைஞ்சிருக்கு. இதோ இருக்கு டெல்லி. ஒரு ஃபோன் செஞ்சா பிளேன்ல வந்துடமாட்டாளா உன் தங்கை?" என்று ஏதேதோ சொல்ல, சேகருக்கு அங்கிருந்து ஓடி விட வேண்டும் போல் இருந்தது.

போதாக்குறைக்கு ஒரு கிழவி வேறு, "அடுத்தது ஆஷா கல்யாணத்தையும் அண்ணன்காரன் இதே ஜோருல நடத்திடமாட்டான்!" என்றவுடன் அந்தக் கிழவியை நாலு அறை கொடுத்து விரட்ட வேண்டும் போல் ஆத்திரம் அவனுள் கிளம்பியது. இன்னொரு ஐந்து லட்சத்திற்கு அவன் எங்கு போவான்?

விட்டதா இன்னொரு பெரிசு?

"அதுக்குள்ள ஒரு குவாக்குவா வீட்ல வந்துடாது?" என்று கண் சிமிட்ட எல்லோரும் கொல் என்று சிரித்தார்கள்.

அந்த சிரிப்பு சேகருக்கு நாராசமாய் இருந்தது. மீனா வேறு அவனை விழித்துப் பார்த்தாள். அந்தப் பார்வையை அவனால் தாங்க முடியவில்லை. திருமணமான இரண்டாம் நாளே மீனாவை அழைத்துக் கொண்டு கிளம்பினான். கணவனுடன் வெளியே கிளம்பும் ஜோரில் ஆசையாய் கிளம்பினாள். அவன் எங்கு அழைத்துப் போகப் போகிறான் என்பது புரியாமலே சந்தோஷமாகக் கிளம்பினாள்.

அவனோ நேராக அவளை லேடி டாக்டரிடம் அழைத்துப் போனான்.

"எங்களுக்குப் புதுசா கல்யாணமாகி இருக்கு. சில வருஷம் குழந்தை வேண்டாம்னு இருக்கோம். எந்த முறையைக் கடைபிடிக்கலாம் டாக்டர்."

மீனா அதிர்ந்து போனாள். ஆசையாசையாய் கணவனுடன் முதன் முதலில் கிளம்புகிறோம் என்று அவள் வந்த ஜோரென்ன, அவன் அவளை அழைத்து வந்துள்ள இடமென்ன! அதுவும் வந்த இடத்தில் என்ன அதிர்ச்சி! மனைவி என்று தன்னை அவன் மதித்து ஒரு வார்த்தை கேட்டிருக்க வேண்டாமா? எதுவுமே கூறாமல் இப்படி டாக்டரின் முன் தன்னை நிறுத்தி.. சே, என்ன மனிதன் இவன்?



அன்று இரவு அவள் அவனிடம் கோபம் தாளாமல் வெடித்து விட்டாள். புதுக் கணவன் என்பதோ, வீட்டில் அவளுக்கு வழங்கியிருந்த அறிவுரைகளோ, எதுவுமே அவள் மனதில் அப்போது உறைக்கவில்லை.

அவன் அலட்டிக் கொள்ளாமல் பதில் பேசினான்.

"இங்க பாரு, எதுக்கு இப்ப நீ கத்தறா? என் குடும்ப சூழல் இப்ப மோசமா இருக்கு. ஐ மீன் ஃபினான்ஷியலா. அதனால இப்போதைக்கு குழந்தை பெத்துக்கற ஐடியா எனக்கு இல்லை."

"அதைப் பத்தி ஒரு வார்த்தை என்கிட்ட நீங்க பேசினீங்களா?"

"ஓஹோ, எல்லா விஷயத்துக்கும் உன்கிட்ட பர்மிஷன் வாங்கணுமா இனிமேல்? இங்க பாரு அதுக்கெல்லாம் நான் ஆள் இல்லை. புரியுதா? இப்ப எனக்குக் குழந்தை வேண்டாம். உன்னை கட்டாயத்தின் பேரில் தான் கல்யாணம் பண்ணிக்கிட்டேன். டாக்டர் சொல்ற முறைகளைக் கடைபிடிக்க முடிஞ்சா செய். இல்லாட்டி நமக்குள்ள எந்த உறவும் இல்லாம இருப்போம். எனக்கொன்னும் இல்லை."

இப்போது குழந்தை பற்றி பேச்சு வர எல்லோரும் சந்தோஷமாய் சிரித்தார்கள். சந்தோஷமாய் இருந்திருக்க வேண்டிய இருவர் மட்டும் உர்ரென இரு வேறு திசை பார்த்து நின்றார்கள்.

## 7



உஷாவின் திருமணம் முடிந்த ஒரு வாரத்திற்கெல்லாம் மீனாவின் அம்மா மரகதம்மாள் மகளைப் பார்க்க வந்திருந்தார். இரண்டரை லட்சம் கொடுத்த சம்பந்தியம்மாள் என்பதாலேயே சுசிலாம்மாள் கூடுதலாகவே அன்பு காட்டி வரவேற்றாள்.

காபி பலகாரமெல்லாம் முடிந்த பின், மெல்ல ஆரம்பித்தார். "மகளை ரெண்டு நாள் வீட்டுக்குக் கூட்டிப் போகவா?"

சுசிலாம்மாள் யோசிக்கவே இல்லை. "ஓ, தாராளமா" என்றார். சனிக்கிழமை என்பதால் மீனா வீட்டில் இருந்தாள். சேகர் அலுவலகம் சென்றிருந்தான். மீனா உடனே ஆவலாய் கிளம்பினாள்.

மெல்ல தயக்கமாய் மரகதம்மாள், "மறுவீடு, விருந்துனு தான் மருமகன் வரலை. இப்பவாவது வருவாரா?"

"அவன் ஆபீஸ் நிலவரம் தெரியலை. நிச்சயமா மீனாவை கூட்டி வர அனுப்பறேன், சரியா?"

அம்மாவுக்கும் மகளுக்கும் பேச ஆயிரம் விஷயங்கள் இருந்தன. ஊர் விஷயம், உலக விஷயம் என்று பேசிய பின் அம்மா மெல்ல கேட்டாள், "சந்தோஷமா இருக்கியா, மீனா?"

புதிதாக மணமான பெண் கணவனை விட்டு வர சற்று யோசிப்பாள். ஒரு ஃபோன் போட்டாவது சொல்லிவிட்டுக் கிளம்புவாள். கொஞ்சலும் கெஞ்சலும் சிணுங்கலுமாய்... ம்ஹூம். இது எதுவுமே இங்கே இல்லையே. கூப்பிட்டவுடன் காத்திருந்தது போலல்லவா வந்து விட்டாள். கணவன் பற்றிய பெருமைப் பேச்சுக்களும் காணோம். மரகதம் உறுத்தலோடு கேட்டு விட்டாள்.

மீனாவின் மனதில் பொங்கிக் கொண்டு தான் வந்தது. முதல் இரவிலேயே கணவன் சற்றும் நேசம் இல்லாமல் நடந்து கொண்டது, மனைவியின் பெயர் கூடத் தெரியாமல் மறுநாள் சாவகாசமாகக் கேட்டுக் கொண்ட- அதென்ன? திமிரா, மெத்தனமா, அலட்சியமா?- ஏதோ ஒன்று, குழந்தை விஷயத்தில் தானே முடிவெடுத்து டாக்டர் முன் தன்னை நிறுத்தி சங்கடத்தில் ஆழ்த்திய ஆணவம்.

நட்போ, காதலோ, நேசமோ எதுவுமே இல்லாத கணவன், அதிகம் மட்டும் செய்யும் ஆண்மகன், எப்படி அன்புக்கு உரியவனாய் இருப்பான்?

எல்லாவற்றையும் சொல்லிவிட வாரா அம்மாவிடம் என்று எழுந்த ஆதங்கத்தை அடக்கிக் கொண்டாள். அம்மாவே இருந்த பணத்தையெல்லாம் கொடுத்து இவள் கல்யாணத்தை முடித்திருக்கிறாள். பாவம் இன்னும் தம்பி படிப்பு இருக்கிறது. இப்போது தான் ப்ளஸ் டூ. டாக்டர், இன்ஜினீயரிங் என்று சேர்த்தால் பணத்துக்கு என்ன செய்யப் போகிறார்கள்? இதில் மகள் சந்தோஷமாக இருப்பதாக நினைத்துக் கொள்ளும் சின்ன ஆறுதலை தான் ஏன் பறிக்க வேண்டும். அதனால் மெல்ல பேச்சை மாற்றினாள்.

''நான் நல்லாத்தாம்மா இருக்கேன். எனக்கென்ன குறை? உங்களைப் பத்தித்தான் கவலையா இருக்கேன். அப்பா இன்னும் ரெண்டு வருஷத்துல ரிட்டையராயிடப் போறார். குமார் படிப்புக்கு என்ன செய்யப் போறீங்க? என் சம்பளமும் வீட்டுக்கு இனி வராது.''

''அட என்ன நீ வேற கவலைப்படறே? மரம் வச்சவன் தண்ணி ஊத்த மாட்டானா? உன் தம்பி நல்லா படிக்கறான். அனேகமா சீட் மெரிட்லயே கிடைச்சுடும்னு நினைக்கறேன். இன்னும் சின்ன வீடா வாடகைக்குப் போயிடலாம்னு இருக்கோம். ஒரு அஞ்சு வருஷம் ரொம்ப ரொம்ப சிக்கனமா இருக்க வேண்டி வரும். சமாளிச்சுடலாம். நீ இதையெல்லாம் நினைச்சு கவலைப்படாதே. என்னா வேற பிரச்சினை எதுவும் இல்லையே? உன் முகமே சரியில்லையேம்மா.''

அம்மா விடமாட்டாள் என்று புரிந்தது. மனக் கலக்கத்துக்கு ஏதாவது காரணம் சொல்ல வேண்டும். மெல்ல யோசித்துச் சொன்னாள்.

''என்ன அங்கேயும் பணப் பிரச்சினை தான். வேறென்ன? நீ கொடுத்த ரெண்டரை லட்சத்தை உஷா கல்யாணத்துக்காக செலவு செஞ்சுட்டாங்க மாமியார்...''

இது தானா பிரச்சினை என்பது போல நிம்மதிப் பெருமூச்சு விட்டாள் மரகதம்மாள்.

''இங்க பாரு மீனு. நம்மை மாதிரி நடுத்தர வர்க்கத்துக்கு பணம் எப்பவுமே ஒரு பிரச்சினை தான். பணம் மட்டும் பிரச்சினைனா எப்படியும் சமாளிச்சுடலாம். கவலை இல்லை... இந்தப் பணத்தை கல்யாணத்துக்கு பயன்படுத்தாம இருந்திருந்தா, உன் புருஷன் தான் கஷ்டப்பட்டிருப்பார் இல்லையா? இன்னும் ஆஷா கல்யாணம், பிரசவம் வரை- ஒரு ஆறு, ஏழு வருஷம் உனக்குக் கஷ்டம். அப்புறம் உங்க ரெண்டு பேர் சம்பாத்தியம், சொந்த வீடு, உன் குடும்பம்னு வாழ்க்கையில் நீ நிம்மதியா இருக்கலாம். உனக்கு அரசு உத்யோகம், ஒவ்வொரு இன்க்ரிமெண்டுக்கும், டி.ஏ.வுக்கும் சம்பளம் உயரும். அப்புறம் என்ன கவலை? அந்த மாதிரி ஒரு வீடு கட்ட, குறைஞ்சது இன்னிய தேதியில இருபது முப்பது லட்சம் வேணுமே. உனக்கு என்னடிம்மா குறை?''

'புருஷன் அன்பு ஒன்றுதான் குறை. கவலை எல்லாம்' நினைத்துக் கொண்டாலும் சொல்லாமல் விட்டு விட்டு, மெல்ல சிரித்தாள் மீனா.

''நீ சொல்றது ரொம்ப தெம்பா இருக்கும்மா''

''ஒன்னே ஒன்னு சொல்றேன் மீனு. பணப் பிரச்சினையெல்லாம் தீரக் கூடிய பிரச்சினை. கணவன் மனைவிக்குள்ள பிரச்சினை வராம பார்த்துக்கறது தான் நல்லது. புரியுதா? மாப்பிள்ளை மனம் கோணாம நடந்துக்கோ. இப்போ நீ அவர்கிட்ட பெறுற அன்பும் நம்பிக்கையும் தான் வாழ்க்கை கடைசி வரை வரப் போகுது. நிம்மதிக்கு அஸ்திவாரம்.''

'இங்கே அந்த அஸ்திவாரம் தான் ஆட்டம் காண்கிறது



# பொம்மைத் திருவிழா!

உலகம் முழுவதும் இன்று எல்லா வீடுகளிலும் சர்வ சாதாரணமாக காணப்படும் பொம்மைகளின் முன்னோடி நாடு எது தெரியுமா? ஜப்பான்தான். கி.மு.10,000 ஆண்டுகளுக்கு முன்னரே அங்கு பொம்மைகள் தயாரிக்கப்பட்டதாக தெரிய வந்துள்ளது. மனிதன், மிருகங்கள், சிறிய வீடுகள் போன்ற பொம்மைகள் தயாரிக்கப்பட்டு அவை விளையாடவும் அலங்காரத்துக்கும் பயன்படுத்தப்பட்டன.

இன்றும் பொம்மை தயாரிப்பில் ஜப்பான் பின்தங்கி விடவில்லை. உலகின் எல்லா பகுதிகளிலும் சிறுவர் முதல் பெரியவர்கள் வரை ஜப்பான் பொம்மைகளை விரும்பி வாங்கி பயன்படுத்துகிறார்கள்.

ஜப்பானில் சில பகுதிகளில் பொம்மை தொழில் அதிகாரபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டு இருப்பதுடன் பொம்மை கலைஞர்கள் அரசாங்கத்தால் கவுரவிக்கப்பட்டும் வருகிறார்கள்.

இது தவிர ஆண்டுதோறும் மார்ச் மாதம் 3-ந் தேதி ஜப்பானில் பொம்மைத் திருவிழாவும் நடக்கிறது. சிறுமிகள் கொண்டாடும் இந்த விழாவில் மன்னர் விதவிதமான பொம்மைகளுடன் கலந்து கொள்வதும் சிறப்பு ஆகும்!



அம்மா' என்று நினைத்தவள் முகத்தை வேறுபுறம் திருப்பிக் கொண்டாள்.

சேகர் சற்று நேரம் கழித்துத் தான் அன்று வீடு திரும்பினான். வீட்டில் மீனா இல்லை என்றவுடன் சற்றே திடுக்கிட்டான்.

''அம்மா வீட்டுக்குப் போயிருக்காடா'' என்றாள் கமலாம்மா.

'ஏன்? ஏதாவது கோபமா? கோபிக்க ஒன்றும் சண்டை போடவில்லையே' என்று நினைத்தான். குழந்தை விஷய மனவேறுபாடு காரணமா? மெல்ல அம்மாவிடம், ''சும்மாத் தானே போயிருக்கா?''

''ஏன், நீ ஏதாவது சண்டை போட்டியா? இப்படி கேக்கறே?''

'அம்மாவுக்கு எப்படித் தெரியும்' என்று விளம்பரத்தில் வருவது போல் ஆச்சர்யமாய் இருந்தது சேகருக்கு. பெற்றவள் பிள்ளைகளின் நாடி பிடித்துப் பார்ப்பதில் கில்லாடிகள் தான்.

''இல்ல. சும்மா கேட்கக் கூடாதா?''

''அவ அம்மா வந்திருந்தாங்க. ரெண்டு நாள் கூட்டிப்போறதா சொன்னாங்க. சரின்னு சொன்னேன். உன்னையும் வரச் சொன்னாங்க. நாளை ஞாயிறு தானே போயிட்டு வரியா?''

''போய்த் தங்க முடியாது. நாளைக்கு சாயந்தரமாப் போயி அவளைக் கூட்டி வந்துடறேன்.''

முகம் கழுவி வாரப் பத்திரிகையைப் புரட்டியபடி படுக்கையில் சாய்ந்தான். சில மாதப் பழக்கம் தான் என்றாலும் மீனா இல்லாதது வெறுமையைத் தந்தது. காதல் தோல்வி, கட்டாயத் திருமணம், பணப்பிரச்சினை என்று எல்லாமும் சேர்ந்து அவனுக்கு மீனாவின் மேல் வெறுப்பைத் தந்ததென்னவோ உண்மை. ஆனால், தாயின் வார்த்தைக்கு கட்டுப்பட்டு, அவளை ஒதுக்காமல் நெருங்கினான்-உடலளவில். இரவு மனைவியின் அண்மையே அவன் பிரச்சினைகளுக்கு வடிகாலாய் விளங்குவதைப் புரிந்து கொண்டான். தன்னிடம் ஒரு வார்த்தை கூட சொல்லாமல் அவள் கிளம்பிப் போனது மனதில் உறுத்தலை தந்தது. ஏன்? தன்னை அவள் மதிக்கவில்லையா?

அவன் எண்ண ஓட்டத்தைத் தடுக்கும் விதமாய் கமலாம்மாள் காபியுடன் உள்ளே வந்தாள். காபியைக் கொடுத்துவிட்டு அவன் அருகிலேயே உட்கார்ந்து கொண்டாள்.

''என்னம்மா?''

''உன்கிட்ட ஒரு முக்கிய விஷயம் பேசணும்.''

''சொல்லு'' காபியை ரசித்து உறிஞ்சினான்.

''நம்ம உஷா கொஞ்ச நேரத்துக்கு முந்தி ஃபோன் செஞ்சா''

''ம். நல்லா இருக்கா இல்ல?''

''அவளுக்கென்னப்பா உன்னைப் பத்தித்தான் கவலைப்பட்டா''

கீழ் உதட்டைப் பற்களால் கடித்துக் கொண்டான்.

''சரி, இப்ப அதைப் பத்தி என்னா வேற என்ன சொன்னா?''

சற்று நிதானித்துத் தயங்கினாள் கமலாம்மா.

''சொல்லேம்மா. ஏன் இப்படி என் பொறுமையை சோதிக்கற''

''இ... இல்லடா. நீ, இதை எப்படி எடுத்துப்பியோனு''

''முதல்ல சொல்லு'' காபி கப்பை அவளிடம் நீட்டினான்.

''உஷா வகையில- அவ மச்சனோட மனைவி தம்பியாம். அமெரிக்காவில் டாக்டருக்கு படிச்சுட்டு பிராக்டிஸ் பண்றானாம். நல்ல டாக்டர் இடமாப் பார்க்கறாங்களாம். இந்த மாசக் கடைசியில வந்துட்டு, ஒரு ரெண்டு மாசம் தங்குவானாம். நம்ம ஆஷா ஜாதகத்தை

கொடுத்துப் பார்க்கலாம்னு...''

விருட்டென்று எழுந்தான் சேகர். அம்மாவை முறைத்தான்.

''காசுக்கு விக்க உனக்கு இன்னொரு பிள்ளை இல்லையேம்மா. இல்ல, என்னையே இன்னொரு தடவை விக்கப் போறியா? அதனால தான் மீனாவைப் பிறந்த வீட்டுக்கு அனுப்பிட்டியா?''

வார்த்தைகள் ஒவ்வொன்றும் ஊசியாய் சுசீலாம்மா மனதை தைத்தன. கண்களில் நீர் கோர்க்க கண்களைத் தழைத்துக் கொண்டு, ஒன்றும் பேசாமல் எழுந்து போனாள்.

கையில் எடுத்திருந்த புத்தகத்தை வீசி எறிந்து விட்டு கண்மூடிப் படுத்தான் சேகர்.

யார் மீது கோபம்? அம்மா மீதா? வீட்டை கஷ்டப்பட்டு கட்டி, அப்பா போன பின்பும் ஓடாய்த் தேய்ந்து உழைத்தவள் மீதா?

சகோதரிகள் மீதா? வயதுக்குரிய ஆசைகளைக்கூடப் படாமல், அதிகம் படித்து முன்னேறுபவர்கள் மீதா?

மனைவி மீதா? இரண்டரை லட்சத்தைத் தூக்கிக் கொடுத்து விட்டு வாயே திறக்காமல் இருக்கும் தன் உதாசீனங்களை பொறுக்கும் அவள் மீதா.

தன் மீதா? தன் இயலாமை மீதா? படிக்கும் காலத்தில் கோட்டை விட்ட தன் அலட்சியத்தின் மீதா?

திரும்பிப் படுத்தான்.

கண்களில் நீர் குளம் கட்ட எழுந்து போன அம்மாவை நினைக்க பரிதாபமாய் இருந்தது. மெல்ல எழுந்து உள்அறையில் அவளைத் தேடிப் போனான். டைனிங் டேபிளில் அவள் அமர்ந்து காய் நறுக்கிக் கொண்டிருந்தாள். அவ்வப்போது மூக்கை உறிஞ்சி கன்னத்தில் வழியும் நீரைத் துடைப்பது தெரிந்தது. அருகே சென்று அவள் தோள் தொட்டு ''அம்மா'' என்றான். அவள் நிமிர்ந்து பார்க்கவில்லை.

''சாரிம்மா ஏதோ இயலாமை, கோபம். அதை உன் மேல காட்டிட்டேன். எனக்கும் உன்னை விட்டா யார் இருக்கா? சொல்லு.'' அருகே சேர் இழுத்துப் போட்டு உட்கார்ந்தான். அவன் வார்த்தைகள் அவளுள் இதமாய் இறங்க, மகனை நீர் நிறைந்த கண்களால் நிமிர்ந்து பார்த்தாள்.

''சாரிம்மா. ப்ளீஸ் அழாதே.''

கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

''சரி, சொல்லு. இது நல்ல இடம்னா ஆஷாவுக்கு முடிச்சுடலாம். ஆனா பணத்துக்கு என்ன செய்ய?''

''வீட்டை அடமானம் வச்சு கடனைக்கிடனை வாங்கித் தான் எப்படியாவது செய்யணும். என்னைக்கு இருந்தாலும் செய்ய வேண்டியது தானே?''

''ரொம்ப எதிர்பார்ப்பாங்களா?''

''அப்படி ஒண்ணும் பெரிசா எதிர்பார்க்க மாட்டாங்கன்னு தான் உஷா சொல்றா. நேர வந்து பேசினா தெரியும். இவ அமெரிக்கா போய் மேல படிக்கணும்னு ஆசைப்பட்டது நிறைவேறும்.''

அவன் ஆயாசமாய் கண்களை மூடி கொண்டான். அவன் ஆசைகள் மட்டு நிறைவேறப் போவதில்லை. சுதா அவ வாழ்க்கைத் துணை ஆகப்போவதில்லை கடனில்லாத வாழ்வு இருக்கப் போவதில்லை சில காலம் குழந்தை வேண்டாம் என்பதற் மீனா முகத்தைத் தூக்குகிறாள். குழந்தை பெற் அதைப் படிக்க வைத்து... என்று இந்த அவ ஓயப்போகிறது? அதுவும் குழந்தை பெண்ணாகப் பிறந்துவிட்டால், அதற்கு திருமணம் செய்ய வேண்டும்... ஐயோ!

''சரிம்மா, நீ அவங்களை வர சொல்லிடு.''

உள்ளே சென்று கண்மூடி படுத்தான்.

# 8



''ஹலோ'' என்றபடி இயல்பாய் வந் தன்னைப் பெண் பார்க்க வந்தவர்கள் மு அமர்ந்து கொண்டாள் ஆஷா. அக்கா உஷாவி திருமணத்தில் பார்த்த பல முகங்கள். அக் கணவன் ராகுலும் வந்திருந்தான். ராகு குடும்பம் போலவே இவர்களும் படி பண்பாளர்களாய் இருந்தார்கள்.

நேரடியாகவே, ''எங்களுக்கு ஆஷாவ ரொம்பப் பிடிச்சிருக்கு. ராகுல் கல்யாணத்தி போதே அவ துறுதுறுப்பு, அழகு எல்லா பிடிச்சுப் போய் தான், அவளைப் பார்க்கலாமேனு முடிவு செஞ்சோம். ராகு கல்யாண போட்டோல இருந்த ஆ ஃபோட்டோவை சுரேஷுக்கு ஃபேக் பண்ணினோம். அவனுக்கும் பிடிச்சுப் போச் இப்ப நேர்லயும் பார்த்தாச்சு.. என்னடா சுரேஷ் சொல்றே?''

அவன் லேசாக வெட்கப்பட்டு சிரித்து தலைகுனிந்தான். பின் மெல்ல நிமிர்ந்து ''எனக்கு சம்மதம். அவங்களுக்கு?'' என்றான்.

சேகர் தவித்தான். பிடித்து விட்டது என்று பகிரங்கமாய்ப் பேசிய பின் சீர் வரிசைகளில் பேரமா பேச முடியும்? தங்கை தலையசைத்து விடுவாளோ என்று கலக்கமாய் அவளைப் பார்த்தான். அவளும் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். 'நீ என்ன அண்ணா சொல்றே?' என்றது பார்வை. அதன் ஓரத்தில் அவளுக்கு சுரேஷ் மீது பிடித்தம் இருப்பதும் புரிந்தது சேகருக்கு.

சுசீலாம்மா தான் இருவர் உதவிக்கும் வந்தாள். ''எங்க பொண்ணு நாங்க சொல்ற சொல்லை மீற மாட்டா. பொண்ணு என்ன தான் படிச்சிருந்தாலும், எப்படி சபை நடுவில் தன் விருப்பத்தைச் சொல்லுவா? மீனா, ஆஷாவை உள்ளே கூட்டிப் போய், அவ விருப்பத்தைக் கேளு. அதுக்குள்ள அவ அண்ணனும் நானும் மேலே பேசிடறோம்.''

ஆஷா மீண்டும் ஒரு முறை சுரேஷை நிமிர்ந்து பார்த்து விட்டு மீனாவுடன் உள்ளே போனாள். சுரேஷின் அம்மா சாவித்திரி, ''கல்யாணத்தைப் பொறுத்தவரை குழந்தைகள் விருப்பம் தான் முக்கியம்னு நினைக்கற குடும்பம் எங்க குடும்பம். நாங்க எதுவும் டிமாண்ட் பண்ண மாட்டோம்'' என்று ஆரம்பித்தாள்.

சேகர் சின்ன பெருமூச்சு விட்டான். சுரேஷின் அப்பா தொடர்ந்தார்...

''கல்யாணத்தை சிம்பிளா ஒரு கோவில்ல வச்சுடலாம். என்ன ரெண்டு குடும்பத்தைச் சேர்ந்த நெருங்கிய உறவுன்னு ஒரு ஐம்பது பேர் வருவாங்களா? போதும்.''

அம்மாவும் மகனும் வாயெல்லாம் பல்லானார்கள். சேகர் முகத்தில் அப்போது தான் இறுக்கம் தளர்ந்தது.

''மூணு நாள் மண்டபம் வாடகை தண்டமாக் கொடுக்கணும். வேண்டாமே. இதுல இருபதிலிருந்து அம்பது வரை மிச்சமாகும். என்ன நான் சொல்றது?''

சுரேஷின் அப்பா சொல்ல, சேகர் பலமாகவே தலையாட்டினான். ''மூணு வேளை ஆயிரக்கணக்கான பேர் சாப்பாடுன்னா, ஒன்றரை லட்சம் ஆகாதா? அதுவும் மிச்சம் தானே.''

சேகரின் அம்மா, ''சீரப்புக்கும் பாட்டு, நாயனம், கூடை கூடையாய் பூ உறவினருக்கு உபசாரம், துணி மணி, தாம்பூலப் பை... இதெல்லாம் ஒரு அம்பதாயிரம் ஆயிடும். எதுக்கு இந்த வெட்டி செலவு''

''கரெக்ட் தான். நீங்க சொல்றா மாதிரி எல்லாக் கல்யாணத்தையும் சிம்பிளா நடத்தினா, எத்தனையோ பணம் மிச்சமாகும்.'' அம்மா யதார்த்தமாய்ப் பேசி பொரிவில் மாட்டினாள்.

''அதே தான் நாங்க சொல்ல வரோம். ஆஷாவுக்காக நீங்க வெள்ளிப் பாத்திரம், புடவை, பாத்திரம்னு எதுவும் வாங்க வேண்டாம். ஒரே ஒரு பட்டுப் புடவை முகூர்த்தப் புடவை போதும். கல்யாணச் செலவு, பண்ட பாத்திரம், புடவை செலவுனு எதுவும் வேண்டாம். அந்தப் பணத்தை, என்ன ஒரு நாலு லட்சம் ஆகுமா? அப்படியே போட்டு நம்ம பிள்ளைகளுக்கு ஒரு இனிசிக் கட்டிடலாம். தாம்பரத்துல மூணு கிரவுண்டு வாங்கிப் போட்டுடலாம். சுரேஷ் அந்த வருஷத்துல இந்தியா வந்து செட்டில் ஆயிடுவான். அவன் வரும் போது இனிசிக் ரெடியாயிடும்..''

அவர்கள் பேசிக் கொண்டே போக சுசீலாவும் சேகரும் வாயடைத்துப் போனார்கள்.

''யோசிச்சு சொல்லுங்கனுட்டுப் போயிருக்காங்க. என்ன பதில் சொல்லப் போறோம்?'' சேகர் டென்ஷனில் கிட்டத்தட்ட கத்தினான்.

சுசீலா அமைதியாக அவனைப் பார்த்தாள்.

''இங்க பாரு சேகரா, உஷா சொன்ன மாதிரி, ஆஷாவுக்கும் அவ தகுதிக்கு ஏத்த மாதிரி தான் மாப்பிள்ளை பார்த்தாகணும். என்னைக்கு இருந்தாலும் செய்ய வேண்டிய செலவு. இந்த வரனை விட்டா இன்னொரு வரன் இதை விட அதிகமாக் கேட்பாங்களே தவிர கம்மியா கேட்கமாட்டாங்க. இது வரதட்சணை இல்ல. கல்யாணச் செலவுக்கு பதிலா, அந்தப் பணத்தை நல்ல விதத்துல முதலீடு செய்ய கேட்கறாங்க. நாம மீனா வீட்டு மனுஷங்ககிட்ட கேட்கலையா அது மாதிரி தான். நம்ம ஆஷா தான் இதனால லாபம் அடையப் போறா..''

"மீனா வீட்டுல இவ்வளவு கொடுன்னு நாம டிமாண்ட் பண்ணலை."

"அது சரி. ஆனா ஒரு பி.எஸ்சி. பட்டதாரிக்கே அவங்க ரெண்டரை லட்சம் கொடுத்திருக்கும் போது அமெரிக்காவ எம்.எஸ். பண்ணின டாக்டருக்கு இவங்க நாலு கேட்கறது கம்மி. கல்யாண மார்க்கெட்ல படிப்புக்கு தகுந்த மாதிரி மாப்பிள்ளைகளுக்கு ரேட், தெரியுமா?"

அம்மா சொல்லிவிட்டு எழுந்து போய் விட்டாள்.

மறுநாள் சுரேஷ் வீட்டினருக்கு ஃபோன் போட்டு சம்மதத்தைத் தெரிவித்து விட்டான் சேகர்.

9



இரண்டு நாட்களில் சுரேஷின் அம்மா தன் உறவினர் பெண்கள் சிலரை அழைத்து வந்தாள்.

"நம்ம ஆஷாவைப் பார்க்கணும்னு ஆசைப்பட்டாங்க. அதான் கூட்டி வந்தேன். இது என் அக்கா, என் நாத்தனார். இது என் கணவரோட அத்தை..."

ஆஷா அப்போது தான் கல்லூரியிலிருந்து திரும்பி இருந்தாள். மீனா எல்லோருக்கும் அவசரமாய் கேசரி கொறி காபி தயாரித்தாள்.

சுசிலாவிடம் ஒரு நகைப் பெட்டியைத் தந்தாள் சுரேஷின் அம்மா. "இது ஆஷாவுக்கு நான் செஞ்ச நெக்லஸ். அஞ்சு பவுன். கல்யாணத்தன்னைக்கு சபையில் தரேன். இப்ப கம்மா போட்டுக் காட்டச் சொல்லுங்க."

மிக ஆசையாய் ஆவலாய் சந்தோஷமாய் பெற்றுக் கொண்டாள் சுசிலாம்மா. அலங்கரித்துக் கொண்டிருந்த ஆஷாவின் அறை நோக்கி சின்னப் பெண் போல் ஓடினாள். அவள் ஓட்ட வேகத்தைத் தடை செய்தது ஹாலில் பெண்களின் பேச்சு.

"சாவித்திரி, கல்யாணம் சிம்பிள், பணமா கையில வாங்கி இன்னிக் கட்டப்போறோம்னு சொல்லிட்ட சரி... நகை நட்டாவது போடுவாங்களா, இல்லையா?"

"அட, எனக்காக இப்படி கேட்கறே; நானே பெண்ணுக்கு அஞ்சு பவுன் போடும் போது, அவங்க தங்க மகனை மூனியாவ அனுப்புவாங்க? குறைஞ்சது இருபது பவுன் போடுவாங்க"

ஆசையாய் மகளிடம் நகையை நீட்ட வந்த சுசிலா அப்படியே ஸ்தம்பித்தாள்.


சலவை பவுடர்
தேவை இல்லாத
நவீன வாஷிங் மிஷின்

வாஷிங் மிஷின் இன்று அத்தியாவசிய பொருளாகி விட்ட என்பதால் தேவையும் அதிகம். என விதவிதமான வாஷிங் மிஷின்கள் மட்டுமின்றி அதிநவீனமாகவும் வந்து குவிந்த வண்ண உள்ளன.

ஜப்பானை சேர்ந்த



சான்யோ நிறுவனம் புதுவகை வாஷிங் மிஷின் ஒன்றை தயாரித்து விற்பனைக்கு அறிமுகப்படுத்தி உள்ளது. இதில் துணி துவைப்பதற்கு சலவை பவுடர் எதுவும் பயன்படுத்த தேவை இல்லை. தண்ணீரில் உள்ள ஆக்டிவேட்டட் ஆக்சிஜனை பயன்படுத்தி துணியில் உள்ள அழுக்கு மற்றும் கறைகளை இந்த வாஷிங் மிஷின் போக்குகிறது.

இந்த வாஷிங் மிஷினால் லாண்டரி செலவு குறைவு என்பதுடன் சுற்றுப்புறச் சூழலும் பாதிக்கப்படுவதில்லை.


சேகர் ஒ... மின்விசிறியை வெறித்தபடி படுத்திருந்தான். அவ... சாப்பிட்ட பின் மெல்ல நகை... விஷயத்தை அம்மா... விவரித்திருந்தாள்.

"அண்ணா, கல்யாணத்துக்காக ரொம்ப... கஷ்டப்படாதே. ப்ளீஸ். இப்... என் கல்யாணத்துக்கு என்ன அவசரம்? ஒரு அஞ்சு வருஷ... வேலை பார்க்கறேன். பிறகு பார்த்துக்கலாம்..."

ஆஷா கண்களில் நீர் திரள அண்ணன் கரம் பற்றி மென்மையாய்ப் பேசினாள்.

அம்மாவிடம் 'உர் உர்' என்று அவ்வப்போது உறுமினாலும், தங்கைக்கிட்ட உருகித் தான் போவான் சேகர்.

"சீ, அசடு. நல்ல சம்பந்தம் வந்திருக்கு... கல்யாணம்னா இந்த டென்ஷனெல்லாம் சகஜம். போ, போய் கல்யாணப் பெண்ணா லட்சணமா இரு. போ" என்று அவளைத் தேற்றிவிட்டு வந்து படுக்கையில் விழுந்தவன் தான். மின்விசிறி அவனின் தீரா திருமணப் பிரச்சினை போல் நிற்காமல் சுழன்றது.

பெண்ணுக்குத் திருமணப் பட்டுப் புடவை ஒன்று, திருமாங்கல்யம், ஐம்பது பேருக்கு சாப்பாட்டுச் செலவு, கோவில் மண்டப அரை நாள் வாடகை மற்றும் நாலு லட்சம் என்று தான் செலவைப் பட்டியலிட்டிருந்தான் சேகர்.

அவர்கள் எதுவும் வேண்டாம் என்றதில் நகையையும் சேர்த்து விட்டான். அம்மா கழுத்தில் போட்டிருந்த இரண்டு பவுன் சங்கிலி இரண்டு பவுன் வளையல் தவிர ஒரு ஐந்து பவுன் சங்கிலி வைத்திருந்தாள். ஆஷாவின் கைகளில் மூன்று பவுன் வளையல் உஷா செய்து போட்டது இருந்தது. அவள் தோடு மோதிரம் என்று பத்து பவுன் ஒப்பேற்றி விடலாம் என்று நினைத்திருந்தான். இப்போது சாவித்திரி மேலும் பத்து பவுனை ஏற்றி விட்டாள்! என்ன செய்யப் போகிறான்?

வீட்டை அடமானம் வைத்து, அப்பாவின் நண்பரிடம் கடன் பெற்று, அலுவலக லோன் போட்டு நாலரை லட்சம் ஒப்பேற்ற கணக்கிட்டுக் கொண்டிருக்கிறான். அதில் மேலும் நாற்பதாயிரத்திற்கு எங்கு போவான்?

மெல்ல வளையல் சப்தம் கேட்க, கண் விழித்துப் பார்த்தான். மீனா அவனருகே பாலை வைத்து விட்டு, சுற்றி வந்து தன்னிடத்தில் படுத்துக் கொண்டாள்.

'அமுதசுரபியைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு ஏன் கவலைப்பட வேண்டும்?'

மெல்ல மனைவியைத் தன் பக்கம் திருப்பினான்.

"நான் இன்னும் மாத்திரை போட்டுக்கலை" என்றாள் அவள் கடுப்புடன்.

"ப்சு, அதுக்கில்லை. உன்கிட்ட ஒரு விஷயம் பேசணும்."

"என்னை மதிச்சு கூட ஏதாவது பேசுவீங்களா? அதிசயம் தான்."

அவள் கிண்டலைப் பொருட்படுத்தாமல்,

"இங்க பாரு மீனா, ஆஷா கல்யாணத்துக்கு பணத்துக்கு நான் அலையறேன். இன்று அந்தம்மா வந்து இருபது பவுன் நகை கேட்டுட்டுப் போயிட்டாங்க. பத்து பவுன் வீட்ல இருக்கு. உன் நகையில ஒரு... பத்து பவுன் கொடுத்தா..."

மீனா அவனை முறைத்துப் பார்த்தாள். அம்மா சொன்ன அறிவுரை எல்லாவற்றையும் விட அவன் அலட்சியம் தான் மனதில் நின்றது. ஒரு நாள் 'சாப்பிட்டாயா?' என்று கேட்டிருப்பானா? டாக்டர் வீட்டைத் தவிர எங்காவது கூட்டிப்போயிருக்கிறானா? இரவில் தன் விருப்பம் கேட்டிருக்கிறானா? எப்போதுமே தான் தன் சுகம். சே, என்ன மனிதன்?

"இங்க பாருங்க, எனக்கு எங்கப்பாம்மா போட்ட ஒவ்வொரு நகையிலும் அவங்களோட உழைப்பும் வியர்வையும் இருக்கு. அதை என்னால தர முடியாது. வேணும்னா, ஒரு பதினஞ்சாயிரம் லோன் போட்டுத் தரேன். அது தான் முடியும்."

"புரிஞ்சு தான் நீ பேசறியா? பதினஞ்சாயிரம் லோனோட, உன் பத்து பவுன் நகை எனக்கு எவ்வளவு உதவியா இருக்கும். என்னை விட உனக்கு நகை பெரிசாப் போச்சு இல்லை?"

"இல்லங்க. நகைக்குப் பின்னாடி எங்கப்பாவோட உழைப்பு, எங்கம்மாவோட சிக்கனம் இதையெல்லாம் நான் பார்க்கறேன். எங்கப்பா கொடுத்த ரெண்டரை லட்சத்தை நீங்க செலவு செஞ்சப்ப ஏன்னு கேட்டேனா? ரெண்டு பெண் பிறந்தவுடனேயே நகை நட்டுனு உங்கம்மா சேர்த்து வச்சிருக்க வேண்டாமா?"

"எங்க வீட்டு சூழல் வேற மீனா. சொந்த வீடு கட்டியிருக்காங்க. எங்கப்பா போயிட்டாரு. எங்கம்மா எவ்வளவு கஷ்டப்பட்டு படிக்க

வச்சாங்க தெரியுமா?''

''எல்லார் வீட்லயும் பிள்ளைகளை கஷ்டப்பட்டுத்தாங்க படிக்க வக்கறாங்க. என்ன, உங்க வீட்ல அளவுக்கு மீறி ஆசைப்பட்டுட்டாங்க. அவ்வளவு தான். நானும் தான் நல்லாப்படிச்சேன். எங்கப்பா என்னை டாக்டருக்கா படிக்க வச்சாரு? டிகிரி படிக்க வக்க, நல்ல அரசு உத்யோகம் கிடைக்க எனக்கு பயிற்சி கொடுத்தாரு. டாக்டர் இஞ்சினியர்னு ஏன் படிக்க வைப்பானேன், அதுக்கும் மேல மாப்பிள்ளை பார்க்கணும்னு அவதிப்படுவானேன்?''

அவள் சொல்வதில் லாஜிக் இருந்தாலும், அவனால் ஏற்க முடியவில்லை. நன்றாகப் படிக்கும் அறிவுள்ள பெண்கள் மேலே படிக்கவே கூடாதா? ஐந்தாயிரம் சம்பளத்தில் ஒரு உத்தியோகம் தேடிக் கொண்டு அடுப்படியில் வேகத்தான் வேண்டுமா? கடினமாக உழைத்துப் படித்தாள் உஷா. இன்று டெல்லியில் ராஜ வாழ்வு வாழ்கிறாள். கார், பங்களா, டிரைவர், வேலையாட்கள், சமையல்காரி என்று என்ன அரச போக வாழ்வு! இதில் தவறென்ன?

இந்திய ஆண்கள் பெண் வீட்டிலிருந்து எதிர்பார்ப்பதை விட்டு விட வேண்டும். அப்போது தான் பெண் சிசுக் கொலை நிற்கும். பெண்கள் கட்டுப்பாடு இல்லாமல் முன்னுக்கு வர வேண்டும்.

மீனாவும் ஏதேனும் புரொபஷனல் கோர்ஸ் எடுத்திருந்தால், இன்று அவன் வாழ்க்கைத் தரமே வேறாக இருந்திருக்கும் என்று எண்ணியவன் அவளை ஒரு கையால் அப்படியே இறுக அணைத்துக் கொண்டான்.

''இதுக்கொண்ணும் குறைச்சலில்லை. அதுவும், ஓசியில கிடைக்குது இல்ல'' மீனா முணுமுணுக்க, சேகர் அப்படியே அந்தப் பிடியைத் தளர விட்டான். பால்கனியில் தலைகாணி போட்டு படுத்து விட்டான்.

வீட்டை அடமானம் வைத்தான். அப்பாவின் நண்பரிடம் கடன் வாங்கினான். மீனா போட்ட லோன் பணத்தில் கொஞ்சம் நகை வாங்கினான். அம்மா நகைகளை மெருகேற்றினாள். உஷா தங்கைக்காக ஐந்து பவுனில் வளையல்கள் செய்திருந்தாள். அதையும் சேர்த்து இருபது பவுன் தேற்றிவிட்டான்.

மாமனார் தனக்குப் போட்டிருந்த மோதிரத்தை சுரேஷுக்குப் போட்டு விட்டான்.

முறைத்த மீனாவிடம், ''உங்கப்பா வேர்வை நாத்தம் தாங்கலை. அதான் கொடுத்துட்டேன்'' என்றான். மீனா முகம் விழுந்து போனதை ரசித்தான்.

## 10



திருமணம் முடித்து இரண்டு மாதங்களில் ஆஷாவை அமெரிக்காவுக்கு அனுப்பி வைத்தான். நிதானமாய் உட்கார்ந்து கணக்கு பார்த்த போது இவன் சம்பளம் முழுதும் கடனுக்கான வட்டிக்கே சரியாகப் போவது புரிந்தது. மீனாவின் சம்பளத்திலும் கால் பகுதி எடுத்தால் தான் கொஞ்சமாவது அசலில் சேரும் என்று கணக்கிட்டான். மீதியில் கஷ்டப்பட்டு ஜீவனம் ஓடும்.

கால்குலேட்டரை மேஜை மீது வீசிவிட்டு அப்படியே கால் நீட்டி சோபாவில் சாய்ந்தான். இரண்டு நாட்கள் முன்பு தான் உஷா தாயாகப் போகும் நல்ல செய்தியை வாயெல்லாம் பல்லாய் அம்மா தெரிவித்தாள். அவனுக்கு உடனே டெல்லி போய் மகளைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல். ஆயிரக்கணக்கில் பணமாகுமே என்று வாயை மூடிக் கொண்டிருந்தான்.

செய்தி கேட்டதிலிருந்து சேகருக்கு வயிற்றில் புளி கரைத்தது. வளைகாப்பு, பூச்சூடல், பிரசவம் என்று செலவுப் பட்டியல் மனதில் ஓடியது. இப்போது தானே ஆஷா திருமணம் முடிந்திருக்கிறது. அதற்குள் இவளுக்கு என்ன அவசரம் குழந்தை பெற? தங்கையை மனதில் திட்டியது அவனுக்கே வெட்கமாய் இருந்தது. என்ன இது? என் இயலாமைக்கு வாழ்த்தாமல் சபிப்பதா? ஏன் இத்தனை கீழ்த்தரமானவனானேன்.

'ஐயோ, தெய்வமே. என் தங்கை நல்லபடி பெத்துப் பிழைக்க அருள்செய்யப்பா' என்று மனதுள் கதறினான். அன்று மாலையே உஷா இவனோடு தொலைபேசியில் பேசினாள்.

''அம்மா சொன்னாங்களா, அண்ணா?''

''நான் மாமாவாகப் போகும் நல்ல செய்தியத் தானேம்மா? ஓ! ரொம்ப ரொம்ப சந்தோஷமா இருக்கும்மா.''

''ஒரு போன் போட்டு பேசவேன்னு நினைச்சேன்.''

சற்று அசடு வழிந்தான் சேகர்.

''சரி அதை விடு. நீ எப்பண்ணா இது மாதிரி நல்ல விஷயத்தை சொல்லப் போறே? நான் அத்தையாக வேண்டாமா?''

சேகரால் பதில் பேச முடியவில்லை. குரல் அடைத்தது.

''அண்ணா?''

''ம்.. சொ.. சொல்லும்மா.''

''நான் கேட்டது உன்னை அப்செட் பண்ணிடுச்சா?''

''அ.. அதெல்லாம் இல்லம்மா.''

''சரி அண்ணா, முக்கியமா ஒரு விஷயம் பேசத் தான் போன் செஞ்சேன்.''

''எஸ்.டி.டிம்மா. நீ பாட்டுக்குப் பேசறியே.''

''அது பரவாயில்லை. என் வளைகாப்புக்கு அம்மா வளையல் செய்யணும்னு ஏதாவது சொல்வாங்க. நீ சிரமப்படாதே. நான் பத்தாயிரம் பணம் அனுப்பறேன். அதுல ஒரு ஜதை வளையல் நீ வாங்கினா மாதிரி வாங்கிக்கிட்டு வந்து சபையில வச்சுடு, என்ன?''

அவனுக்குக் கண்களில் மளுக்கென்று நீர் நிறைந்தது.

''வே... வேண்டாம்மா. மாப்பிள்ளைக்குத் தெரியாம நீ இப்படி செய்யக் கூடாது. என்ன செலவோடு செலவா ஒரு பத்தாயிரம்....''

''இல்லண்ணா. பத்தாயிரத்தோட நிற்காது. நீங்க மூணு பேர் டெல்லி வரப் போக சார்ஜ், புடவை அது இதுன்னு இழுத்துடும். இந்த ஐடியாவைக் கொடுத்ததே மாப்பிள்ளை தான். உங்கண்ணனை சிரமப்படுத்தாதேனு அவர் தான் பணம் கொடுக்கச் சொன்னார். இது நமக்குள்ள இருக்கட்டும். சரியா? பிரசவமும் நான் டெல்லியிலேயே தான் வெச்சுக்கப் போறேன். டாக்டர் லாங் ஜர்னி போக வேண்டாம்னுட்டார். நீ கவலைப் படாதே.''

இப்படிப்பட்ட தங்கையையா நேற்று சபிப்பது போல் நினைத்தோம் என்று வருந்தினான்.

தனக்கு மட்டும் ஏன் இப்படி ஒரு நிலை?

அப்பா உயிருடன் இருந்து செய்திருக்க வேண்டிய கடமைகள் தன் தோள்களில் விழுந்ததால்..

தங்கைகள் அதிகம் படித்து பெரிய இடங்களில் வாழ்க்கைப் பட்டதால்...

எல்லாவற்றையும் விட தான் படிக்க வேண்டிய காலத்தில் கோட்டை விட்டதால்... பெரிய உத்தியோகத்தில் உட்கார முடியாததால்...

## 11



''சார், வரலாமா?''

வாசலில் குரல் அவன் சிந்தனையைக் கலைத்தது. சோபாவிலிருந்து வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தான்.

சின்ன மாப்பிள்ளை சுரேஷின் அப்பா சதானந்தன் நின்று கொண்டிருந்தார்.

''அட வாங்க, வாங்க. உட்காருங்க.''

''என்ன வீட்ல யாருமே இல்லையா?'' கேட்டபடி உட்கார்ந்தார்.

''அம்மா கோவிலுக்குப் போயிருக்காங்க. ஒய்ப் சமைக்கறா.''

''நீ ஞாயிறை கொண்டாடிக்கிட்டு இருக்கியா?''

சிரித்துக் கொண்டான்.

''ஒண்ணுமில்லப்பா. நீங்க கொடுத்த பணத்துல மேல கொஞ்சம் போட்டு தாம்பரத்துல இடம் வாங்கியிருக்கேன். வாயேன் போய்ப் பார்த்துட்டு வரலாம். இன்னைக்கு பூமி பூஜை வெச்சிருக்கேன். நம்ம வீட்ல எல்லோரும் அங்க போயிட்டாங்க. உன் குடும்பத்தை கூட்டிப் போக வந்தேன்.''

அவர் உரிமையாய் பேசிக் கொண்டு போக அவனுக்கு எரிச்சல் பற்றிக் கொண்டு வந்தது. அவ்வளவு தொலைவில் பயணித்து ஒரு வெற்று இடத்தை அவன் பார்த்து என்ன செய்யப் போகிறான்? அதற்குள் அம்மா வந்து விட்டாள்.

''சம்பந்தியே வந்து அழைக்கும் போது வராமலா இருப்போம்? இதோ நொடியிலே கிளம்பிடறோம்'' என்று அம்மா புறப்பட்டு விட்டாள். அவனும் கடனே என்று கிளம்பினான்.

''காலையிலிருந்து தலைவலி வாந்தி

வலித்துப் பிரட்டல்னு உடம்பு சுகமில்லை. நான் இன்னொரு சமயம் வரேன்'' என்று மீனா மட்டும் கழன்று கொண்டாள். வெம்பும் முன் அவசரமாக அவன் தனியே அவளை ஓரம் கட்டி, ''வாந்தி வயத்தப் பிரட்டுதுனு சொன்னியே, மாத்திரை ஒழுங்காப் போடறியா?'' என்றான்.

''கல்யாணமான நாளா நீங்க கொடுத்த ஒரே பரிசு அதுதானே. ஒழுங்கா சாப்பிடறேன் போதுமா? நீயெல்லாம் ஒரு மனுஷனா? 'உடம்பு சுகமில்லைனு சொல்றியே, டாக்டர் கிட்ட போறியா? மாத்திரை போட்டுக்கறியா? ரெஸ்ட் எடுக்கறியா? தனியா இருப்பியா'னு ஒரு வார்த்தை கேட்கதுப்பில்லை. குழந்தை தடுப்பு மாத்திரைய மட்டும் ஒழுங்கா சாப்பிடறியானு கேட்கறீங்க. சே, என் முகத்துல முழிக்காம போயிடுங்க.''

அவள் குரல் அடக்கிக் கத்த, அவன் வெளியேறினான்.



இரண்டரை கிரவுண்ட் நிலம் வாங்கிப் போட்டிருந்தார்கள். ஐயர் வைத்து பூஜைக்குத் தயாராக இருந்தார்கள். இவர்கள் போனவுடன் பூஜை ஆரம்பித்தது. சாவித்திரி சுசீலா கரம் பற்றி வரவேற்றாள்.

ஏதோ கட்டப்பட்ட வீட்டைச் சுற்றிக் காட்டுவது போல் வெற்று இடத்தை சுற்றிக் காட்டினான் சுரேஷின் தம்பி சுஜா.

''இது பின்பக்கம். ஆயிரம் ஸ்கொயர் பீட்ல வீடு வரும். முன் பக்கம் பூரா மூணு மாடி ஆஸ்பத்திரி. வெறும் நிலமாப் போட்டு வச்சிருந்தா நாளைக்கு யாராவது ஆக்ரமிச்சு பிரச்சினை வரும்னு சுரேஷ் ஒரு நாலு லட்சம் அனுப்பினான். அதுல முதல்ல வீட்டை கட்டிடப்போறோம். பிறகு கொஞ்சம் கொஞ்சமா மருத்துவமனை. அஞ்சு வருஷங்கழிச்சு சுரேஷும் அண்ணியும் வரும் போது வீடு, ஆஸ்பத்திரி எல்லாம் ரெடியா இருக்கும். வீட்ல கீழ் தளம் பூரா எங்களுக்கு. மாடி பூரா உங்க சிஸ்டருக்கு ஐ மீன் சுரேஷ் அண்ட் அண்ணி.''

சுஜா யதார்த்தமாய் விளக்கிக் கொண்டு

## நாக்கு ரொம்ப நீளம்!

ஜெர்மன் நாட்டின் வடபகுதியில் உள்ள ஹம்பர்க் அருகில் தாங்ஸ்டெட் என்ற இடத்தை சேர்ந்த பெண் அன்னிகா இர்ம்னர், 12 வயதான இந்த பெண்ணின் நாக்கு எவ்வளவு நீளம் தெரியுமா? 7 செண்டி மீட்டர் நீளம். உலகிலேயே நீளமான நாக்குக்கு சொந்தக்காரர் இவர்தான். இதற்காக உலக கின்னஸ் சாதனையாளர் புத்தகத்திலும் இவர் இடம் பெறுகிறார்.

-கலைச்செல்வி மோகன்ராஜ், பெங்களூர்.

போக சுசீலா மகிழ்ந்து போனாள். சேகருக்கு வயிறு பற்றி எரிந்தது. எவனோ வியர்வை சிந்தி கடன்பட்டு லட்சக்கணக்கில் கொடுத்தால் அதில் சுகமாய் நிலம் வாங்கி மேலே எழுப்பிக் கொண்டு போவீர்கள். 'கீழ்தளம் பூராவும் எங்களுக்காம்' யார் காசை யார் அனுபவிப்பது? இங்கே ஒவ்வொரு அடியும் என் காசு, நான் கடனடைக்கிறேன், என் வியர்வை...

சட்டென்று ஸ்தம்பித்து நின்றான்.

'இது வெறும் நகை இல்ல. இதுக்கு பின்னாடி எங்கப்பாவோட உழைப்பும் வியர்வையும் இருக்கு.'

மீனா சொன்ன போது கோபம் வந்ததே. அதில் என்ன தவறு இருக்கிறது?

நானாக என் தங்கைகளுக்கு கொடுத்தால் பெருமை. பேரம் பேசி பெற்ற பணத்தில் வீடும் மருத்துவமனையும் கட்டி, 'உன் தங்கையை எப்படி ராஜாத்தியாக நடத்துகிறேன் பார்' என்று காட்டுவதில் பெருமை இல்லை என்றால், மீனாவின் பெற்றோரிடமிருந்து பணம் பெற்று தங்கை திருமணம் நடத்திய என் செயலும் தவறு தானே?

அவர்களாக முன் வந்து கொடுத்தார்கள் என்றாலும் அதில் ஒரு நயா பைசா மீனாவுக்காகப் பயன்படுத்தவில்லையே. ஏன், அவளை இதுவரை ஒரு மனுஷியாகக் கூட நடத்தவில்லையே.

இரண்டரை லட்சம் பணம்.

மாதா மாதா சம்பளம்.



பதினைந்தாயிரம் அலுவலக லோன்.

எல்லாம் கொடுத்து ஒரு நல்ல மனைவியாகத் தான் அவள் நடந்திருக்கிறாள். ஆனால் அவன் ஒரு நல்ல கணவனாக நடக்கவில்லையே. தன் சுயநலத்துக்காக குழந்தையைக் கூட மறுத்து, அதையும் குரூரமாய் வெளிப்படுத்தி, காதலி கிடைக்காத கோபம், பணப் பற்றாக்குறை என்று எல்லா விரக்தி வேதனையையும் அவள் தோள் மீது சுமத்தி..

அவன் வீடு திரும்பும் போது கை நிறையப் பூவும் இனிப்பும் வாங்கிக் கொண்டான்.

சுசீலா அவனை அதிசயமாய் பார்த்தாள்.

அதைவிட அதிசயமாய் பார்த்தாள் மீனா.

அவளை மேலும் ஆச்சர்யத்தில் ஆழ்த்தும் விதமாய், ''மீனா வரயா, வெளியே போய் வரலாம்'' என்றான்.

அவள் சின்ன மிரட்சியுடன் பார்த்து, ''டாக்டர் கிட்டயா? நான் மாத்திரை ஒழுங்காப் போடறேனே'' என்றாள்.

அவன் அடிபட்டுப் போனான். மெல்ல அவளை நோக்கி மென்மையாய் சிரித்தான். ''இல்ல. சும்மா பீச், கோவில், சினிமானு எங்கயாவது போயிட்டு வரலாமேனு தான் கூப்பிட்டேன்.''

அவள் சுருக்கென்று வழக்கம் போல் ஏதாவது சொல்வாள் என்று எதிர்பார்த்தான். அவளோ குழந்தையாய் துள்ளி உள்ளே ஓடி அழகாய் அலங்கரித்துக் கொண்டு வந்தாள்.

''போலாமா?''

அதுவரை உடல் ரீதியாக மட்டுமே அவளைப் பெண் என்று உணர்ந்திருந்தவன், அவளுள் இருந்த பெண்மையை முதல் முறையாய் தரிசித்தான்.

இரவு.

வழக்கம் போல் பாலை எடுத்து வந்து அவனருகே வைத்தவள், சுற்றிக் கொண்டு தன் படுக்கைக்கு போகாமல் அவனருகே அமர்ந்து அவன் நெஞ்சில் சாய்ந்து கொண்டு, ''பால் கொண்டு வந்திருக்கேன்'' என்றாள்.

புத்தகத்தைக் கீழே வைத்தவன், அவளை இறுக அணைத்துக் கொண்டான்.

''மீனாவைப் புதுசாப் பார்க்கறேன்.''

''நான் கூடத் தான் சேகரோட புது பக்கத்தைப் பார்க்கறேன். நீங்க இவ்வளவு மென்மையானவரா?''

அவளை மெல்ல விலக்கியவன் பெருமூச்சு விட்டு எழுந்து தலையணையில் சாய்ந்து பாலை பருகினான்.

''என்ன செய்ய மீனா? என் சூழல் அப்படி...''

''புரியுது. பணப் பிரச்சினை. சின்ன அச்சாணி எத்தனை பாரத்தைத் தான் தாங்கும்?''

''உன் கிட்ட இப்ப சொன்னா என்ன? பொருளாதாரத்துக்காக என் காதலையே விட்டுக் கொடுத்தேன். இன் பாக்ட் நான் காதலிச்ச விஷயமே வீட்ல யாருக்கும் தெரியாது. அவ சொல்லித் தான் உன்னை நெருங்கினேன். ஆனா, அவ சொன்னதை முழுசாப் புரிஞ்சுக்காம போயிட்டேன். அதனால தான் மனசளவுல உன்னை இத்தனை நாள் நெருங்காம போயிட்டேன். வெண்ணெய் திரண்டு வரும் நேரம் தாழிய உடைக்கறா மாதிரி இப்ப என்டா இதைச் சொல்றேனு நீ கேட்கலாம். என்னைப்பத்தி எந்த ரகசியமும் உன்கிட்ட மறைக்கக் கூடாதுனு நினைக்கறேன். நீயும் அப்படி இரு. இனிமேல் நமக்குள்ள எந்த ரகசியமோ அந்தரங்கமோ தனிப்பட கிடையாது, சரியா?''

மீனா ஒரு புன்னகையோடு தலையாட்டினாள்.

''நான் ஒரு பெண்ணை நேசிச்சது உனக்கு வருத்தமா இருக்கா?''

ஒரு நிமிடம் அவனை ஆழ்ந்து பார்த்தவள் இல்லை என்று தலையாட்டினாள்.

''அது உங்க கடந்த காலம். ஒருத்தரோட வாழ்க்கை பூரா கைகோர்த்து வரப்போறோம்னு நினைக்கறோம். சந்தர்ப்ப சூழ்நிலை காரணமா அது நடக்காம போயிடறது. அப்ப அது எப்படி தவறான செயலாகும்? என்னைப் பக்கத்துல வச்சுக்கிட்டே நீங்க வேற ஒரு பெண்ணை நேசிச்சா அது தப்பு.''

"ரொம்ப தெளிவா இருக்கே மீனா. உனக்கு இதுவரை நான் எதுவுமே வாங்கிக் கொடுக்கலை. ஏதாவது கேளேன். அப்போகூட சின்னதா கேளு."

சொல்லிவிட்டு அவன் நகைக்க, அவளும் சேர்ந்து கொண்டாள்.

பின் மெல்ல அவன் தோள் மீது சாய்ந்தபடி கேட்டாள்.

"நான் எது கேட்டாலும் கொடுப்பீங்களா?"

"என் சக்திக்கு உட்பட்டிருந்தா?"

"நிச்சயமா, உங்க சக்திக்கு உட்பட்டது."

"சரி, கேளு."

"எனக்கு குழந்தை வேணும்."

ஒரு நிமிடம் கண் மூடி யோசித்தவன், அப்படியே அவளை அணைத்து படுக்கையில் சரிந்தான்.

"டன் லைட்டை அணைக்கட்டுமா?"

அவள் கண்கள் மின்னின. "மைகாட், நிஜமாவா சொல்றீங்க? அப்ப.. அப்ப.. அந்த மாத்திரையெல்லாம்?"

"தூக்கிக் கடாசு."

ஆனந்தத்தில் அவனை இறுகக் கட்டிப் பிடித்து முத்தமிட்டாள். மெல்ல அந்த முத்தத்திலிருந்து விடுபட்டவன், "ஒரே ஒரு கண்டிஷன்" என்றான்.

"என்ன?"

"ஆண் குழந்தை மட்டும்தான் நீ பெத்துக்கணும்."

**12**



சுசீலா மகிழ்ந்து போனாள். அவசரமாய் போன் போட்டு மீனாவின் அம்மாவிடம் விஷயத்தைச் சொன்னாள். மரகதம்மாள் கைநிறைய இனிப்பும் பழமும் பூவும் எடுத்துக் கொண்டு மகளைப் பார்க்க ஓடிவந்தாள், கணவனுடன்.

"அடி ராசாத்தி, கூடிய சீக்கிரம் எங்களைப் பாட்டியாக்கப் போறியாக்கும்மா, என் தங்கமே!"

சேகர் கூட சந்தோஷத்தில் கூத்தாடினான். அவளைத் தாங்கினான். டாக்டரிடம் செக் அப்பிற்கு ஒழுங்காகக் கூட்டிப் போனான்.

கிட்டத்தட்ட மூன்றாம் மாதம் சமயம் அவளை ஸ்கேன் பார்க்க அழைத்தான்.

"டாக்டர் இப்ப பார்க்க வேண்டிய அவசியம் இல்லைனு சொன்னாரே"

"ஆமாம், ஆனா அது பெண்ணா இருந்துட்டா? எவ்வளவு சீக்கிரம் கண்டுபிடிக்கறோமோ அவ்வளவு நல்லதில்லையா?"

அவளுக்குப் பகீரென்றது. அவன் சொன்னதில் உறுதியாகத் தான் இருக்கிறான்.

அவள் முகம் வாடியதைக் கண்டு அவள் பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொண்டவன் "இங்க பாருடா, 'அது பெண்ணா இருக்கும், அதைக் கலைக்க வேண்டி வரும்'னு ஏன் நீ கவலைப்படறே? கடவுள் அருள்ல அது ஆணா இருந்துட்டுப் போகட்டுமே"

"இப்ப எல்லாம் ஸ்கேன் எடுத்தா, அது என்ன குழந்தைனு சொல்றதில்லையாம்."

"இல்ல அது என் நண்பன் டாக்டர் ரங்கா நடத்தற ஸ்கேனிங் சென்டர். அவன் சொல்லிடுவான்."

அவள் ஏக்கமாய் அவன் முகம் பார்த்தாள்.

"என்னம்மா?"

"தப்பா எடுக்க மாட்டீங்களே?"

"என்ன?"

"பெண்ணா இருந்துட்டா கலைச்சுத் தான் ஆகணுமா?" அவள் பயந்து கொண்டே கேட்டாள்.

ஒரு நிமிடம் அவன் தாடை இறுகி முகம் கடுமையாவது புரிந்தது. மறுநிமிடம் இளகினான்.

"இங்க பாரு மீனு, என் நிலைமை தெரிஞ்சுமா இப்படி கேட்கறே? எனக்கு மட்டும் என்ன வேண்டுதலா? நிர்ப்பந்தம். ரெண்டு தங்கைகள் கூடப் பிறந்தவன் தான். ஆனா பாரம் சுமக்க முடியலையே! எந்த நிமிஷமும் ஆஷா தாயாகப் போற செய்தி வரலாம். உஷா பிரசவ செலவை தானே பார்த்துக்கறதா சொல்லிட்டா. இருந்தாலும் அந்தக் குழந்தைக்கு ஒரு பவுன் சங்கிலியாவது வாங்கிப் போய் பார்க்க வேண்டாமா? ஆஷா அமெரிக்காவிலேயே பிரசவம் வச்சுக்கிட்டாலும், அவ புகுந்த வீட்டு மனுஷங்க அதுக்கு ஈடு பணம் வாங்கி இனிஷ் கட்டறேன்னு சொன்னாலும் சொல்வாங்க."

அவள் தலை குனிந்து நகம் சுரண்டினாள். அவனே தொடர்ந்தான், "இந்தக் கல்யாணக் கடனெல்லாம் அடைபடறதுக்குள்ள நம்ம குழந்தைக்கு வளர்ந்துடும். ஏற்கனவே உன் அரை சம்பளத்துல தான் குடும்பம் ஓடுது. இதுல குழந்தைக்கான செலவு, படிப்பு செலவுனு எவ்வளவு இருக்கு? அந்தக் குழந்தை பெண்ணாப் பிறந்துட்டா, திரும்ப கல்யாணக் கடன், பிரசவ செலவு, பண்டிகை சீருனு எவ்வளவு இருக்கு? என்னால சத்தியமா செலவழிக்க முடியாதும்மா, முடியாது. ப்ளீஸ் என்னைப் புரிஞ்சுக்க. எனக்கு சக்தி இல்ல. பணமில்ல."

நிமிர்ந்த அவன் கண்கள் கலங்கி இருப்பதைப் பார்த்து பதறிப் போனாள் மீனா. இரண்டு நிமிடத்தில் தயாராகி "கிளம்பலாமா?" என்று வந்து நின்றாள்.

ஸ்கேன் சென்டரில் கும்பல் அதிகம் இருந்தது. அதிலும் பல பெண்கள் நிறைமாத வயிற்றுச் சுமையோடு அடுத்துப் போய் அமர்ந்திருந்தார்கள். இவர்கள் வருவதைப் பற்றி முன்பே சொல்லி இருந்ததால், போனவுடன் டாக்டர் ரங்கா இவர்களைச் சந்தித்தான்.

"வாடா, வாங்க. கிளினிக் போகணும். உனக்காகத் தான் காத்திருக்கேன். என்ன பிரச்சினை? ப்ளீடிங் ஏதாவது?"

"இல்ல. பிரச்சினை எதுவுமில்லடா. ஒரு ஸ்கேன் பார்த்துடலாமேனு"

"ஓ! அதுக்கென்ன? ஒண்ணும் ப்ராப்ளம் இல்லன்னா ரெண்டு மூணு மாசம் போன பிறகு கூட பார்த்துக்கலாம். இப்பவே பார்க்கணும்னா, வெல், கொஞ்சம் வெய்ட் பண்ணுங்க. என் அஸிஸ்டெண்ட் செய்வா. ஓ.கே.?"

"என்ன குழந்தைனு தெரிஞ்சுக்க முடியுமா?"

"அதுக்குள்ள என்ன குழந்தைனு தெரியணுமா? சரி, உன் ஆர்வத்தை ஏன் கெடுப்பானேன். யூஷ்வலா வெளியே சொல்ல மாட்டோம். இப்ப கவர்ன்மெண்ட் ரொம்ப ஸ்ட்ரிக்ட். பட் உனக்கு சொல்றதுல என்ன? இப்ப எத்தனை நாளாகுது?"

அவள் கணக்கைச் சொன்னாள்.

"இட்ஸ் டூ எர்லிடா. இன்னும் ஒரு பத்து இருபது நாள் போகட்டுமே"

உள்ளுக்குள் தவிப்பாய் இருந்தாலும், வெளியில் காட்டிக் கொள்ளாமல் சிரித்து விடைப் பெற்றான் சேகர். அப்போதைக்கு நிம்மதியாய் வெளியேறினாள் மீனா.

அடுத்த பதினைந்து நாட்களில் மீண்டும் டாக்டர் ரங்காவைத் தொடர்பு கொண்டான், சேகர்.

"விட மாட்டே போலிருக்கு. சரி, உன் மனைவியக் கூட்டி வா. நான் இருக்க மாட்டேன். ஒரு அர்ஜெண்ட் கேஸ் அட்டெண்ட் பண்ணப் போறேன். என் அஸிஸ்டெண்ட் கிட்ட சொல்லிட்டுப் போறேன். சரியா கூடியவரை பார்த்துச் சொல்லிடச் சொல்றேன், ரைட்?"

குழந்தை ஆணா, பெண்ணா என்று தெரியக் கூடாது என்று மீனாவும், தெரிந்து விட வேண்டும் என்று சேகரும் வழி முழுதும் வேண்டிக் கொண்டே போனார்கள்.

டாக்டர் ரங்காவின் அஸிஸ்டெண்ட் சுபா சின்னப் பெண்ணாக இருந்தாலும், படிப்பின் வீச்சு ஒரு கம்பீரத்தைத் தந்திருந்தது.

"முடிஞ்சாச்சு. ஒரு அஞ்சு நிமிஷம் வெளியே வெய்ட் பண்ணுங்க. ரிப்போர்ட் கொடுத்துடறோம்."

புடவையை சரி செய்து கொண்டு எழுந்த மீனா, மெல்ல அந்த இளம் அஸிஸ்டெண்ட் அருகே போய் நின்றாள்.

"என்ன?" என்பது போல் நிமிர்ந்து பார்த்தாள் சுபா.

"என்ன குழந்தைனு..." திக் திக் என்று இதயம் படபடத்தது.

"ஓ, அதை சொல்ல மறந்துட்டேன். ரிப்போர்ட்ல அதைக் குறிப்பிட மாட்டோம்..."

'ஐயோ, சீக்கிரம் சொல்லித் தொலையேன்'

"பெண் குழந்தைம்மா..."

மீனா அப்படியே சிலையாய் நின்று விட்டாள். வியர்த்தது. படபடவென்று வர, தள்ளாடினாள்.

"மேடம்... மேடம்.. என்னாச்சு?" பதறிப் போய் சுபா அருகிலிருந்த தண்ணீர் எடுத்துக் கொடுத்தாள். வாங்கி மடமடவென்று குடித்தாள் மீனா.

"ஆர் யூ ஆல் ரைட்?"

'ம்' என்று தலையாட்டி புடவைத் தலைப்பால் முக வியர்வையை ஒற்றினாள்.

"என்னாச்சு? தலை சுத்தலா?"

"இல்லை"

"வாங்க... உங்களை நானே கூட்டிப் போய் ஹால்ல விடறேன்"

"கூட யாராவது வந்திருக்காங்களா?"

"ம், என் கணவர்"

"அப்ப, மெல்ல எழுந்து வாங்க."

"இருங்க, அதுக்கு முன்னாடி... நிச்சயமா இது பெண் குழந்தைதானா?"

"தொண்ணூறு சதவீதம் பெண் தான்."

சற்று யோசித்தாள் மீனா. பின் சுபாவின் கரத்தைப் பற்றிக் கொண்டாள்.

"இந்த வெளியே இருக்கற என் கணவர்கிட்ட சொல்லிடாதீங்க ப்ளீஸ்"

சுபா குழப்பமாகப் பார்த்தாள்.

"அவருக்குக் கொஞ்சம் ஃபினான்ஷியல் டிபிகல்டி. அதனால பெண் குழந்தை வேண்டாம்னு நினைக்கறார். எனக்கு உருவான கருவை அழிக்கறதுல இஷ்டமில்லை. குழந்தை முகத்தைப் பார்த்த பின்னாடி அவருக்கும் ஒரு பாசம் வந்துடும். சமாளிச்சுக்கறேன். இப்ப உண்மையை மறைச்சுடலாம், என்ன?"

"பின்னாடி பிரச்சினை வராதே?"

"நான் பார்த்துக்கறேன். டாக்டர் ரங்கன்கிட்ட சொல்லிடாதீங்களா?"

"இது அவரோட லாப்தான். ஆனால், இன்சார்ஜ் டாக்டர் வேற. டாக்டர் ரங்கன் இந்த ரிப்போர்ட் விஷயத்துல எல்லாம் தலையிட மாட்டார். நான் வந்து உங்க கணவரை மீட் பண்ணி பேசப்போறதில்லை.. நாளைக்கு பிரச்சினை வராம பார்த்துக்கோங்க."

மெல்ல தலையாட்டி விட்டு வெளியே வந்தாள். கலக்கத்தை மறைத்துக் கொண்டு, முகத்தில் ஒரு புன்னகையை மாட்டிக் கொண்டாள்.

மிக ஆவலாய் அவளை நெருங்கி, "என்ன... என்ன... சொன்னாங்க?" என்றான் சேகர்.

முதலில் என்ன குழந்தை என்றே ஸ்கேனில் தெரியவில்லை என்று சொல்லி விட நினைத்தாள். மீண்டும் அடுத்த மாதம் அழைத்து வருவான். ஆனால், அடுத்த மாதம் கரு நன்றாக வளர்ந்து விடும். டாக்டர் கருக்கலைப்பிற்கு ஒப்புக் கொள்ள மாட்டார். தப்பி விடலாமே.

அவளை நிமிர்ந்து பார்த்தாள். அந்த



முகத்தின் தீவிரம் அச்சுறுத்தியது. எவ்வளவு சில்க் எடுத்தாலும் சுருக்கலைப்புக்கு வற்புறுத்துவான் என்று தோன்ற சட்டென்று, ''பிள்ளைக் குழந்தை தாங்க'' என்றாள்.

அவன் மகிழ்ந்து போனான்.

## 13



அரவிந்தாட்சன்

நவநீதேஷ்

நிமேஷ்

அர்ஜுன்

அமலேஷ்

பிரகதீஷ்

மெல்ல வந்து எட்டிப் பார்த்தாள் மீனா. மும்முரமாய் எழுதிக் கொண்டிருந்தான் சேகர்.

''என்ன எழுதரீங்க?''

''வேறென்ன? நம்ம செல்ல பயலுக்கு பேர்தான்''

அவளுக்குத் திகீரென்றது. இந்த ஆறு மாதங்களாய் ஒரே பிள்ளை புராணம் தான். அவன் மகன் என்று நினைத்துப்பேசும் ஒவ்வொரு முறையும் அவளுக்கு பகீர் பகீர் என்று வயிற்றைக் கலக்கும்.

அவள் கலக்கத்தைப் புரிந்து கொள்ளாதவனாய், ''பார். பேரெல்லாம் நல்லா இருக்கா? உனக்கு ஏதாவது தோணுதா? புதுமையா அபூர்வ பேரா இருக்கணும்.''

அவள் மனதுக்குள் அடுக்கினாள்.

அபூர்வா

ம்ருகநயனி

வேதவிகா

நிமிஷா

''என்ன நல்ல பேரா கிடைக்கலையா? சரி யோசி. முதல்ல இப்படி வந்து உட்காரு. உன்கிட்ட கொஞ்சம் பேசணும்.''

அவள் அவனருகே வந்து அமர்ந்து கொண்டாள்.

''கல்யாணமான புதுசுல, உன்கிட்ட கலந்துக்காம, நேரா டாக்டர் முன்னாடி கொண்டு போய் நிறுத்தி குழந்தை வேண்டாம்னு சொன்னது எவ்வளவு மடத்தனம்னு இப்பத்தான் புரியுது''

''ஓ. அதை மறந்துடுங்க. அதைப் பத்தி நானே நினைவில வச்சுக்கறதில்லை. நீங்க ஏன்?...''

''அதுக்கில்லை மீனா. இனிமேல் எந்த முடிவானாலும், உன்கிட்ட கலந்து பேசி முடிவெடுக்கறதுன்னு வச்சிருக்கேன்.''

''சரி, சொல்லுங்க.''

''நமக்கு இந்த ஒரு பயல் போதும் மீனா, சரியா?''

அவள் அவனை அரண்டு போய்ப் பார்த்தாள்.

''நான் ஏன் சொல்றேன் தெரியுமா? இவனுக்கு அடுத்தது பெண்ணாப் பிறந்துட்டா, இவனும் என்னை மாதிரி காலத்துக்கும் அவதிப்படணும்''

அவளுக்கு அவனைப் பார்க்க பரிதாபமாகவும் இருந்தது, எரிச்சலாகவும் இருந்தது.

ஏன், உங்களுக்கு அப்பா இல்லை.

அவனுக்கு நாம இல்லையா உயிரோட?

கஷ்டப்பட்டு உங்க அம்மா வீடு கட்டினாங்க. நாம அப்படி கஷ்டப்பட வேண்டியதில்லை. நீங்க சரியாப் படிக்காம கோட்டை விட்டீங்க. அவன் நல்லாப் படிக்க மாட்டானா என்ன?

இத்தனை நல்ல அம்சங்கள் மகனுக்கு சாதகமாக இருக்கும் போது... ஏன் இருண்ட பக்கத்தையே பார்த்து இவர் பயப்பட வேண்டும்?

மகனுக்குப் பிறகு கூட மகள் வேண்டாம் என்று சொல்பவர், முதல் குழந்தையே பெண்ணாய் பிறந்தால், எப்படி ஏற்பார்? இவரை எப்படி சமாதானம் செய்யப்போகிறேன்? தப்பு செய்து விட்டோமோ? மறைத்தது பிழையோ? உண்மையைச் சொல்லிப் போராடி இருக்க வேண்டுமோ?

ஆனால், சேகர் சூழ்நிலை காரணமாய் இறுகிப் போனவன். வெளியே தான் பலாமுள். உள்ளே உருகிப்போகும் மென்மை. பெற்ற மகளைப் பார்த்த பின் பாசம் ஜெயித்து விடாத என்ன?

மாதம் ஆக ஆக, அவளுள் பயம்



சூழ்ந்தாலும் தன்னைத் தானே சமாதானம் செய்து கொண்டாள்.

## 14



வலி எடுத்தவுடன் மருத்துவமனைக்குக் கிளம்பினார்கள்.

''அப்பா, அவருக்கும் அத்தைக்கும் போன் செஞ்சு சொல்லிட்டீங்களா?'' அந்த நிலையிலும் விடாமல் கேட்டாள் மீனா.

''சொல்லிட்டேம்மா. மாப்பிள்ளை கலெக்‌ஷனுக்காக வெளியே போயிருக்காராம். வந்தவுடன் இன்பார்ம் பண்ணிடறாங்களாம். உங்க மாமியார் கிளம்பி மருத்துவமனைக்கு வராங்களாம்.''

அவள் உள்ளூர திகிலுடன் கிளம்பினாள். வீட்டில் பெற்றோரிடம் கூட இது விஷயமாய்ச் சொல்லவில்லை.

''என்ன தான் பணப் பிரச்சினைனாலும் பெண் குழந்தையைக் கொல்லச் சொல்ற அளவு கிராதகனா மாப்பிள்ளை'' என்பார்கள்.

அவளால் கணவனை பெற்றோர் முன் விட்டுத் தர முடியவில்லை. அவன் கஷ்டம் அவளுக்குப் புரியும் அளவு பெற்றோருக்குப் புரியுமா? பணத்தை அனாயசமாய் செலவழித்து உல்லாசமாய் இருக்க வேண்டிய நேரத்தில் ஒரு சினிமா போக வேண்டும் என்றாலும் கணக்குப் பார்த்து... அவசிய செலவுகளுக்கும் யோசித்து... வயதுக்கு உரிய ஆசையை அடக்கி...

''நல்ல படம் அபிராமியில. ஆபீஸ் பூரா நல்லா இருக்குனு பேசிக்கறாங்க. போக வர பஸ் செலவு, டிக்கெட் முப்பது முப்பது-அறுபது ரூபா, நொறுக்குத் தீனி... எப்படியும் எண்பது ரூபா ஆயிடும். மீதி இருபது ரூபால இந்த வாரத்தை ஓட்டிடறேன்.''

''அப்படி என்னங்க சினிமா போகணும்? நூறு ரூபாகூட கையில இல்லாம ஆபீஸ் போகப் போறீங்களா?''

''சீசன் டிக்கெட் இருக்கு. என்ன செலவு? உன்னை எங்கே கூட்டிப் போறேன்? என்ன வாங்கித் தரேன்? ரெண்டு மாசத்துக்கு ஒரு தடவை ஒரு சினிமா கூட இல்லாத என்ன லைப்? நம்ம இட்ட என்ன வி.சி.டி.யும் டெக்குமா இருக்கு. நம்ம இஷ்டத்துக்குப் படம் பார்க்க?''

ஒன்றாம் தேதி வரை ஒரு டீ கூட குடிக்காமல் ஓட்டுவான்.

''ஆபீஸ் நண்பன் சுரேஷுக்கு கல்யாணம். எல்லோருமா பணம் போடணும். நூறு ரூபாய் தாணும். மளிகைச் சாமான்ல இந்த மாசம் எதையாவது குறைச்சுக்கோ.''

பைசா பைசாவாய்க் கணக்குப் பார்த்து செலவு செய்து..

''மீனு, சுரேஷ் கல்யாணத்துக்கு ஏதாவது வாங்கலாம்னு, ஆபீஸ் நண்பர்களோட நானும் ஸ்பென்சர் பிளாசா போனேன். என்ன அட்டகாசமா இருக்கு தெரியுமா? ஒரியா போயிட்டு வரலாம்.''

இருவரும் பஸ்ஸில் போய் பாப்கார்ன் வாங்கிக் கொறித்துக் கொண்டு ஒன்றும் வாங்காமல் மால் முழுதும் சுற்றிப் பார்த்து விட்டுத் திரும்புவார்கள்.

''செலவழிக்கப் பணம் மட்டும் இருந்துட்டா ராஜா தான். மனுஷன் வாங்க என்னவெல்லாம் கொட்டிக் கிடக்கு. இந்த மாசுக்கு குறைந்தபட்சம் ஐநூறு ரூபாயாவது எடுத்துப் போய் ஏதாவது வாங்கணும் மீனு. அப்படி ஒரு காலம் வருமா? எங்க, ரங்கநாதன் தெருவுக்கே கையில அம்பது ரூபாயோட ஒண்ணாந்தேதி போற ஆளு நான்.''

எத்தனை ஆசைகள்.. ஏக்கங்கள்...

வயது முப்பதுக்குள் எட்டிப் பார்க்கும் இள நரை, முக சுருக்கம், சிரிப்பைத் தொலைத்த முகம்...

''அம்மாவுக்குக் கண்ணாடி வாங்கணும். ரெண்டு மாசமா தள்ளிப் போட்டு வரேன். என்ன செய்யலாம்?''

''உனக்கு இந்த மாசம் செக்- அப் இருக்கே. டாக்டர், மருந்துனு இருநூறு ரூபா ஆயிடுமே.''

''கோவில் போறியா? பூவுக்கெல்லாம் ரொம்ப செலவழிக்காதே. தட்டுல அம்பது காசு போடு போதும். எனக்குப் பல்லு வலி. வரும்போது மருந்துக் கடையில சொல்லி ரெண்டு வலி நிவாரணியும் ஆன்டிபயாட்டிக்கும் வாங்கி வா. டாக்டர்கிட்ட போனா நூறு இருநூறு செலவாகும். அடுத்த மாசம் பார்த்துக்கலாம். வலி நிவாரணி போட்டா சரியாயிடும். ரெண்டு நாள் சமாளிச்சுக்கறேன்''

என்றுதான் தீரப் போகின்றன இந்தப் பிரச்சினைகள்? இதில் குழந்தை பிறந்த பிறகு அதற்கான மருத்துவச்செலவு, படிப்புச்செலவு என்று இனி கூடுமே தவிர குறையாது. பெண் குழந்தை என்பதால் திருமணத்திற்கு வேறு சேர்க்க வேண்டும். முடிகிற காரியமா? கணவனின் பயம் நியாயமானது தான்.

ஆனால் அதற்காக உருவான குழந்தையை அழிப்பதா? தன்னையே நம்பி தன்னில் ஜனித்திருக்கும் சின்னப் பிஞ்சை கதறக் கூடத் தெரியாத இளம் குருத்தை ஐயோ என்று அன்னையைப் பற்றக் கூடத் தெரியாத சிசுவை கொல்வது குரூரம் இல்லையா?

சேகரிடம் உண்மையைக் கூறியிருந்தால் எப்படியும் அபார்ஷனுக்குச் சம்மதிக்க வைத்திருப்பான். இப்படி நிறைமாத வயிறோடு மருத்துவமனைக்குப் போகும் இந்த அற்புதக் கணத்தை இழந்திருக்க வேண்டும் அல்லவா?

ஆனால் அப்படி நெகிழ்ந்திருக்க வேண்டிய கணத்தில், குழந்தை எப்படி இருப்பாள் என்று எதிர்பார்த்திருக்க வேண்டிய பொழுதில், எப்போது பிறப்பாள் என்று தவித்திருக்க வேண்டிய சமயத்தில் வேறு விதமாய்த் தவிக்கிறாள்.

பெற்றுப் பிழைக்க வேண்டுமே என்று பயப்பட வேண்டிய நேரத்தில் வேறு விதமாய் பயப்படுகிறாள். அதுவும் கணவனுக்கு.

பிரசவத்திற்குள் அவன் வந்து விட்டால் உண்மையைக் கூறி கடைசி நிமிட சத்யம் போல் ஏதாவது சேகரிடம் பெற்று சமாளித்து விடலாமே என்று ஆவலாய் பார்த்திருந்தாள்.

இந்தக் கலக்கத்தில் பிரசவ வலி கூட அவளுக்குப் பெரிதாய் தெரியவில்லை.

ஆனால் கடைசி நிமிடம் வரை அவன் வரவில்லை.

சேகர் இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு அலுவலகம் திரும்பினான். டைப்பிஸ்ட் அவனுக்கு போன் வந்த விஷயத்தைச் சொல்ல அவன் மீனாவின் வீட்டிற்கு தொடர்பு கொண்டான். ரிங் போனது யாரும் எடுக்கவில்லை. தன் வீட்டிலும் யாரும் எடுக்கவில்லை. மருத்துவமனைக்கு தொடர்பு கொண்டான். என்கேஜ்டாய் இருந்தது.

"இப்படி தவிக்கறதுக்குப் பதில், பேசாம அரை நாள் லீவ் போட்டுட்டு கிளம்பிடுங்களேன்."

"அது தான் செய்யப் போறேன். அதுக்கு முன்னாடி குழந்தை பிறந்துடுச்சான்னு தெரிய ஃபோன் பண்ணிடலாம்னு பார்க்கறேன்."

உடனே போய் மானேஜரிடம் விடுப்பு சொல்லி விட்டு வந்தான். மனம் தவிப்பாய் இருந்தது.

"நான் லேபர் ரூமுக்குப் போகும் போது நீங்க என் கண் முன்னாடி இருக்கணும்" என்று குறைந்தது நூறு முறையாவது சொல்லி இருப்பாள். சே, நல்ல சமயத்தில் வெளியே போய் விட்டேனே. குழந்தை பிறந்திருக்குமா? அவள் தவிப்பையும் வலியையும் அருகில் இருந்து ஆறுதல் படுத்த முடியாமல்...

எத்தனை மென்மையானவள். தான் தனி இளமையுடன் எப்படி மாறிப் போய் விட்டாள். எந்த நகையைத் தரமாட்டேன் என்று பிடிவாதம் பிடித்தானோ அதே நகையை அடமானம் வைத்து உஷா குழந்தைக்கு நகை வாங்கி, டில்லி செல்ல பணம் டிக்கெட் வாங்கி, ஓடி உழைத்து அதிக பண வரவில் தானே நகையை மீட்டு...

"எதுக்கு மீனும்மா, நகையெல்லாம் வெச்சு செலவு செய்யணுமா?"

"உஷா வீட்டு மனுஷங்களுக்கெதிரே உங்களுக்கு ஒரு கௌரவம்



# நகையும் நாகரீகமும்

நாகரீகம் என்பது ஆடைகளில் மட்டுமல்ல, அதற்கேற்ற அணிகலன்களும் தேவை. ஆடைக்கு ஏற்ற நகைகள் அணிந்தால் பெண்கள் வனப்பாக மட்டுமல்ல, வசீகரமாகவும் தோற்றம் அளிப்பார்கள். இதைக் கருத்தில் கொண்டே நாளுக்கு நாள் புதுப்புது வகையான நகைகள் விற்பனைக்கு வந்தவண்ணம் உள்ளன. புதிய வகைகளை தயாரிப்பதில் போட்டா போட்டியும் நிலவுகிறது.

வடஇந்தியாவை சேர்ந்த நிறுவனம் ஒன்று தங்கமும் ஸ்டெய்ன்லெஸ் ஸ்டீலும் கலந்து புதுவகையான நகைகளை விற்பனைக்கு அனுப்பியுள்ளன. 18 காரட் தங்கத்துடன் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் கலந்து உள்ள இந்த நகைகள் வேலைப்பாடுடன் மட்டுமின்றி நேர்த்தியாகவும் உள்ளன. வளையல்கள், பிரேஸ்லெட்டுகள், மோதிரங்கள் என்று விற்பனைக்கு வந்து உள்ள இந்த நகைகள் பெண்களிடம் மட்டுமின்றி ஆண்களிடமும் நல்ல வரவேற்பை பெற்று உள்ளன.

-சசிமணி, சென்னை.



இருக்கு இல்ல. என்ன ரெண்டு வளையலும் செயினும் தானே வச்சேன். வீட்டுலயாம் சமயத்துல நீங்க படற கவலைகளைப் பார்த்தா கஷ்டமா இருக்கு. பேசாம என் நகையை எல்லாம் வித்து, ஒரு பாதி கடனை அடைச்சுட்டா என்ன?"

அவன் கண்களில் நீர் நிறைய,

"வேண்டாம் மீனு. நீ சொன்னதே எனக்கு யானை பலம் வந்தா மாதிரி இருக்கு. கொஞ்ச நாள் இந்தப் பணக் கஷ்டம். கடனை அடைச்சுட்டா, பிரச்சினையே இல்ல. ஒரே ஒரு குண்டு மணி தங்கம் கூட உனக்கு நான் வாங்கிப் போடலை. இருக்கறதையும் அழிச்சுட்டா.. வேண்டாம்மா."

நினைக்கும் போது இப்போதும் கண்களில் நீர் நிறைந்தது. எத்தனை தங்கமான மனைவி. கிடைக்க கொடுத்து வைத்திருக்க வேண்டுமே. சொன்னது போல் சில வருடங்களில் கஷ்டப்பட்டு கடனை அடைத்து விட்டால் என்ன பிரச்சினை? இருக்க பெரிய சொந்த வீடு, இருவர் சம்பளம், சிங்கக் குட்டியாய் ஒரே ஒரு மகன். நல்லபடி படிக்க வைத்து உஷா, ஆஷா போல் பெரிய வேலையில் அமர்த்திவிட்டால் போதும்.

எண்ணமே உல்லாசமாய் இருந்தது. மகன் ஏதோ இப்போதே கலெக்டராய், டாக்டராய் எதிரே நிற்பது போல் சந்தோஷமாயை தோன்ற சிரித்துக் கொண்டான். உண்மையில் கையும் காலும் உதைத்துக் கொண்டு ஏதோ என்று அழுது கொண்டோ, மணிக் கண் மூடித் தூங்கிக் கொண்டோ இருக்கும் சிறு சிசுவை அல்லவா பார்க்கப் போகிறோம். அதற்குள் என்ன கற்பனை?

மீண்டும் ஒரே ஒரு முறை தொலைபேசியில் முயன்று பார்த்து விடலாம் என்று அவன் நினைக்கும் போதே, அது இவனை அழைத்தது.

"நான் தான் மாமா பேசறேன்.. மீனு அப்பா."

"சொல்லுங்க மாமா. பய பிறந்துட்டானா... கிளம்பிக்கிட்டே இருக்கேன்."

"உடனே வாங்க மாப்பிள்ளை. குழந்தை பிறந்துட்டா."

"என்ன?"

"பயமாறு கேட்டீங்களே. பய இல்ல, தவிட்டுப் பானை எல்லாம் பொன்னாக்க, பெண் பிறந்துட்டா. அவிட்ட நட்சத்திரத்தில்."

"ம.. மாமா.. சரியாப் பார்த்தீங்களா? பொண்ணா?"

"ஆமாம், மாப்பிள்ளை. இத்தனை நேரம் கையில வச்சிருந்துட்டுத் தானே வரேன். பெண் தான். சீக்கிரமா வரீங்களா? மீனு மயக்கமாய் இருக்கா. லேபர் ரூம் போற கடைசி நிமிஷம் வரை உங்களை எதிர்பார்த்தா.."

பாதியிலேயே அவன் தொலைபேசியைத் துண்டித்தான்.

15



ரௌத்திரமாய் தன் முன் அமர்ந்திருக்கும் சேகரை சமாதானப்படுத்தும் விதம் தெரியாமல் சற்று தடுமாறினார் டாக்டர் ரங்கன்.

"எப்படி ஸ்கேன்ல ஆண் குழந்தைனு வந்தது பெண்ணா மாறும்? கூப்பிடு உன் அஸிஸ்டென்டை.. தப்புத் தப்பா கணிக்கிற கத்துக்குட்டிகளை எல்லாம் வேலைக்கு வெச்சுகிட்டு..."

"அது சில சமயம் நடக்கறதுண்டு சேகர். உனக்கு எப்படிப் புரிய வைப்பேன்?" என்றவர், "சரி, உன் திருப்திக்கு என் அஸிஸ்டென்டைக் கூப்பிட்டுக் கேட்கறேன்." என்றார்.

இன்டர்காமில் சுபாவை அழைத்து மீனாவின் ஸ்கேன் ரிப்போர்ட் தகவல்களோடு வரச் சொன்னார்.

அவள் திருதிருவென விழித்துக் கொண்டு வந்து நின்றாள். 'நான் பார்த்துக் கொள்கிறேன்' என்றாளே அந்தப் பெண். பிரச்சினை வராது என்றாளே. இப்போது என்ன புதுக்குழப்பம், என்று கலக்கமாய்ப் பார்த்தாள்.

டாக்டர் ரங்கனும் கடுப்பில் இருந்தார். என்ன குழந்தை என்றே சொல்லக்கூடாது என்று சட்டம் இருக்கும் போது, எல்லாவற்றையும் மீறி போனால் போகிறது என்று கூறினால், இப்போது வந்து குதிக்கிறானே சேகர். ஸ்கேன் மிஷினில் சமயங்களில் பால் மாறித் தெரிவது சகஜம். இதையும் புரிந்து கொள்ள மறுக்கிறான். தன் கீழ் பணிபுரிபவர்களின் திறமையையும் குறைத்துக் கூறுகிறான். இப்படி இவன் கத்துவது வெளியே நாலு பேருக்குத் தெரிந்தால், இந்த ஸ்கேன் சென்டரின் நல்ல பெயர் கெட்டு விடாதா?

நண்பனின் மேல் உள்ள கடுப்பை சுபாவிடம் காட்டுவது போல் கண்டிப்பான குரலில், "என்ன சுபா இது? இவருக்கு என்ன குழந்தைனு பார்த்துச் சொல்லச் சொன்னா, ஏதோ தப்பு தப்பா உளறியிருக்கியே..."

என்றான்.

சுபாவிற்கு சுரீரென்றது. ஏதோ அந்தப் பெண் பொய் சொல்லிக் கொண்டு போகட்டும் என்றுவிட்டால், தன் திறமைக்கே அது வேட்டு வைப்பதாய் இருப்பதா? இனியும் சும்மா இருந்தால், தன் வேலைக்கே அல்லவா ஆபத்து.

சிலும்பிக் கொண்டு சுபா, "சார், நான் தப்பு தப்பா சொல்லலை. பெண் குழந்தைனு சரியாத்தான் சொன்னேன். உங்க மனைவி தான், 'இது என் கணவருக்குத் தெரிய வேண்டாம். பின்னாடி நான் சமாளிச்சுக்கறேன்'னு சொன்னாங்க. 'அது உங்கபாடு. நான் வந்து உங்க கணவர்கிட்ட பேசப் போறதில்லை. பின்னாடி பிரச்சினை வராம பார்த்துக்கோங்க'னு சொல்லி அனுப்பினேன். அவ்வளவு தான். உண்மையா இல்லையானு போய் உங்க மனைவியையே கேளுங்க."

சேகரின் முகம் விழுந்து போனது.

"இதற்கு என்ன சொல்கிறாய்?" என்பது போல் ரங்கன் பார்க்க, சுபாவின் உக்கிரப் பார்வை இவனை மடையா என்று மிரட்டுவது போல் இருக்க, ஒன்றும் பேச முடியாமல் தலை குனிந்தான் சேகர்.

மனைவி தன்னிடம் பொய் சொல்லி மறைத்தது, இங்கே மூன்றாம் மனிதர்கள் முன் ஏற்பட்ட அவமானம் எல்லாமாய்ச் சேர்ந்து அவனுக்கு பயங்கர கோபத்தை ஏற்படுத்தியது.

"சாரி" என்று ஒற்றை வார்த்தையை உதிர்த்து விட்டு வேகமாய் வெளியேறினான்.

ஒன்றும் சாப்பிடாமல், உடை கூட மாற்றாமல், வீடு வந்து அப்படியே சோபாவில் சாய்ந்தவன் தான். விளக்குக் கூடப் போடாமல், கனவா, நினைவா, பிரமையா, விழிப்பா என்று ஒன்றுமே புரியாமல் அப்படியே படுத்துக் கிடந்தான்.

மாலை ஆறு மணி வாக்கில் சுசிலாம்மா வீடு வந்து சேர்ந்தாள். கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்த சுசீலா, சோபாவில் படுத்திருக்கும் மகனைப் பார்த்தாள். அரை இருளாய் இருந்தது அறை. விளக்கைப் போட்டு விட்டு மகன் அருகே போய் அமர்ந்து கொண்டாள்.

"டேய் சேகரா, வந்துட்டியா? ஏன்டா லைட் கூடப் போடாம உட்கார்ந்திருக்கே? ஏன்டா மருத்துவமனைக்கு வரலை? குழந்தை

அலுமினியத் தூக்குகளில் எண்ணெய் களிம்பு ஏறிக் கறுத்து மங்கலாக இருந்தால், சிறிது ட்ரைசோடியம் பாஸ்பேட் பொடியை எடுத்துத் தண்ணீருடன் பாத்திரத்தில் தேய்த்து சில நிமிடங்கள் ஊற வைத்து தேங்காய் நாரினால் அழுந்தத் தேய்த்தால் கறை நீங்கி பாத்திரம் பளிச்சென்று இருக்கும்.

தக்காளி மலிவாகக் கிடைக்கும் காலங்களில் சாலட்டுக்கு சிலைஸ் செய்வது போல செய்து உப்பு, மிளகுப் பொடி தூவி இட்லிக்கு நடுவில் வைத்து வேக விட்டு எடுக்கலாம். பிரெட் சாலட் போலவே இருக்கும்.

சின்னக் காரின் பின் சீட்டில் நெருக்கியடித்துக் கொண்டு மூன்று பேர் உட்கார வேண்டியிருந்தால் நடுவில் இருப்பவரை சீட்டின் மீது ஒரு தலையணையைப் போட்டு அதன் மேல் உட்காரச் செய்யுங்கள். நெருக்கம் குறைந்து சவுகரியமாக இருக்கும்.

-சி. கவுதமி, வேலூர்.



எப்படி பூ மாதிரி இருக்கா தெரியுமா? நல்ல செவப்பு, ரோஜாப்பூ பந்துடா..."

அம்மா அவன் முகம் பார்க்காம பேசிக் கொண்டே போனாள். சட்டென்று எழுந்த சேகர், "நிறுத்தும்மா. இனி ஒரு வார்த்தை அவளைப் பத்தியோ, அவள் மகளைப் பத்தியோ இந்த வீட்ல பேசக்கூடாது."

அப்போது தான் மகனை நன்றாகப் பார்த்தாள் சுசீலாம்மாள். "சேகரா" என்றபடி அவனருகே இன்னும் நகர்ந்து அமர்ந்து தலை கோதியவள், "என்டா ஒரு மாதிரி இருக்கே? ஏன் ஒரு மாதிரி பேசறே?" என்றாள்.

"ஸ்கேன் பார்த்துட்டுப் பிள்ளைனு பொய் சொல்லி இருக்காம்மா."

இதுதானா விஷயம் என்பது போல் பார்த்த சுசீலாம்மாள், "ஸ்கேன்ல நூறு சதவீதம் சரியாத் தெரியும்னு சொல்ல முடியாதுடா. நம்ம எதிர் வீட்டு கமலா மக தோழிக்கும் இதே மாதிரி பெண்தான் பிறக்கும்னாங்க. ஏழு வருஷம் முன்னாடி... ஆனா பிள்ளையாப் பிறந்துச்சு. இதெல்லாம் சகஜம்ப்பா."

"எதேச்சையா நடந்தா மன்னிக்கலாம்மா. வேணும்னே மறைச்சிருக்கா" என்றவன், நடந்தவற்றை விளக்கினான்.

"நிஜம்மாவா?" என்று கேட்டு வியந்த சுசீலாம்மாளுக்கு மருமகள் மகன் சொல் மீறி அவனை ஏமாற்றியிருக்கிறாள் என்பது வருத்தத்தையும் கோபத்தையும் சற்று ஏற்படுத்தத்தான் செய்தது. ஆனால், பிஞ்சுப் பந்தாய், பஞ்சு பூவாய் அது நேரம் வரை கொஞ்சி விட்டு வந்த பேத்தி மனதில் நின்று மருமகளை அதிகம் வெறுக்க முடியாமல் செய்தாள். அதனால், மகனை சமாதானம் செய்யும் விதமாய்ப் பேசினாள்.

"இதப் பாருப்பா சேகரா. மீனா செஞ்சது தப்புதான். ஆனா, ஏதோ தாய்ப் பாசத்துல செஞ்சுட்டா... இந்தக் காலத்துல பிள்ளை என்ன, பெண் என்ன? உஷா சம்பாத்யத்துலயே அவ கல்யாணத்துக்கான பாதி செலவை நாம முடிக்கலையா? அது மாதிரி, நல்லா பெண்ணைப் படிக்க வை. சொந்த வீடு இருக்கு. கடனெல்லாம் கொஞ்ச வருஷத்துல அடைஞ்சுடும். உனக்கென்ன கவலைப்பா?"

ஆறுதலாய் அம்மா பேசிய வார்த்தைகளே அவனுக்கு ஆத்திரத்தைக் கிளப்பியது.

"கடனெல்லாம் அடையறதுக்குள்ள நான் கிழவனாயிடுவேன். உடனே மகளோட படிப்பு, கல்யாணம் பிரசவம்னு தொடரும்.

இக்கரில் சாதத்தை உதிர் உதிராக வேக விடவும். பச்சைப்பட்டாணி, புதினா இலைகளைச் சிறிது எண்ணெயில் வதக்கி வேக வைத்துக் கொள்ளவும். ஓர் அகலமான பாத்திரத்தில் சாதத்தை உதிர்த்துக் கொட்டி தேவையான டேபிள் சால்ட் மற்றும் வதக்கிய புதினா இலைகள், பச்சைப் பட்டாணியையும், கொத்துமல்லி இலைகளையும் தூவிக் கலந்து நான்கு ஸ்பூன் நெய்யை விட்டுப் பிசறி விட்டால் கிரீன் ரைஸ் ரெடி. நல்ல சத்தான உணவு இது. குழந்தைகளும் விரும்பிச் சாப்பிடுவார்கள்.

-கே. ராஜலட்சுமி, சென்னை.

இங்க பார், இனிமேல் எனக்கு மனைவி மகள்னு எந்த உறவும் கிடையாது. உனக்கு மகன் வேணுமா மருமகள் வேணுமானு நீயே முடிவெடுத்துக்க" என்றவன் விருட்டென்று எழுந்து தன் அறைக்குச் சென்று கதவைச் சாத்திக் கொண்டான்.

16



'தோம்'

கருவிலிருந்தோம்!
கவலையின்றி
கண்மூடிக் கிடந்தோம்!
தோம்
கரையில் விழுந்தோம்.
விழுந்தவுடன்,
கண்தூக்கம் தொலைத்தோம்!
அப்போதே அப்போதே
போன தூக்கம்
நம் கண்களிலே!
எப்போது எப்போது

வந்து சேரும் விடை தோனலியோ"

கண்மூடிப் படுத்திருந்தான் சேகர். தனக்காகவே எழுதப்பட்டது போல் ரேடியோவில் ஒலித்துக் கொண்டிருந்தது பாடல். அவன் தூக்கம் தொலைந்து மாதக் கணக்கு ஏன், வருடக் கணக்காகிறதே!

சுசிலாம்மா கூட முதலில் அவன் கோபத்தைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. எத்தனையோ அப்பாக்கள் 'முதலில் மகள் என்றவுடன் பாராமுகமாய் இருந்து பின் பாசம் இழுக்க 'என் மகள், என் மகள்' என்று கொண்டாடியிருக்கிறார்கள். இவனும் அப்படி மாறுவான் என்று தான் நினைத்தாள்.

மீனாவிடமிருந்து போன் வந்த போது கூட, "அட, நீ பொண்ணை பிள்ளைனு சொல்லிட்டியாம்மா. கோபமா இருக்கான். இந்த கோபமெல்லாம் எத்தனை நாள்னு பார்த்துடறேன். கவலைப்படாதே. கொஞ்சம் அவன் 'சகஜ' நிலைக்கு வரட்டும், நான் என் பேத்தியைப் பார்க்க ஓடி வந்துடறேன்" என்று தான் சமாதானமாகப் பேசினாள்.

ஆனால் அவள் நினைத்தது போல் சேகர் மனம் மாறவேயில்லை.

மெல்ல மூன்று மாதம் ஓடிய பின், "சேகரா, குழந்தைக்கு பேர் வைக்கற நிகழ்ச்சிக்கு கூட நாம போகலை. மீனா பண்ணினது தப்பாவே இருந்தாலும் அந்தக் குழந்தை என்னப்பா தப்பு செஞ்சது? அதுக்கு ஏன் தண்டனை? மீனாவை ஒரு மனைவியாப் பார்த்தா, அவ செஞ்சது தப்பாப் படும். அவளையே ஒரு தாயாப் பாருப்பா.."

"அம்மா கொஞ்சம் நிறுத்தறியா?"

"அ... அதுக்கில்ல. மூன்று மாசமாகுது. நல்ல நாள் பார்த்து மருமகளையும் பேத்தியையும் கூட்டி வர வேண்டாமா? நேத்து உன் மாமனார் போன் பண்ணினார்."

நிறுத்து என்பது போல் கை காட்டிய சேகர், "மனைவியே இல்லைனு ஆன பிறகு, மாமனார் எங்கேயிருந்து வந்தார்?"

"பெண் பாவம் பொல்லாதுடா சேகரா."

"ஆண்கள் மட்டும் பாவம் இல்லையா? என் கஷ்டம் தெரிஞ்சும் என் சொல் பேச்சு கேட்காத மனைவி எனக்குத் தேவை இல்லை."

சுசிலா அயர்ந்து போனாள்.

## கடல் காவல் பெண்கள்!

இன்றைய உலகில் பெண்கள் இடம் பெறாத துறையே இல்லை என்பதுடன், தங்களுக்கு கிடைத்த வாய்ப்புகளை பயன்படுத்தி அந்தந்த துறைகளில் ஒளி வீசவும் தவறுவது இல்லை.

இந்திய கடற்படை காவல் படையில் விமானியாக பணிபுரிவது கடினமானது மட்டுமல்ல, ஆபத்தானதும் ஆகும். இந்தப் பணியை விரும்பி ஏற்றுக்கொண்ட வடநாட்டைச் சேர்ந்த மோனிகா சேத், கனகா சதுர்வேதி இருவரும் தினமும் கடல் மீது 4,672 மீட்டர் உயரம் வரை விமானத்தில் பறந்து கடத்தல்காரர்களையும் கடல் கொள்ளையரையும் கண்காணித்து தகவல் கொடுத்து வருகிறார்கள்.

கடல் மாசுபடுவதை தடுத்தல், சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு, ஆபத்தில் சிக்கியவர்களை பாதுகாத்தல் ஆகிய நோக்கத்துக்காக அமைக்கப்பட்ட கடற்கரை காவல் படையின் மோட்டோ 'பாதுகாப்போம் நாங்கள்' என்பதுதான். இதில் ஆண்களுக்கு நாங்கள் சற்றும் குறைவாதவர்கள் அல்ல என்பதை மோனிகா, 'கனகா என்ற சாதனை பெண்களும் நிரூபித்து வருகிறார்கள்.

-சின்னராசா.



மீனா சேகருடன் பேச எடுத்த எல்லா முயற்சிகளும் தோல்வியில் முடிந்தன. தொலைபேசியில் அவள் அழைத்தால் பேச மறுத்தான். ஒரு முறை அவன் அலுவலகத்திற்கே சென்றாள். சீட்டில் இருந்து கொண்டே இல்லை என்று சொல்லி அனுப்பினான். சொல்லாமல் கொள்ளாமல் அவன் வீட்டிற்கு வந்து மீனா அவனுக்காகக் காத்திருந்தாள், குழந்தையுடன்.

வீட்டில் காலடி எடுத்து வைத்தவன் அவளைப் பார்த்தவுடன் ஏதோ பாம்பைக் கண்டது போல் காலை பின்னால் இழுத்துக் கொண்டான்.

வாசலிலிருந்தே, "அம்மா" என்று அலறியவன் சுசிலா எட்டிப்பார்த்தவுடன் "இவ வெளியேறின பிறகு தான் இந்த வீட்ல காலடி எடுத்து வைப்பேன். இது உன் வேலையா?" என்று உறுமி விட்டு வேகமாய் வெளியேறி விட்டான்.

குழந்தையுடன் வாசல் கேட் வரை அவனைத் தொடர்ந்து "என்னங்க" என்றழைத்தபடி ஓடியவள், அதற்கு மேல் அவன் வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல் நின்று விட்டாள். கண் கலங்க நின்ற மருமகளைத் தேற்றி அனுப்பி வைத்தாள் சுசிலா.

கடைசி முயற்சியாய் ஒரு நீண்ட கடிதம் எழுதி, தன்நிலை விளக்கம் கொடுக்க முனைந்தாள் மீனா. அதையும் படிக்காமலே கிழித்துப் போட்டான். இவ்வளவு கோபமா சேகருக்கு தன் மேல்? அதிர்ந்து தான் போனாள் மீனா.

எல்லா முயற்சிகளும் தோல்வி அடைய இனி ஆண்டவன் விட்ட வழி என்று மீனா மனதை கஷ்டப்பட்டு தேற்றிக் கொள்ள முயன்றாள். குழந்தை, அலுவலகம் என்று தன் உலகை சுருக்கிக் கொண்டாள். மனம் கனத்துப் போனது. அதுவும் கடைசி சில மாதங்களாய் அவன் காட்டிய அன்பு பெரிய இழப்புதான். சேகரின் கல்மனம் துளிக்கூடக் கரையாமல்.. இதோ இரண்டு வருடங்கள் ஓடிவிட்டன.

சமயங்களில் மனைவியின் அண்மையைப் பற்றிய நினைவு அவன் மனதிலும் மோதும். அந்தச் சிரிப்பு, மல்லி மணம், வளையோசை எல்லாம் நினைவை அலைக்கழிக்கும். மனைவி பற்றிய நினைவு கடைசியில் அவள் தன்னை ஏமாற்றி விட்டாள் என்ற யதார்த்தத்தை நினைவு படுத்த, கசியும் மனம் மீண்டும் கல்லாய் மாறும்.

கோபம், வெறுமை, ஆத்திரம், பிரிவு, சோகம் என்ற பல்வேறு வகை உணர்வுகளினால் அலைக்கழிக்கப்பட்டு நடைப்பிணமாய் அவன் வாழ்ந்தான்.

## 17



"சேகர், எனக்கு ஒரு ஹெல்ப் பண்ணனும் நீ."

அலுவலக நண்பன் பிரவீண், இவன் முன் வந்து அமர்ந்து கொண்டான். ஒரு பையோடு வந்த சுந்தரமும் சேர்ந்து கொண்டான். சுந்தரத்தைப் பார்த்தவுடன் பேசாமல் விட்டு விடலாமா என்று பிரவீண் யோசித்தான். எழுதிக் கொண்டிருந்த பேனாவை அக்கவுண்ட் புக்கில் வைத்து விட்டு நிமிர்ந்த சேகர், "சொல்லுப்பா" என்றவுடன் மேலே தொடர நினைத்தான், வேறு வழியில்லாமல்.

சற்று தயங்குவது போல் தலைகுனிந்து யோசித்த பிரவீண், மெல்ல நிமிர்ந்து "உனக்குத் தான் தெரியுமே சேகர், எனக்குக் கல்யாணமாகி பத்து வருஷமாகுது. ஒரு குழந்தை இல்லை. கடைசியா, ஒரு குழந்தையை தத்தெடுக்கலாம்னு இருக்கோம். அதுவும் பெண் குழந்தை."

"நல்ல முடிவு பிரவீண். ஒரு அனாதைக் குழந்தைக்கு உன்னால ஒரு நல்ல வாழ்வு கிடைக்குதே. ஆனா, ஏன் பெண் குழந்தை?"

"பெண் குழந்தையோட அருமை உனக்குத் தெரியாததனால நீ இப்படி பேசற. சரி, உன் தங்கைகள் சில அனாதை ஆசிரமங்களுக்குப் பணம் கொடுப்பாங்க இல்லையா? அதனால நல்ல சில ஆசிரமங்களோட விலாசம் உனக்குத் தெரிஞ்சிருக்குமே. சொல்ல முடியுமா?"

"அதுக்கென்ன? வீட்ல இருக்கும். நாளைக்கு கொண்டு வரேன். உனக்கே நிறையக்

கடன் இருக்கே. எதுக்கு பெண் என்று கேட்டேன். உன் சவுகரியம்.''

அதுவரை, ஏவைலோடு வந்து பேசாமல் இருந்த சுந்தரம் வாயைத் திறந்தான். சற்றே இடக்குமடக்கான பேர்வழி சுந்தரம். பிறர் மனம் பற்றி சற்றும் கவலைப்படாமல் சுருக்கென்று பேசும் சுபாவம் உள்ளவன். ஆரம்பத்தில் பேச்சின் துவக்கத்திலேயே இவன் வந்து உட்காருகிறானே. இவன் முன் பேச வேண்டுமா என்று தான் பிரவீண் தயங்கினான். ஆனால் சட்டென்று அவன் வந்தவுடன் பேச்சை நிறுத்திவிட்டால் நன்றாக இருக்காதே என்றே மேலே தொடர்ந்து விஷயத்தை சொன்னான். அவன் பயந்தது போலவே இப்போது சுந்தரம் வாயைத் திறந்து இருவரும் மனம் நோக தன் கருத்தைச் சொன்னான்.

''ஏன் சேகர், யாரோ ஊர் பேர் தெரியாத குழந்தையை பிரவீண் ஏன் தத்தெடுக்கணும். நீ பேசாம உன் குழந்தையைக் கொடுத்துடு. குழந்தைக்காகத் தானே மனைவியையே சேர்க்காம ரெண்டு வருஷமா வீம்பா இருக்கே. எப்படி நம்ம ஐடியா?''

சேகருக்குத் தூக்கி வாரிப் போட்டது. என்ன சொல்கிறான் இவன்?

பிரவீண் தான் முதலில் சுதாரித்தான்.

''சுந்தரம், என்ன பேசறீங்க நீங்க? யோசிக்கத் தான் சொல்றீங்களா?''

''தப்பென்ன பிரவீண்? பொண்ணு வேணாம்னு தானே ரெண்டு வருஷமா

> **சி**லருக்கு நெற்றியில் குங்குமம் வைத்த இடம் புண்ணும் ஊறலுமாகி நிறம் மாறிவிடும். பார்க்க சகிக்காது. கசகசாவை எலுமிச்சம் சாறுவிட்டு மை போல அரைத்து படுக்கும்போது அந்த இடத்தில் தடவிவிட்டு காலையில் முகத்தை குளிர்ந்த நீரால் அலம்பிவிட பழைய படி நெற்றி ஆகிவிடும். குப்பைமேனி இலை, கருந்துளசி, திருநீற்றுப் பச்சிலை இவைகளை உப்பு வைத்து மைபோல அரைத்து போட்டாலும் பலன் கிடைக்கும்.
>
> பிறகு லாக்டோகேலாமின் அல்லது சந்தனம் அரைத்து வைத்து அதன் மேல் குங்குமம் வைக்கலாம்.
>
> -ஞானகுமார், இரணியல்.

குழந்தையை ஒரு முறை கூடப் போய் எட்டிப் பார்க்காம இருக்காரு. சேகர். பிறகென்ன உங்கிட்ட நிரந்தரமா கொடுத்துடட்டுமே. உங்கப்பாவை மருத்துவமனையில் சேர்த்து ட்ரீட்மெண்ட் கொடுத்ததுல ரெண்டு லட்சம் கடன் வச்சிருக்கீங்க. வீடு கட்டின கடன் வேற. இத்தனை இருந்தும், தத்தெடுக்க அதுவும் பெண் குழந்தையை தத்தெடுக்க நீங்க தயாரா இருக்கீங்க. அவரோ தன் சொந்த பெண் குழந்தையை அதே கடன் காரணமா ஒதுக்கி வச்சிருக்கார். அப்பா இருந்தும் இல்லாம அந்தக் குழந்தை வளர்வதை விட அதுக்கு அப்பா அம்மாவா நீங்க நல்ல குடும்பத்தை அமைச்சுக் கொடுத்தா நல்லது தானே?''

சேகரால் குனிந்த தலையை நிமிர்த்த முடியவில்லை.

**அ**ன்று சனிப்பிரதோஷம். சுசீலாம்மாள் மைலாப்பூர் கபாலீஸ்வரர் கோவிலுக்குப் போய் வரலாம் என்று கிளம்பியிருந்தாள். கொஞ்ச நாட்களாகவே முதுமையும் சர்க்கரை போன்ற நோயும் காரணமாய் ரொம்பவே தளர்ந்து போயிருந்தாள். மகன் வாழ்வு சந்தோஷமாக இல்லாதது வேறு மனதில் அதீத கவலையை ஏற்படுத்த, அதுவே அவளை இன்னும் மூப்பாய் ஆக்கியது.

எதிலும் பற்றில்லாமல் போனவள், அந்தப் பரமனின் பாதத்தைச் சிக்கெனப் பிடித்துக் கொண்டாள். எப்போதும் கோவில் குளம் என்று சுற்றுவதிலேயே நேரத்தைப் போக்கினாள்.

பிரதோஷ தரிசனம் முடித்து கும்பலில் புகுந்து புறப்பட்டு வெளிவந்து, யானை சிலையின் அருகே அப்பாடா என்று உட்கார்ந்து கொண்டாள். ஐந்து நிமிடம் உட்கார்ந்து விட்டு கிளம்பினால் பஸ் பிடிக்க சௌகரியமாய் இருக்கும் என்று கணக்கிட்டுக் கொண்டாள்.

கொளுத்தும் வெய்யில் சற்று தணிந்திருந்தாலும், பிரகாரம் சற்று சூடாகவே இருந்தது. இவள் வேறுபுறம் பார்த்துக் கொண்டிருக்க, மடியில் பூப்பந்தாய் திமரென்று பாரம் ஏற, அதிர்ந்து போய் மடியைப் பார்த்தாள். விழுந்து விடாமல் இருக்க, இவள் புடவையை இறுகப் பற்றிக் கொண்டு ஒரு இரண்டு வயது இருக்கும் குழந்தை ஒன்று முத்துப் பல்காட்டி சிரித்துக் கொண்டிருந்தது.

''அடிக்கண்ணு'' என்று வாரி அணைத்து முத்தமிட்டாள் சுசீலா. தன் பேத்தியும் இப்படித்தான் இருப்பாளோ என்ற நினைவு



பிரிட கண்கள் கலங்கின.

குழந்தை இவள் உணர்வைப் புரிந்து கொள்ளாமல், ''கால் வலிக்குது. என்னைத் தூக்கி, பாட்டி. அந்த ஆனை மேல உக்காரச் சொல்லு பாட்டி'' என்றது அழகான மழலையில்.

''யார்டா கண்ணு நீ? உங்கப்பாம்மா உன்னைத் தேடப் போறாங்க'' என்றபடி அர்ச்சனை தட்டை கீழே வைத்து விட்டு, குழந்தையைத் தூக்க முடியாமல் தூக்கியபடி எழுந்து யானை மீது அமர வைத்தாள் சுசீலா.

பதறியபடி, ''அம்ரு, அம்ரு'' என்றழைத்த படி ஒரு பெண் தேடி வர, ''மம்மி... அம்மா... இங்க க்கேன்'' என்று கத்தியது குழந்தை. சுசீலாவிடம் திரும்பி ''என் அம்மா... மம்மி'' என்றது.

தேடிய பெண் இவர்கள் அருகே வர, அதுவரை அஸ்தமிக்கும் சூரிய ஒளியில் சரியாகத் தெரியாமல் இருந்தவளை, நன்றாகப் பார்த்தாள் சுசீலா. அந்தப் பெண்ணும் குழந்தை மீதே கவனமாய் வந்தாள். குழந்தையை அள்ளி வாரி அணைத்துக் கீழே இறக்கி, ''இப்படி அம்மாகிட்ட சொல்லாம தான் வருவியா? தப்பில்லையா? எப்படித் தவிக்கப் போயிட்டேன்'' என்றபடி நிமிர்ந்து ''நன்றிம்மா'' என்றவள் சுசீலாவைப் பார்த்து அதிர்ந்து,

''அ... அத்தை?'' என்று கூவினாள்.

ஆச்சர்யத்தில் உறைந்து நின்ற சுசீலாவும், ''மீனா! சௌக்யமா?'' என்றாள்.

''எப்படி சௌக்யமாய் இருக்க முடியும் அத்தை?!''

தலைகுனிந்து கொண்டாள் சுசீலா.

நெடுநாட்களுக்குப் பின் பார்த்து விட்டு, மனதை ஏன் புண்படுத்த வேண்டும் என்று சட்டென்று பேச்சை மாற்றினாள் மீனா.

''இதுதான் உங்க பேத்தி அம்ருதா.'' என்று மகளைத் தூக்கி அவள் கையில் வைத்தாள்.

''பாட்டி பாரு குட்டி, உன் பாட்டி'' என்றாள்.

பேத்தியைக் கட்டிக் கொண்டு கண்ணீர் விட்டாள் சுசீலா. குழந்தை திமிறிக் கொண்டு, ''ஆனை, ஆனை'' என்று கத்தியது. அதை இறக்கி விட்டு மருமகள் தலையை ஆசையாய் வருடிக் கொடுத்தாள்.

''அ... அவர் சௌக்யமா, அத்தை?''

''ஏதோ இருக்கான்ம்மா. வறட்டுப் பிடிவாதம்.''

''கொஞ்சம் கூட மனசு மாறலியா?''

படியில் அப்படியே உட்கார்ந்து கொண்டாள் சுசீலா. ''எங்கம்மா? நீயும் தான்

> **வி**ல்வ இலைகளை சிறிதளவு ஒரு பாத்திரத்தில் போட்டு அடுப்பிலேற்றி, லேசான சூட்டில் பதமாக வதக்கி தூங்கச் செல்வதற்கு முன்னர் இரண்டு கண்களின் மேலேயும் வைத்து கட்டி, மறுநாள் காலையில் கட்டை அவிழ்த்துவிடவும். இவ்வாறு செய்தால் கண் நமைச்சல் தீரும்.
>
> -சுதா நாகராஜன், தென் [illegible].
>
> **ம**ருதோன்றி இலைகளை ஒரு கைப்பிடி அளவு எடுத்து ஒரு டம்ளர் தண்ணீரில் இரவில் ஊறவைத்து காலையில் எழுந்தவுடன் தண்ணீரை வடித்து தண்ணீர் தொண்டையில் படும்படி மூன்று நான்கு தடவை கொப்பளித்தால் தொண்டைக் கரகரப்பு நீங்கும்.
>
> -ஆர். அஜிதா, கம்பம்.

அவ்வப் போது அவனோட பேச முயற்சி செய்யறேன். அவன் இடம் கொடுத்தாத் தானே''

மாமியார் அருகே உட்கார்ந்து கொண்டாள் மீனா. ''ஆனை, ஆனை'' என்று கத்திய குழந்தையின் கையில் வாழைப் பழத்தைக் கொடுத்தாள். அது அதில் லயித்துப் போனது.

''அன்றைக்கு, அவர் சொல்படி கேட்டிருந்தால், இன்னைக்கு இந்த குழந்தை இல்லை...''

பதறிப் போய் சுசீலா ''ஐயோ, சொல்லாதே'' என்று அவள் வாயைப் பொத்தினாள்.

''எத்தனை அழகாப் பேசுவா தெரியுமா?''

''பார்த்தேனே.''

''ஐயோ அது மட்டும் இல்ல. ஒன் டு டென் சொல்லுவா. அ. ஆ. இ. ஈ சொல்லுவா. குட்டிம்மா இங்க வாடா. சன்டே மன்டே சொல்லு.''

குழந்தை மழலையில் ''சன்டே, மன்டே'' என்று ராகமாய் இழுத்துச் சொல்ல, சுசீலா பூரித்துப் போனாள்.

''இந்தக் குழந்தையைக் கூட இருந்து கொஞ்ச எனக்குக் கொடுப்பினை இல்லையே.''

''குழந்தையை ஒரே ஒரு முறை அவர் பார்த்துட்டாப் போதும். அவரால இவளை விட்டுட முடியாது. அவர் கல்நெஞ்சக்காரர்

இல்ல அத்தை. வயசுக்கு மீறின பாரம் அவரை அழுத்துது''

''என்ன செய்ய!''

''வீட்டுக்குக் கூட்டி வரட்டுமா குழந்தையை?''

''அவன் தான் உன் தலை தெரிஞ்சாலே வீட்டுக்குள்ள நுழைய மாட்டேங்கறானே. அப்புறம் தானே குழந்தையைப் பார்க்கறதெல்லாம்!''

''நான் உள்ளே ஒளிஞ்சுகிட்டு, குழந்தையை பக்கத்து வீட்டுக் குழந்தை மாதிரி கூடத்துல விளையாட விட்டா?''

''நல்லா விளையாடுவான். உண்மையில தன் குழந்தைனு தெரியும் போது இன்னும் உக்கிரமாவான்.''

''அதுவும் சரிதான். கடவுள் வழிகாட்டுவார் அத்தை பார்க்கலாம்.''

''சரி, இப்படியே நம்பிகிட்டு உன் வாழ்வை வீணாக்கிக்கப் போறியா?''

''நம்பிக்கை தானே அத்தை வாழ்க்கை.''

''எனக்கு நம்பிக்கை இல்லம்மா? சொல்றேன்னு தப்பா நினைக்காதே. நீ புருஷன் இல்லாம வாழ்ந்துடலாம். ஆனா, அப்பா இல்லாம, அம்மா இல்லாம குழந்தைகள் வளர்வது கொடுமை. புருஷனைப் பறி கொடுத்துவிட்டு மூணு குழந்தைகளை வளர்த்த கஷ்டம் எனக்குத் தான் தெரியும். அதாவது விதி. அவர் போய்ச் சேர்ந்துட்டார். உன் விஷயம் வேற: திமிரெடுத்து என் மகன் நடத்துக்கறான். அதுக்கு நீயும் உன் மகனும் பலியாகணுமா?''

''நல்ல காலம் பிறக்கும் அத்தை''

''பிறக்கும். எப்படி? இந்தக் காலத்து இளைஞர்கள் பரந்த மனசோட இருக்காங்க. நீ இன்னொரு நல்லவனைப் பார்த்து மறுமணம் செஞ்சுக்கோ. உன் மகனுக்கு நல்ல தகப்பனா தேர்ந்தெடு. அப்பத்தான் உனக்கு நல்ல காலம் பிறக்கும்.''

''அத்தை...'' அலறி விட்டாள் மீனா. ''கோவில்ல வச்சி பேசற பேச்சா இது?''

''தப்பென்னம்மா? நீ திமிரெடுத்து என் மகனை விட்டுப்பிரிஞ்சு போயிருந்தா, நான் இத்தனை நேரம் என் மகனுக்கு மறுகல்யாணம் செஞ்சிருக்க மாட்டேனா?''

''அத்தை, நீங்க ஏதோ விரக்தியில பேசறீங்க. நிம்மதியா கடவுள் பேரைச் சொல்லி, வீட்ல போய் ஓய்வெடுங்க. மன பாரம் குறையும்.''

''என்னவோம்மா. சொல்றதைச் சொல்லிட்டேன். யோசி. உங்கப்பாம்மா கிட்டயும் பேசறேன் கூடிய சீக்கிரம்.''

''இல்ல அத்தை...''

பேசாதே என்பது போல் கை காட்டி நிறுத்திய கவிதா, ''டைம் எடுத்து யோசி. உடனே எந்த பதிலும் சொல்லாதே. என் பிள்ளை சொல்லுக்குக் கட்டுப்பட்டு இதுவரை உன்னை வந்து பார்க்காம இருந்தேன். இனிமேல் இந்த சக்கரைக் கட்டியைப் பார்க்காம என்னால இருக்க முடியாது. அடுத்த வாரம் உன் வீட்டுக்கு வரேன். அப்ப பேசலாம்.''

**வீ**ட்டில் சேகர் ரேடியோ கேட்டபடி படுத்திருந்தான்.

''பிளாஸ்க்குல காபி வச்சிருந்தேன், குடிச்சியா?''

''ம்''

''பிரெட் வாங்கி வந்திருக்கேன். ராத்திரி சாப்பிட்டுப்பாலைக் குடிச்சிட்டுப் படு. மதிய சாதம் கொஞ்சம் இருக்கு நான் கரைச்சுக் குடிச்சுக்கறேன். அவ்வளவு தூரம் போயிட்டு வந்தது தள்ளலை.''

வெறுப்பாய் அம்மாவைத் திரும்பிப் பார்த்தான்.

''பாதி நாள் இந்த பிரெட்டை விட்டா வேற கதி கிடையாதா இந்த வீட்லா நினைச்ச படி ஹோட்டலுக்குப் போக காசு தான் இருக்கா கையில, சே.''

அம்மா அவனருகே சோபாவில் வந்து அமர்ந்து கொண்டாள்.

''இல்லாததை எப்பவுமே பெரிசா எடுத்துக்கற நீ. கையில இருக்கறதைப் பார்க்கறதே இல்லை. வானத்துல பறக்கற ரெண்டு பறவையை விட கையில இருக்கிற ஒரு பறவை மேல்னு உனக்குப் புரியறதில்லை. புரியும் போது ரொம்ப தாமதமா ஆகியிருக்கும்.''

ஏற்கனவே அலுவலகத்தில் சுந்தரம் பேசியிருந்தது மனதை அறுத்துக் கொண்டிருந்தது. அம்மா குத்திக்காட்டுவது போல் பேச, இன்னும் புண்பட்டுப்போனான்.

''புலம்ப ஆரம்பிச்சுட்டியா? இனி மனுஷன் வீட்ல இருக்க முடியாது.''

''ஆமாண்டா, நான் எது சொன்னாலும் புலம்பலாத்தான் தெரியும். நான் போன பிறகு என் அருமை புரியும். பொண்டாட்டியத் துரத்தியாச்சு. அம்மாவையும் மேல்லோகம் அனுப்பிடு. நீ உன் இஷ்டம் போல இரு.''

''என்ன பேசற நீ?''

''பின்ன என்னா? வீட்டுக்கு மருமக வந்த பிறகும் நானே சமையல் அறையைக் கட்டி அழுதுட்டு தலையெழுத்து. எனக்கு வயசு குறைச்சலா? அறுபத்தி ரெண்டாகுது. பிரெட்டானு மூஞ்சிய சுளிக்கற. உன் மனைவியக் கூட்டி வந்து குடித்தனம் பண்ணு. வகை வகையா அவ ஆக்கிப் போட நல்லா தின்னு. அதை எல்லாம் விட்டுட்டு, என் கிட்ட பாயுற?''

''இங்க பாரு, முடிஞ்சா செய். இல்லாட்டி நான் பார்த்துக்கறேன். இதுக்காக அவ கால்ல போய் விழுவேன்னு நினைக்காதே. புரியுதா?''

''நீ போய் கால்ல விழுந்தாலும் அவ வாழுவே. அவளுக்கு வேற வரன் தேடறாங்களாம்.''

விலுக்கென்று எழுந்து உட்கார்ந்தான் சேகர். ஓரக்கண்ணால் மகனின் ரியாக்ஷனை கவனித்துக் கொண்ட கவிதாம்மா மெல்ல எழுந்தாள். பையை மெல்ல எடுத்து நிதானமாக நடந்தபடி மகன் காதில் விழும்படி முணுமுணுத்தாள்.

''கோவில்ல விதேகமையா பேத்தியைப் பார்க்கவாவது எனக்குக் கொடுப்பினை இருந்தது. லட்டு மாதிரி குழந்தை என்ன அழகு! என்ன சுறுசுறுப்பு! என்ன பேச்சு! அப்படி ஒரு குழந்தை வீட்ல தவழவும் கொடுத்து வச்சிருக்கணும். எந்த புண்ணியாத்மாவோ மீனாவுக்கு வாழ்வு கொடுத்து, அந்தப் புதையலை அனுபவிக்கப் போறான். யாரோ என்னவோ, அவன் நல்லா இருக்கட்டும். என் பேத்தியை பெத்த பொண்ணா நடத்தப் போற நல்ல தீவன்...''

அதற்கு மேல் கவிதா பேசியது கேட்கவில்லை.

சமையலறைக்குள் புகுந்து கொண்டிருப்பாள் என்று யூகித்தவன் மெல்ல அம்மாவைப் பின் தொடர்ந்தான்.

''பிரெட் தரியா?'' என்றபடி டைனிங் டேபிளின் அருகே அமர்ந்து கொண்டான். மகன் மனம் தத்தளிப்பது புரிந்தது கவிதாவுக்கு.

கடையிலிருந்த பிரெட்டும் ஜாமும் எடுத்து டேபிள் முன் வைத்த கவிதா, பிரிட்ஜிலிருந்து வெண்ணெய் எடுத்து

## பொம்மையல்ல, பளபளக்கும் பன்றிக்குட்டிகள்!



**நீ**ங்கள் படத்தில் காண்பது பொம்மையல்ல, உண்மையான பன்றிக்குட்டிகள் தான். அமெரிக்காவில் முசோரி பல்கலைக்கழகத்தில் ஒரே பிரசவத்தில் 5 பன்றிக்குட்டிகள் பிறந்தன. இவை 'ஜெல்லி பிஷ் ஜீனில்' இருந்து உருவாக்கப்பட்டதால் மூக்கும் காதுகளும் ஒளி மிருந்து பளபளப்பதுடன் பொம்மை போல் காட்சி அளிக்கின்றன.

இதுபோன்று ஜீனைக் கொண்டு குளோனிங் முறையில் உருவாக்கப்படும் மிருகங்களின் உறுப்புகளை உறுப்புமாற்று அறுவை சிகிச்சை மூலம் மனிதனுக்கு பொருத்தி உயிரைக் காக்க முடியும் என்பதால் இது போன்ற ஆராய்ச்சியில் நிபுணர்கள் ஈடுபட்டு உள்ளனர்.

–எஸ்.மணி, சென்னை.

வைத்தான். உண்மையில் கேள்விப்பட்ட செய்தியில் அவன் பசியெல்லாம் பறந்து போயிருந்தது. ஆனால், அம்மாவிடமிருந்து தாருக்காய் விஷயம் மறக்க, சாப்பிடுவதாக பேர் செய்ய வேண்டி இருந்தது. மென்னியைப் பிடித்த பிரொட்டை தண்ணீர் குடித்து முழுங்கினான். எப்படி ஆரம்பிப்பது என்று மனம் தவித்தது. சுசிலாம்மா மகன் தவிப்பை நன்றாக ரசித்தாள்.

''அம்மா,'' என்று தொண்டையைக் கனைத்துக் கொண்டு மெல்ல ஆரம்பித்தான்.

''என்னடா?''

''ஆபீஸ்ல இன்னைக்கு ஒரு சம்பவம்.''

''ம்''

''பிரவீண்னு ஒரு கலீக். பத்து வருஷமா அவனுக்குக் குழந்தை இல்லை.''

''சரி.''

''ஒரு குழந்தை தத்தெடுக்கலாம்னு முடிவெடுத்திருக்கானாம்''

''நல்ல விஷயம்''

தலையைக் குனிந்து கொண்டு, ''அதுவும் பெண் குழந்தை''

''ரொம்ப நல்ல விஷயம்.''

''சுந்தரம்னு ஒருத்தன். என்ன சொல்றான் தெரியுமா? 'சேகர், பேசாம உன் பெண் குழந்தையை தத்து கொடுத்துடு'னு சொல்றான்...''

''அடி செருப்பால. அந்தக் குழந்தையை அப்பன் வேண்டாம்னு ஒதுக்கிட்டா, அம்மாக்காரி என்ன உயிரோடவா இல்லாம போயிட்டா? அது என்ன அனாதையா? பெத்தவ குழந்தையை என்னமாப் பார்த்துக்கறா! அரசு உத்தியோகம், நல்ல சம்பளம். குழந்தைக்கு பட்டுப்பாவாடை, தங்க செயின், வளையல்னு போட்டு கூட்டி வந்திருந்தா. மீனாவோட அப்பாம்மா குழந்தையை கண்ணுல வச்சு பார்த்துக்கறாங்க. தத்து கொடுக்கணும்மாம். சேகரா, சொல்றேன்னு நினைக்காதே. மரம் வச்சவன் தண்ணி ஊத்துவான். கடவுள் அருளில் குழந்தையை நல்லபடி வளர்க்க முடியும். நீ இப்படியே இருந்தா நாலு பேர் இப்படித்தான் பேசுவாங்க. அதுமட்டுமில்ல, மீனாவுக்கு தானே வேற வரன் பார்த்து கல்யாணம் பேசிடுவேன்... உன் வீம்பை விட்டுட்டு போய் பெண்டாட்டி குழந்தையைக் கூட்டி வந்துடு.''

ஒரே மடக்கில் பாலைக் குடித்து விட்டு சேகர் மௌனமாய் எழுந்து தன் அறைக்குப் போனான். மகன் யோசிக்கட்டும் என்று அந்தத் தாயார் சமையலறையை ஒழித்து விட்டுப் போய் படுத்தாள். மனம் மகனுக்காகவும், கண்ணிலேயே நிற்கும் பேத்திக்காகவும் மருமகளுக்காகவும் இறைவனை இறைஞ்சியது.


ஜெர்மனியில் பவேரியா மலைச் சிகரத்தில் சிலுவை உருவத்தில் மரம் ஒன்று உள்ளது. இங்கு இயேசு நாதரின் சமய நாடகங்கள் இன்றளவும் நடைபெற்று வருகின்றன.

டென்மார்க் நாட்டின் கிறிஸ்துமஸ் விருந்தில் முதல் இடம் வகிப்பது அரிசியில் செய்த உணவுகளே.


## 18



ஒரே மாதிரி தொட்டில்கள் எழெட்டு அந்த அறையில் நிறைந்திருந்தன. பிஞ்சு பிஞ்சாய், பஞ்சாய், பனித்துளியாய் அதில் உயிர்ப் பூக்கள்.

''ங்கா.. ம்மா'' என்று ஏதோ மிழற்றிக் கொண்டு, கைகாலை சைக்கிள் ஓட்டிய படி, ஓ என்று வாய் பிளந்து அழுத படி... குழந்தைகள்.. குழந்தைகள்... குழந்தைகள்!

பிரவீணோடு வந்த சேகருக்கு உடலெல்லாம் பதறியது. பிரவீணும் அவன் மனைவியும் குழந்தையைத் தேர்ந்தெடுப்பதில் தீவிரமாய் ஈடுபட்டிருக்க, சேகர் மெல்ல அடுத்த அறையில் எட்டிப் பார்த்தான்.

தவழ்ந்தும், தத்தித் தத்தி நடந்தும், பந்தின் பின் ஓடியும் கீச் மூச்சென கத்தியபடி ஒரு வயதுக்குப் பக்கமாய், இரண்டு மூன்று வயதுக்குட்பட்ட குழந்தைகள்.

யாரோ பேண்டை பிடித்து இழுப்பது போல் உணர, சேகர் குனிந்து பார்த்தான். சின்னப் பிஞ்சுக் குழந்தை. இரண்டு வயதிருக்கலாம்.

''என்னை உன் வீட்டுக்குக் கூட்டிப் போக வந்திருக்கியா?''



அந்தப் பிஞ்சை அணைத்துக் கொண்டான். கண்களில் நீர் திரண்டது.

'இன்பக் கதைகளெல்லாம் உன் போல் ஏடுகள் சொல்வதுண்டோ' என்ற கவிஞர் வரிகள் மனதில் ஓடி சிலிர்ப்பை ஏற்படுத்தியது. இந்தக் குழந்தைக்கே மனம் இப்படிக் கசிகிறதே, தன் உதிரத்தில் பிறந்த சொந்த மகளைச் சுமந்தால் இந்த மனம் எத்தனைக் குதூகலிக்கும்! அந்தக் குதூகலத்தில் முன் இன்பச் சுமையின் முன், பணச்சுமை ஒரு பெரும் பாரமாகவே இருந்திருக்காதோ? அதை உணராத பாவியாக இத்தனை வருடங்கள் இருந்து விட்டேனா. அம்மா குழந்தையைப் பற்றி அத்தனை சொன்னாளே! அந்த இரவு முழுதும் தூங்க முடியாமல் தவித்தேனே. அம்மா சொன்னது போல் மீனா மறுமணம் புரிந்து கொண்டு விடுவாளா? போகட்டும் என்று இந்த மனம் விட்டுத் தள்ளாமல் வேதனைப் படுகிறதே. ஆத்திரத்தை மீறிய பாசமா? இது தான் காதலா? இந்தக் காதல் மேல் இருந்த நம்பிக்கையாலும் குழந்தைப் பாசத்தாலும் தான் மீனா என்னை ஏமாற்றத் துணிந்தாளா?

''ஏன், என்னை பிடிக்கலையா? உன் வீட்டுக்குக் கூட்டிப் போக மாட்டியா?'' குழந்தை இவன் கன்னம் திருப்பி ஆசையாய் கேட்க, அதற்கு மேல் தாங்காதவனாய் குழந்தையுடன் பிரவீண் பக்கம் ஓடினான்.

''பிரவீண் ரொம்பப் பிஞ்சுக் குழந்தையாத்தான் தத்தெடுக்கப் போறியா? இந்தக் குழந்தையை கொஞ்சம் கன்ஸிடர் பண்ணேன்.''

''ஹை! இது தான் என் அப்பாம்மாவா? என்னை உங்களோட நம்ம வீட்டுக்குக் கூட்டிப் போகப் போறீங்களா?'' குழந்தை கேட்டபடி வில்போல் சேகர் கையிலிருந்து பிரவீண் மனைவி கைக்குத் தாவியது.

முதல் பார்வையிலேயே பிரவீணுக்குக் குழந்தையைப் பிடித்து விட்டது. ஒரு நிமிடம் அசந்து போன அவன் மனைவி, பூப்பந்தாய் தன் கைகளில் தவழும் சிறுமியை அள்ளி அணைத்துக் கொண்டாள். எதிர்பாராமல் குழந்தை அவள் கன்னத்தில் முத்தமிட்டதும் சிலிர்த்துப் போனாள்.

''அன்னைக்கு, ராஜு''வை அவங்கப்பாம்மா கூட்டிப் போனாங்க பாரு, அப்ப நான் அழுதேனா. ஆயா சொல்லிச்ச, உங்கப்பாம்மாவும் வருவாங்கனு.. போகலாமா?''


உலகிலேயே மிகச்சிறிய கிறிஸ்துமஸ் வாழ்த்து அட்டை 1929-ம் ஆண்டு எட்டாம் எட்வர்டு மன்னருக்கு அளிக்கப்பட்ட வாழ்த்து அட்டை தான். ஓர் அரிசியின் மீது இந்த வாழ்த்து பொறிக்கப்பட்டு இருந்தது. பூதக் கண்ணாடியை கொண்டு தான் இந்த எழுத்துக்களை படிக்க முடியும்.

-சித்ரா புகழேந்தி, ஆறுபாதி.


''இது தான் தெய்வ சங்கல்பம் போலிருக்கு. சேகர், என்ன சொல்றே ஜானகி?''

''எனக்கும் ரொம்ப பிடிச்சிருக்குங்க. எப்படி பேசறது குழந்தை! துறுதுறுனு இருக்கே. இவளையே நாம எடுத்துப்போம்.''

'எப்படி பேசறது குழந்தை. துறுதுறுனு இருக்கா. அம்மாவும் என் மகள் பற்றி இப்படித் தானே சொன்னாள். இதே போல் போய் என் மகளை அள்ளி வந்து விடலாமா? அந்த முகத்தை வைத்துக் கொண்டு போவது? மீனு சம்மதிப்பாளா? படி ஏற விடுவாளா? உடன் வருவாளா?' அவன் ஆயாசமாய் பெருமூச்சு விட்டான்.

## 19



இரவு முழுதும் மகள் மனைவி பற்றிய நினைவுப் பின்னலில் சரியாகத் தூங்காதவன், விடிகாலை சற்று அசந்து தூங்கி விட்டான். காலை அவசரமாக எழுந்து அடித்துப் பிடித்துக் கிளம்பும் போது தொலைபேசி அவசரமாய் அழைத்தது.

''ஹலோ, சேகர் ஹியர்.''

''நான் சாரதா.. ம், மீனாவோட பிரெண்ட்.. ஆபீஸ்ல ஒண்ணா வேலை செய்யறோம்.''

''தெரியுமே.''

''டி.வி. நியூஸ் பார்த்தீங்களா நீங்க?'' அவள் குரல் ஒலித்த விதம் அவனுள் பீதியைக் கிளப்பியது.

''இல்ல. இன்னைக்குக் கொஞ்சம் லேட்டா எழுந்துட்டேன். பார்க்கலை. அவசரமா ஆபீஸ் கிளம்பிட்டு இருக்கேன்.''



"கோவையிலிருந்து வந்த டிரெய்ன்ல குண்டு வெடிச்சு, ரெண்டு பெட்டி கருகிடுச்சு. சென்ட்ரல் பக்கம் வரும் போது விபத்து நடந்திருக்கு."

அவனுக்கு சற்று கோபம் வந்தது. விஷயத்தைச் சொல்லாமல் என்ன இவள் ரயில் விபத்து பற்றி பேசிக் கொண்டிருக்கிறாளே. கடுப்பாய், "இப்ப அதுக்கு என்ன?" என்றான்.

"டி.வி. பிளாஷ் நியூஸ்ல தான் காட்டறாங்க. விபரம் முழுசாத் தெரியலை. அதுல தான்.. நம்ம மீனு குடும்பத்தோட இன்னைக்கு சென்னை திரும்பறா, ஊருக்கும் போயிருந்தா. நீங்க அவளோட வாழ்றதும் தெரியும். வேற யாருக்கு இன்பாரம் பண்றதுன்னு தெரியலை. அதான் உங்களுக்கே.."

அவள் கடைசியாய் பேசிய எதுவும் காதில் விழாமல் தொலைபேசி ரிசீவர் கை நழுவியது.

காட்சியே கோரமாய் இருந்தது. பிணக்குவியல் எங்கும்... கை வேறு கால் வேறாய், கருகி, முகம் நசுங்கி... அடிவயிற்றிலிருந்து ஓலம் 'ஐயோ' என்று எழுந்தது. ஏன் இந்தக் கொடூரம்? ஏன் இந்தப் பாதகம்? யாருடன் யாருக்குச் சண்டை? இந்த செல உயிர்கள்- அப்பாவி உயிர்கள் பலியாவதால் குண்டு வைத்தவர் காரியம் நிறைவேறிடுமா? நரபலி கொடுக்கும் காட்டுமிராண்டிகளுக்கும் இவர்களுக்கும் என்ன வித்தியாசம்?

அடி வயிறு கலங்கி வாந்தி வரும் போல இருந்தது. சேகர் பைத்தியக்காரன் போல் இங்கும் அங்கும் சுற்றினான். சுசீலா தலையைப் பிடித்துக் கொண்டு ஒரு ஓரமாய் அமர்ந்து விட்டாள்.

ஒவ்வொரு பிணத்தின் அருகே சென்று சேகர் எட்டிப் பார்த்தான்.

'கடவுளே இதில் என் மீனா இருக்கக் கூடாது. ஐயோ.. இது அவள் பெற்றோர் போல இருக்கிறதே. இது அவளா? குழந்தை.. ஐயோ.. என் குழந்தை. எனக்கு என் குழந்தையை அடையாளம் கூடத் தெரியாதே. பெயர் சொல்லி அழ பெயர் கூடத்தெரியாதே என்ன பாவி நான். இறந்த பின் தான் இறந்தவரின் மதிப்பு புரிகிறது. ஐயோ, என்ன செய்வேன்? மீனா காலில் விழுந்தாவது குழந்தையையும் அவளையும் கூட்டி வந்துவிடலாம் என்று எந்த நேரத்தில் முடிவெடுத்தேன். ஐயோ, என் பாவத்திற்கு கடவுள் இப்படியா தண்டிக்க வேண்டும்? இருந்தும் சமயம் தண்டிக்கிறாரோ என் பாவத்துக்கு மன்னிப்பே இல்லையா?'

கதறிக் கதறி அழுதபடி பைத்தியம் போல் ஓடும் அவனை பயர் பரிதாபத்தோடு தங்கள் துக்கத்தைக் கூட மறந்து பார்த்தார்கள்.

"மிஸ்டர் சேகர்."

ஒரு பிணத்தின் அருகே குனிந்து பார்த்துக் கொண்டிருந்த அவன் சட்டென்று திரும்பினான்.

"நான் தான் உங்களுக்கு போன் செஞ்ச சாரதா. உங்ககிட்டயிருந்து எந்த பதிலும் இல்லாததால் நீங்க வரீங்களோ இல்லையோன்னு நானே வந்தேன். இங்க நீங்க என்னடான்னா இப்படி அழுதுகிட்டு.. இவ்வளவு அன்பை மனசுல வச்சுகிட்டா அப்படி நடந்துகிட்டீங்க?"

"ரெண்டு வருஷம் என் மனைவியையும் குழந்தையையும் ஒதுக்கி வச்சேன். அவங்க ஆயுசுக்கும் என்னை ஒதுக்கிட்டு போயே போயிட்டாங்க. சாரதா, இதை நான் எப்படித் தாங்குவேன். இது வெறும் துயரம் இல்ல, சாரதா. தண்டனை சேர்ந்த துக்கம். எப்படி நான் தாங்குவேன்?"

சட்டென்று சிரித்தாள் சாரதா. மென்மையாய் அவனை பார்த்து, "இல்ல. உங்களுக்கு தண்டனையும் இல்ல துயரமும் இல்ல. தப்பை உணர்ந்தவுடனேயே மனிதன் மன்னிக்கப்படறான். கடவுள் உங்களை மன்னிச்சுட்டார். கொஞ்சம் திரும்பிப் பாருங்க."

அவள் கண்களில் நீருடன் திரும்பிப் பார்க்க மசமசவென்று குழந்தையுடன் நிற்கும் மீனாவும், அவள் பின்னே அவள் பெற்றோரும் தெரிந்தார்கள். பிளாட்பாரம் பக்கம் நின்ற அவர்களை நோக்கி ஓடினான். சாரதா தொடர்ந்தாள்.

சற்றுத் தொலைவில் அமர்ந்திருந்த கலியாம்மாள் தள்ளாடியபடி ஓடி வந்து சேர்ந்து கொண்டாள்.

''என் கண்ணே, உயிரோட இருக்கியாம்மா. என் வயத்துல பாலை வார்த்தியே. என் பேத்திய என் கையில கொடு'' வாங்கி கண்ணீருடன் முத்த மழை பொழிந்தாள்.

மசமசத்த கண்களைத் துடைத்துக் கொண்டு நன்றாகப் பார்த்தான் சேகர்.

புன்சிரிப்புடன் அவன் மனைவி, அவள் பெற்றோர், சின்ன பூச்செண்டாய் அம்மாவின் கரத்தில் மகள்...

ஆசையாய் மகளை வாங்கி வாரி அணைக்க உள்ளம் ஏங்கியது. 'உனக்கு அந்த யோக்யதை கூட உண்டா?' என்று உள்மனம் இடித்துக் காட்ட தலை குனிந்து கொண்டான்.

''அதிர்ஷ்டவசமாய் எங்க பெட்டி எந்த சேதாரமும் இல்லாம தப்பிச்சது'' என்று மீனாவின் அப்பா சாரதாவிடம் ஆரம்பித்தார். ''வாங்க அப்படித் தள்ளிப் போய் நின்னு பேசலாம்.'' எல்லோரும் சற்று தள்ளிப்போய் மர நிழலில் நின்றார்கள்.

குழந்தையை அவன் ஏக்கமாய்ப் பார்க்க, ''வாங்கிக்கோடா'' என்று அம்மா நீட்ட, அவன் கைகள் நடுங்கின. பாய்ந்து அவன் கழுத்தைக் கட்டிக் கொண்ட குழந்தை, நீர் வழியும் அவன் கன்னத்தில் முத்தமிட்டு, ''அப்பா'' என்றது.

அந்த ஒரு சொல்லில் அவன் உடல் முழுவதும் அதிர்ந்தது. ரத்தமெல்லாம் புத்துயிர் பெற்றது. சில்லென்ற கடற்கரைத் தென்றல் மோதியது போல் சிலிர்த்தான். கூடை நிறைய மல்லிகை பூவை கொட்டியது போல் பரவசம் ஏற்பட்டது.

''நா... நான் உன் அப்பானு...உனக்கு எப்படி...''

''தெரியுமே.. போட்டோல பார்த்திருக்கேனே. உங்களுக்கு ஆபீஸ்ல நிறைய வேலை. அதான் என்னைப் பார்க்க வரலைனு அம்மா சொன்னாங்க. வேலையெல்லாம் முடிஞ்சதாப்பா?''

மனதில் வலி தைக்க, ஆயாசமாய் கண் மூடினான். பின் மெல்ல சொன்னான்.

**வெள்ளைத் துணிகளுக்கு மட்டும் நீலம் போடாமல் கறுப்பு மற்றும் அடர் நீலக் கலர் துணிகளுக்கும் போட்டால் நிறம் மங்காமல் நீண்ட நாட்களுக்குப் பளிச்சென்றிருக்கும்.**

**-சி. விஜி, வேலூர்.**

''முடிஞ்சதும்மா'' மனைவியைப் பார்த்தான்.

''இனிமே, என் கூடவேதான் இருப்பீங்களாப்பா?''

அவன் பதில் சொல்லாது மௌனம் சாதிக்க, குழந்தை மீண்டும், ''சொல்லுங்கப்பா'' என்றது.

''சொல்லேன்டா'' என்று கலியா அதட்டினாள்.

''அதை நான் எப்படிம்மா சொல்ல முடியும்? மீனா தானே சொல்லணும். குற்றவாளியா அவ முன்னாடி நிக்கறேன். என்ன தீர்ப்பு சொல்லப்போறா? வேற ஒரு நல்லவருக்கு அவ வாழ்க்கைப்பட்டாலும் நான் சந்தோஷமே படுவேன். எனக்கு என்ன அருகதை இருக்கு?''

''சேகர்...'' மீனா அலறினாள்.

''இரும்மா. அந்தக் குழப்பத்துக்கு நான் தான் காரணம். உனக்கு வேற கல்யாணம் செய்யப் போறதா சொன்னா, இந்த மரமண்டைக்கு ஏதாவது உறைக்கும்னு அப்படி சொன்னேன். நான் சொன்னதும் ஒரு வகையில இப்ப உண்மைதான். சேகர், இப்ப புது மனுஷனா ஆயிட்டான். இந்தப் புதுக்கணவனுடன் குடுத்தனம் பண்ண உனக்குச் சம்மதமா?''

குழந்தை என்ன புரிந்து கொண்டதோ என்னவோ. ''ஹைய்யா... அப்பாவுக்கும் அம்மாவுக்கும் கல்யாணமா?'' என்று கை கொட்டி சிரித்தது.

சேகர் அருகே போய் நின்று, அவன் முகத்தை அப்படியும் இப்படியும் திருப்பிப் பார்த்த மீனா, ''புது மாப்பிள்ளை பரவாயில்லை. ப்ச, அட்ஜஸ்ட் பண்ணிக்கறேன்'' என்று சீரியசாய் முகத்தை வைத்துக் கொண்டு கிண்டலாய்ச் சொல்ல, துயர சுற்றுப்புறத்தையும் மறந்து எல்லோரும் கொல் என்று சிரித்தார்கள்.

வானில் இரண்டு பறவைகள் உல்லாசமாய் பறந்து கொண்டிருந்தன.

★★ [முற்றும்] ★★